இலக்கியத்தில் வேளாண்மை

இல வச. கந்தசாமி

தஞ்சாவூர்.

T. 14194

இலக்கியத்தில் வேளாண்மை

இல. செ. கந்தசாமி
தமிழ்ப்பேராசிரியர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641 003

வெளியீடு
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்
1981

நூலின் பெயர் :	இலக்கியத்தில் வேளாண்மை
பொருள் :	இலக்கிய ஆய்வு
ஆசிரியர்:	இலக்கபுரம் செங்கோட்டுவேல் கந்தசாமி
பிறந்த நாள் :	24--12-1939
மொழி :	தமிழ்
பதிப்பு :	இரண்டாம் பதிப்பு, அக் 1981 (முதற் பதிப்பு மே 27, 1978)
வெளியிட்ட நாள் :	மே 27, 1978
உரிமை :	ஆசிரியருக்கு
பயன்படுத்தப்பட்ட தாள்:	14.2 கிலோ.
நூலின் அளவு :	20x13 செ மீ
அச்சின் அளவு :	புள்ளி 10, 12, 18
பக்கங்கள் :	142
அச்சிட்ட படிகள் :	1000
அச்சிட்டோர் :	அமைதி அச்சகம் வடகோவை கோயம்புத்தூர்-641002.
விலை :	ரூ 10-00
வெளியீட்டாளர் :	கலைச்செல்வம் பதிப்பகம், 10/140, சாஸ்திரி தெரு, பாப்பநாயக்கன்புதூர், கோயம்புத்தூர்-641 041.

அரசு மலிவு விலைத்-தாளில் அச்சிடப்பெற்றது

அணிந்துரை

தமிழ் மொழி மிகவும் பழமை வாய்ந்தது. அதன் இலக்கியங்கள் புகழ்பெற்றவை. மக்களது வாழ்க்கையினை விளக்கும் இலக்கியங்களில் பண்டைக்காலம் தொட்டு அவர்கள் மேற்கொண்ட வாழ்க்கைமுறைகளைப் பல புலவர்கள் தெளிவாகப் படைத்துள்ளார்கள்.

நமது நாட்டின் முதன்மை வாய்ந்த தொழிலாக இருப்பது வேளாண்மை. பழங்காலத்திலிருந்தே நூற்றுக்கு எண்பதுக்கும் மேற்பட்ட மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். அவர்கள் பயிர்த்தொழிலைச் செய்த முறை, அவர்கள் காலத்தில் இருந்த தொழில் நுணுக்கங்கள், அதற்கான வாய்ப்புக்கள் ஆகியவை தமிழ் இலக்கியங்களிலும், வழிவழியாக வந்த பழமொழிகள், நாட்டுப்பாடல்கள் ஆகியவற்றிலும் காணப்படுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தமிழ்த் துறை ஒன்றினை உருவாக்கி, தமிழ் இலக்கியங்களில் உள்ள வேளாண்மைக் கருத்துக்களை வெளிக்கொணரவும், புதிய வேளாண்மை இலக்கியங்களைப் படைக்கவும் இன்றைய அறிவியல் கருத்துக்களை உழவர் பெருமக்களுக்கு எளிய தமிழில் எடுத்துரைக்கும் வழிவகைகளை ஆராயவும் ஆன பணியினை மேற்கொண்டுள்ளது.

இவ்வகையில் தமிழ் இலக்கியங்களில் உள்ள வேளாண்மைக் கருத்துக்கள் ஆராயப்பட்டு, 'இலக்கியத்தில் வேளாண்மை' என்ற நூலாக வெளியிடப்படுகின்றது. இந்நூலுள் இளம் வயதில், பள்ளிப் பருவத்தில் கற்றுக்கொடுத்த 'பூமி திருத்தி உண்', 'நெற்பயிர் விளை' என்பன போன்ற கருத்துக்களும் ஆராயப்பட்டுள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும்.

இன்றைய உலகம் அறிவியல் உலகம். அறிவியல் கருத்துக்கள் நாளும் வளர்ந்து வியத்தகு சாதனைகளைப் புரிந்து வருகின்றன. இவ்வுலகப் போக்கிற்கு நம்மையும் நாம் தயார் செய்துகொள்ள வேண்டுமானால் பழமை இலக்கியங்களில்

புதைந்து கிடக்கும் பல்வேறு கருத்துக்களை வெளிக்கொணர வேண்டும். அதற்கு இத்தகைய நூல்கள் பல வெளிவர வேண்டியது இன்றியமையாததாகும்.

மொழியை இலக்கிய வளர்ச்சிக்கு மட்டும் பயன் படுத்தாமல் அறிவியல் வளர்ச்சிக்கும் பயன்படுத்த மொழி அறிஞர்கள் முன்வர வேண்டும். பழைய இலக்கியங்களில் இருக்கும் தொழில், அறிவியல் சிந்தனைகளை வெளிக் கொணர்ந்து இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மொழியை எளிமைப்படுத்த வேண்டும். அத்தகைய முயற்-சிக்கு 'இலக்கியத்தில் வேளாண்மை' என்ற இந் நூல் முன் மாதிரியாக அமையும் என்று நம்புகிறேன்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 'திருக்-குறளில் வேளாண்மை', 'வேளாண்மையும் பண்பாடும்' ஆகிய இரு நூல்களை முன்னர் வெளியிட்டுள்ளது. அந்த வரிசையில் 'இலக்கியத்தில் வேளாண்மை' என்ற இந்த நூலை, அனைத்து இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களின் பத்தாவது கருத்தரங்கு நடைபெறும் இத் தருணத்தில் வெளியிடுவதில் பெருமையடைகின்றது.

இந் நூலை எழுதிய தமிழ்ப் பேராசிரியர் திரு. இல. செ. கந்தசாமி அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இதனை வேளாண் பெருங்குடி மக்களும் மாணவர்களும் ஏனையோரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

கோயமுத்தூர்
26—5—1978

கோ. அரங்கசாமி
துணைவேந்தர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

ஆய்வுரை

திருச்சிற்றம்பலம்

'மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும்
நீரைப்பாய்ச்சி
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே'

—திருநாவுக்கரசர்

'இலக்கியத்தில் வேளாண்மை' என்னும் இந்நூலைத் திரு. இல. செ. கந்தசாமி அவர்கள் பெரிதும் முயன்று எழுதி உள்ளார். தொல்காப்பியம் முதல் நாட்டுப்பாடல்கள் வரை பல தலைப்புக்களில் பல விதமாக ஆய்ந்து தம் கருத்துக்களை நிலை நாட்டி உள்ளார். தொல்காப்பியம் என்ற தலைப்பில் நிலப் பாகுபாடு, பருவங்கள், நீர்நிலைகள் போன்ற தலைப்புக்களில் எடுத்துக்கொண்ட செய்திகளை நன்றாக ஆய்ந்துள்ளார். நூற்போக்கில் சிலவற்றை மட்டும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

தொல்காப்பிய உரைகளில் வேளாண்மைபற்றிய பல செய்திகள் உள்ளன. செயற்கைப் பொருளை ஆக்கமோடு சேர்த்துக் கூறவேண்டும். அவ்வாக்கத்தைக் காரணத்திற்குப்பின் கூற வேண்டும் என்பது இலக்கண மரபு. இதனைத்தொல் காப்பியர்,

'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்'
'ஆக்கந்தானே காரண முதற்றே'

என்ற இரு நூற்பாக்களால் கூறிப் போந்தார். 'எருப்பெய்து இளங்களைகட்டு நீர்கால் யாத்தமையால் பைங்கூழ் நல்லவாயின என்று உரையாசிரியர்கள் அனைவரும் உதாரணம் காட்டியுள்ளனர். பயிர் நன்றாக வளரவேண்டுமானால் எருப்போட வேண்டும். இளம்பயிரிலேயே களை எடுக்கவேண்டும், தவறாது நீர் பாய்ச்ச வேண்டும் என்ற உண்மை இலக்கண உரையாசிரியர்களால் எவ்வளவு அழகாகக் கூறப்பட்டுள்ளது? திருவள்ளுவரும்,

'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

என வேளாண்மைக்கு வேண்டியவற்றை வகைப்படுத்தியுள்ளார். 'உழுதல், எருப்பெய்தல், களைகட்டல், நீர்கால்யாத்தல், காத்தல் என்று இம்முறயாக இவ்வைந்தும், வேண்டும் என்பதாம்

என்று பரிமேலழகரும் சிறப்பாக விரிவுரை செய்துள்ளார். ஆசிரியர் இவற்றைத் தற்கால நோக்கில் ஆய்ந்துள்ளார்.

கச்சியப்ப முனிவர் தாம் பாடிய திருவானைக்கா புராணம், பேரூர்ப் புராணம், தணிகைப் புராணம் முதலிய நூல்களில் வேளாண்மையைப் பல இடங்களில் பலவாறாகப் பாடியுள்ளார். திருவள்ளுவரும் பரிமேலழகரும் கூறிய கருத்துக்களைத் தக்க இடத்தில் பொருட்சிறப்பும் கற்பனை வளமும் பொருந்தப் பாடியுள்ளார்.

'ஏரினும் சிறப்பென்று எருப்பெய்தபின்
சீரிதென்று களைபடச் செப்பினார்
நீரினும் சிறப்பா நெடுங்காவலென்று
ஆரினும் சிறப்பெய்த அளிப்பவர்'

என்பது கச்சியப்ப முனிவரின் வாக்காகும்.

ஏர்உழுதல், எருப்பெய்தல், களை எடுத்தல், நீர் பாய்ச்சல். காவல் செய்தல் என்ற ஐந்தும் வேளாண்மைக்குத் தேவையானவை. அவற்றிலும் ஒன்றுக்கொன்று உயர்ந்தது எனக் கச்சியப்ப முனிவர் கூறிய முறை வியத்தற்குரியது. தற்போது மருந்தடித்தல் புழுப் பூச்சிகளை அழித்தல், முதலியனவும் அடங்குமாறு காத்தல் என நம் முன்னோர் கூறிய திறம் சிறப்புடைத்தன்றோ?

இத்தகைய செய்திகள் பல தமிழ் நூல்களில் உள்ளன. ஆசிரியர் விரிவஞ்சி சிலவற்றை மட்டும் எடுத்து விளக்கி உள்ளார் சங்க இலக்கியம் என்ற பகுதியில்,

'நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே'

என்ற புறநானூற்றுப் பாடலை எடுத்துக்கொண்டு சிறப்பாக ஆய்ந்துள்ளார். பதினெண்கீழ்க்கணக்கு என்ற பகுதியில் உழவுத் தொழிலைப் பற்றிய செய்திகளை நன்றாக ஆய்ந்து தொகுத்துள்ளார்.

பக்திச்சுவை நனிச்சொட்டச் சொட்டத் தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமான் வேளாளர் மரபினர். பலவிடங்களில் வேளாண்மைத் தொழிலின் மேன்மையைப் பாடி உள்ளார். அறுபான் மும்மை நாயன்மார் வரலாற்றைக் கூறும் பெரிய புராணத்திற்குக் கொற்றவன்குடி உமாபதிசிவம் அவர்கள் பாடிய சேக்கிழார் புராணம் என்ற நூல் சிறந்த திறனாய்வு நூலாகும். நாயன்மார் மரபு முறையைச் சேக்கிழார் பாடியதை வைத்துக் கொண்டு உமாபதிசிவம் யார் யார் என்னென்ன மரபினர் எனக் கணக்கிட்டுப் பாடியுள்ளார்.

இவர்களில் வேளாளர் பதின் மூவரையும் ஏனைப் பல ரையும் பெயர் கூறி வியந்து பாடியுள்ளார். இந்நூலாசிரியர் கந்தசாமி அவற்றைப் பல ஆய்வு நூல்களின் துணையுடன் வேளாண் பெருமக்கள் என்ற தலைப்பில் ஆய்ந்து எழுதியுள்ளார் பெரிய புராணம் என்ற பகுதியில் இத்தகையன பல உள்ளன. இன்னும் ஆயவேண்டியன பல உள.

கம்பர் நாட்டுப் படலத்தில், பிற படலங்களில் உழவுத்-தொழிலின் உயர்வை உளமுவந்து பாராட்டியுள்ளார். மருத நிலப்பயிர்கள், கால்நடைகள், சமுதாய இயல் போன்ற தலைப்பில் சிறப்பான ஆய்வுக் கருத்துக்கள் மிளிர்கின்றன. நாட்டுப் பாடல்களில் வேளாண்மையே சிறப்பிடம் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. நாட்டுப்புறப் பாடல்கள் தற்கால ஆராய்ச்சியில் சிறப்பிடம் பெற்றுள்ளன. நாட்டுப்புறப்பாடல்களில் ஆசிரியர்க்குள்ள ஈடுபாடு கட்டுரையின் வாயிலாகப் புலனாகின்றது.

ஔவையார்தம் ஆத்திசூடியை அறியாதார் யாரும் இலர். பூமி 'திருத்தியுண்'- என்ற தொடர் எவ்வளவு ஆழமான பொருளுடையது. 'நெற்பயிர் விளை'- என்ற தொடரும் நமக்குத் தெரிந்ததே. எனினும் ஆசிரியர் இவற்றையெல்லாம் தொடர்புபடுத்தி ஆய்ந்தமுறை பாராட்டுதற்குரியது.

வேளாள புராணம் ஏர்ப்படலம், களம் முதல் கழனி வரை உழவர் கடைப்பிடிக்கும் நெறிமுறைகளைக்கூறுவது. இவற்றையெல்லாம் நன்கு ஆய்ந்து இந்நூலை உருவாக்கியுள்ளார், நமது பாராட்டுக்குரிய பேராசிரியர். இல.செ. கந்தசாமி அவர்கள். இவர் நுண்மாண் நுழைபுலம் மிக்க சிந்தனைச் செல்வர்; சொல்லேருழவர், இந் நூலைப் போன்ற பல ஆய்வு நூல்கள்' விளக்க உரைகள் வெளிவருமாயின் நாட்டில் உழவுச் செல்வம் உயர்வடையும். அறநெறி இலக்கியங்கள் மட்டுமின்றி அருள்நெறி இலக்கியங்களும் உழவை மையமாக வைத்து வளர்ந்து வழி காட்டியுள்ளன. நூலாசிரியர் முயற்சியைப் பெரிதும் பாராட்டு கிறோம். இவரது இலக்கியப் பணி மேலும் வளர வாழ்த்து கின்றோம்.

அஞ்சக்கரம் எனும் கோடாலி கொண்டு இந்த ஐம்புலனும்
வஞ்சப்புலக்காட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச் சதாசிவம் என்கின்ற வித்தை நட்டுப்
புஞ்சக்களை பறித்தேன், வளர்த்தேன் சிவபோகத்தையே
-பட்டினத்தார்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
முதல்வர், த. சா.அ. தமிழ்க்கல்லூரி
பேரூர், கோயமுத்தூர்-641010

26-5-78

முன்னுரை

தமிழர் நாகரிகமும் பண்பாடும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டவை. அவர்தம் பண்பாட்டுக் கூறுகளின் வளர்ச்சிப் போக்கினை அறிய தமிழ் இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. அன்றியும், தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வேளாண்மைக் கருத்துக் களை ஆராய்வது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் பணிகளுள் ஒன்றாகவும் அமைந் துள்ளது. இவ்வடிப்படையில் 'திருக்குறளில்வேளாண்மை' 'வேளாண்மையும் பண்பாடும்' என்ற இரண்டு நூல்களை இப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இப்பணியின் தொடர்ச்சியாக சங்க இலக்கியம் தொடங்கி இந்நாளைய இலக்கியம் வரை இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடை பெற்று வருகின்றது.

அனைத்து இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் பத்தாவது கருத்தரங்கை வேளாண்மைப் பல்கலைக்கழகம் நடத்த முன்வந்தபோது, இம்மாநாட்டை ஒட்டி, வேளாண்மை இலக்கிய நூல் ஒன்று வெளியிடலாம் என்று துணைவேந்தர் அவர்கள் வெளியிட்ட கருத்தே, இந்நூல் உருப்பெறுவதற்குக் காரணமாய் அமைந்தது.

'இலக்கியத்தில் வேளாண்மை' எனும் இந்நூலுள் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வேளாண்மைக் கருத்துக்களைத் தொகுத்து, இந்நாளைய வேளாண்மை அறிவியல் பாகுபாட்டின் அடிப்படையில் பாகுபடுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் என்ற தலைப்பில் தொல்காப்பியத் தில் காணப்படும் வேளாண்மைச் சொற்களின் தொகுப்புக் குரிய விளக்கமே இடம் பெறுகிறது. சங்க இலக்கியம், திருக்குறள் ஆகிய இரு பிரிவுகளில் வேளாண்மைக் கருத்துக் கள் இந்நாளைய அறிவியல் பாகுபாட்டுடன் ஒப்புநோக்கி ஆராயப்பட்டுள்ளது. அறக் கருத்துக்களைக் கூறவே

வேளாண்மைக் குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதை பதினெண்கீழ்க்கணக்கு என்ற தலைப்பில் காணலாம்.

பெரியபுராணம், கம்பராமாயணம் ஆகிய இருபகுதிகளும் அக்காலத்திய தமிழக வேளாண்மையை ஓரளவு அறியத் துணைபுரிகின்றன. நாட்டுப்புறப் பாடல் என்ற இயல் பாமர மக்கள் உழவுத் தொழிலோடு தங்களை எந்த அளவிற்கு ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை அறிய உதவுகின்றது. ஆத்திசூடி என்ற ஆய்வு வேளாண்மையில் ஏற்பட்ட தொய்வை மாற்றி அமைக்க ஔவையார் மேற்கொண்ட தொலைநோக்கு எண்ணங்களை வெளியிடுகின்றது.

முக்கூடற் பள்ளு என்ற பகுதி உழவுத்தொழில் செய்ய என 'ஒரு பிரிவு' தனித்து நின்றதையும், பள்ளு நூல்கள் 'வேளாண்மை இலக்கியமாக மலர்ந்ததையும்' ஆராய்கின்றது, பாரதி-பாரதிதாசன் என்ற பகுதி சமுதாய நோக்கில் உழவர்கள் நிலைபற்றிய இந்நாளைய கருத்துக்களை வெளிப்படுத்துகின்றது. பழமொழி என்ற பகுதி காலங்காலமாக வழங்கி வருகின்ற வேளாண்மை மரபுகளைத் தொகுத்து விளக்கி உரைக்கின்றது,

காலச் சுருக்கம் கருதியும் வேளாண்மைக் கருத்துக்கள் வெவ்வேறு தலைப்புகளில் ஆராயப்பட்டு வருவதாலும் நூலின் உருவமும் உள்ளடக்கமும் வரையறைக்கு உட்படுத்தப்பட்டது. மேலும், சிலம்பு, ஏர் எழுபது போன்ற நூல்களின் கருத்துக்கள் முன்னர் வெளியான நூல்களுள் இடம் பெற்று விட்டதாலும் கால வரிசையில் பல நூல்கள், இந்நூலுள் இடம் பெறவில்லை,

இவ்வகையில் தமிழக வேளாண்மை மரபுகளை ஆராய்ந்து அறிந்து கொள்ள இந்நூல் ஒரு முன்னோட்டமாக அமைகின்றது. வேளாண்மை அறிவியல் வளர்ந்து விட்ட இந்நாளில் கால வரிசையில், நமது நிலை என்ன என்பதை அறிந்து, நாம் கடந்து செல்ல வேண்டிய தொலைவு எவ்வளவு என்பதை எண்ணிப்பார்க்க இந்நூல் ஒரு தூண்டுகோலாக அமையுமாயின் அதுவே இந்நூலின் பண்பும் பயனுமாகும்.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிச் சிறப்பித்த துணைவேந்தர் **டாக்டர் கோ. அரங்கசாமி** அவர்களுக்கும் இந்நூலுக்கு ஆய்வுரை நல்கிய **தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்** அவர்களுக்கும் எனது நன்றி

யும் வணக்கமும் உரியதாகும். இந்நூலைப் பல்கலைக்கழக வெளியீடாக்கிய வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூலினை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுக் கொள்ள அனுமதி அளித்த அற்றல்மிகு துணை வேந்தர் திரு. **அ. வேங்கடராமன்** இ. அ. ப. அவர்கட்கு எனது நன்றியறிதலை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

கோவை-3
25-10-1981

அன்புடன்
இல செ கந்தசாமி

பொருளடக்கம்

அணிந்துரை

ஆய்வுரை

முன்னுரை

இலக்கியத்தில் வேளாண்மை ... 9

1. தொல்காப்பியம் ... 20
2. சங்க இலக்கியம் ... 28
3. திருக்குறள் ... 39
4. பதினெண்கீழ்க்கணக்கு ... 54
5. பெரியபுராணம் ... 63
6. கம்பராமாயணம் ... 72
7. முக்கூடற் பள்ளு ... 81
8. ஆத்திசூடி ... 90
9. பாரதி-பாரதிதாசன் ... 100
10. பழமொழிகள் ... 114
11. நாட்டுப்புறப் பாடல் ... 128

1. இலக்கியத்தில் வேளாண்மை

இலக்கியங்கள் மக்கட்கு இன்பம் நல்குவன; குறிக்கோளைத் தருவன; அவ் விலக்கியங்கள் காலத்திற்குக் காலம் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதியன புகுத்தியும் பழையன கழித்தும் வருகின்றன. அவை உருவத்தில் உதிரிப்பாடல்களாகவும் நெடும் பாடல்களாகவும் சிறுசிறு இலக்கியங்களாகவும் காவியங்களாகவும் உரைநடைகளாகவும் சிறுகதைகளாகவும் நெடுங்கதைகளாகவும் இன்றைய புதுக் கவிதைகளாகவும் வளர்ந்துள்ளன. அன்றியும் இலக்கியங்கள் இயற்கையைப் பற்றியும் அறத்தைப் பற்றியும் அருளைப் பற்றியும் நாட்டுத்தலைவர்களைப் பற்றியும் சமுதாயம் பற்றியும் அரசியல் விடுதலை பற்றியும் உள்ளடக்கத்திலும் காலத்திற்குக் காலம் தன் கருத்துக்களை மாற்றிக் கொண்டே வந்துள்ளன. இலக்கிய உலகை மேலெழுந்த வாரியாக நோக்கு வோர்க்கும் இக்கருத்து தெளிவாவது உண்மை. இஃது எம்மொழி இலக்கியத்திலும் அமைந்துள்ள பொதுத் தன்மையாகும்.

தமிழ் இலக்கியம்

தமிழ் இலக்கியங்கள் தொன்மைச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் வாய்ந்தவை. காலத்திற்குக் காலம் மாற்றமும் வளர்ச்சியும் பெற்று விளங்குபவை. அவ்வக்கால மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கும் வாழ்வியல் பேரேடு களாக விளங்குபவை எந்நாட்டில் தோன்றிய எக்காலத்து மக் களும் கொள்ள வேண்டுவன இவை, தள்ள வேண்டுவன இவை என்பனவாகிய அறக்கருத்துக்களை எடுத்துக் கூறுபவை. உல கினை ஒன்று படுத்த முயலும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையை விளக்குபவை. மனித சமுதாயத்தின் உயர்ந்த ஏன், முடிவான குறிகோளாகிய 'யாதும்ஊரே யாவரும் கேளிர்' என்ற நிலையினை அடையத் தூண்டுபவை.

இலக்கியப் பரப்பு

இத்தகு தமிழ் இலக்கியங்களின் பரப்பு பரந்து விரிந்த ஒன்று. அவற்றின் உயிரான கருத்துக்கள் அறத்தை வலியுறுத்துவதே ஆயினும் காலத்திற்கேற்ப பல்வேறு கருத்துகளைத் தாங்கிய கருவூலங்களாகவும் அவை மிளிர்கின்றன.

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகிய சங்க இலக்கியங்கள் இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்டவை. தமிழ் மக்களின் இயற்கையோடு இயைந்த சமுதாய வாழ்வினை எடுத்து இயம்புபவை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் நீதிநெறியைப் பாடு பாருளாகக் கொண்டவை. சிலம்பும் மேகலையும் காப்பியங்களாக உருப்பெற்று சமுதாய நிலையினை விளக்கி நிற்பவை. இவற்றைச் சங்க கால இலக்கியங்கள் என்றும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர்.

பக்தி இலக்கியம்

தேவாரமும் திருவாசகமும் திவ்வியப்பிரபந்தமும் சைவ வைணவ சமயத்தின் பக்தி மேம்பாட்டினை விளக்கத் தோன்றியவை. பக்தியால் சமுதாயத்தைப் பண்படுத்த வந்தவை. இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களுள் கம்ப ராமாயணமும் பெரியபுராணமும் சமுதாய நிலையைக் காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன. ஏழாம் நூற்றாண்டு தொடங்கி பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையான கால இடைவெளியில் இத்தகைய இலக்கியங்கள் முகிழ்த்தன.

சிற்றிலக்கியங்கள்

பிற்காலத்தில் புராணங்களும் இதிகாசங்களும் பரணி, உலா, கோவை, தூது, அந்தாதி, பள்ளு, முதலாய சிற்றிலக்கியங்களும் இலக்கிய உரை நூல்களும் மிகுதியாகத் தோன்றின. பெரும்பாலானவை கற்பனையும் உயர்வு நவிற்சியும் கலந்த இலக்கியங்களாக இருந்தமையின், இக்கால இலக்கியவளர்ச்சி, அவ்விலக்கிய காலத்தின் உண்மை நிலையை உணர்த்தும் நிலைபேறு உடையனவாக இல்லை என்பதே இன்றைய ஆராய்ச்சியாளர்களின் கருத்தாக இருக்கின்றது பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இந்த நிலையே இருந்தது எனலாம். கற்பனைகளையே இவ்விலக்கியங்கள் கருவாகக் கொண்டவை ஆதலின் நடைமுறை வாழ்விற்கு அவை பெரிதும் பொருந்தியனவாய் இல்லை.

விடுதலை இலக்கியம்

இருபதாம் நூற்றாண்டு விடுதலை இயக்கம் வீறுபெற்றகாலம் அக்காலத்தில் பாரதியும் அதன் பின்னர் பாரதிதாசனும் விடுதலை இலக்கியத்திற்கு வளம் சேர்ந்தனர். விடுதலைக்கு முன்னும் விடுதலைக்குப் பின்னும் நாட்டின் நிலைமையினை இவ்விரு கவிஞர்களும் தெளிவாக உணர்த்தி உள்ளனர். விடுதலை உணர்வும் சமுதாய மலர்ச்சியுமே இக்காலக் கவிஞர்க்குப் பாடு பொருள்களாயின. இலக்கிய உலகின் எழுச்சி மிக்க காலம் இக்காலம் என்பதோடு இலக்கியம் வாழ்வைச் செம்மைப்படுத்திய காலமும் இக்காலமே எனலாம்.

நாட்டுப்புற இலக்கியம்

எழுதா இலக்கியங்களாகிய நாட்டுபுறப் பாடல்களும் பழமொழிகளும் கிராமப்புற மக்களின் உண்மை நிலையை எடுத்து இயம்புவன. அவற்றின் தோற்றத்தை வரையறுத்துக் கூற இயலா விடினும் அவை எழுத்து வடிவம் பெற்றது இருபதாம் நூற்றாண் டில்தான் என்பதை அறுதியிட்டுக் கூறலாம். இவை பொரும்பான் மையும் மக்களின் அன்றாட வாழ்வியல் நிகழ்ச்சிகளையே பாடு பொருளாகக் கொண்ட அனுபவத்தின் எதிரொலிகளாக மிளிர் கின்றன.

உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் சற்றே வேறுபட்டு நிற்பவை புதுக்கவிதைகள் எனப்படுபவை. உருவத்தைக் காட்டிலும் உள்ளடக்கமே அழுத்தம் பெற்று இக்காலச் சமுதா யப்போக்கினை எடுத்து இயல்புபவை இவை.

இரண்டாயிரம் ஆண்டுகட்கும் மேலான வரலாற்றினை உடைய தமிழ் இலக்கியங்கள் அவ்வக்காலத்திற்கேற்ற கருத்துக் களைத் தாங்கி நிற்பவையாக இருப்பினும், மக்களின் இன்றி யமையாத தொழிலாகிய வேளாண்மைத் தொழில் பற்றிய கருத் துக்கள், இவ்விலக்கியங்களில் பல்வேறு வடிவங்களில் பரவிக் கிடக்கின்றன.

வேளாண்மையின் செல்வாக்கு

தமிழ் இலக்கியப் போக்கில் அன்று முதல் இன்று வரை உயி ராக இழையோடிக் கொண்டிருப்பது ஒன்று உண்டு என்றால் அது இயற்கையேயாகும். இன்பத்திலும் துன்பத்திலும் மனிதனுக்கு இயற்கை துணை நின்று கைகொடுத்து உதவுகின்றது என்பதை எல்லா இலக்கியங்களும் அறிவுறுத்துகின்றன. அவ்வியற்கை

யோடு தொடர்புடைய உழவுத்தொழில் உலகளாவிய தொழில், அத்தொழில் பற்றிய கருத்துக்கள், முதற்பொருளாகவும் கருப்பொருளாகவும் உரிப்பொளாகவும் பின்னணியாகவும் உவமை, உருவகங்களாவும் காதலை, வீரத்தை, அன்பை, அறத்தை, பண்பாட்டை விளக்குபவையாகவும் 'வேளாண்மைஇலக்கியங்கள்' என்று குறிப்படும் வகையிலும் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன.

வேளாண்மை இலக்கியங்கள்

வேளாண்மையை முழுமையாக வைத்துப் பாடிய 'ஏர் எழுபது' 'முக்கூடற்பள்ளு' போன்ற நூல்களும் தமிழ் இலக்கிய உலகில் சிறப்பிடம் பெற்றுள்ளன. ஆதலின், இலக்கிய உலகில் வேளாண்மையின் செல்வாக்கு எவ்வளவில் இடம் பெற்றது என்பதும், எவ்வளவில் இலக்கியத்தை வளப்படுத்தி உள்ளது என்பதும் கணித்து அறிய வேண்டிய தொன்றாகும். இவற்றை அறிவதோடு வேளாண்மையின் செல்வாக்கு புலவர் களையும் தமிழ் இலக்கியத்தையும் எவ்வளவில் தாக்கமுறச் செய்துள்ளது என்பதும் அறியப்பட வேண்டிய செய்தி ஆகும். இக்கருத்துகளை அறிவதற்கு முன்னர் வேளாண்மை என்பதற் குரிய இன்றைய பொருளை அறிந்து கொள்ளுதல் இன்றியமை யாதது.

வேளாண்மை என்பதற்குத் தமிழ் இலக்கியம் தரும் பொருள் உதவி என்பதாகும். ஆனால் இன்று அச்சொல் ஒரு தொழில் நுட்பச்சொல்லாகி (Technical Term), பயிர்செய்தல் (Agriculture), கால்நடை வளர்ப்பு (Animal Science) வேளாண்மைப் பொறியியல்(Agricultural Engineering), மீன் வளர்ப்பு (Fishery Scicnce), மரம் வளர்ப்பு (Farm Forestry) மனை இயல் (Home Science), கிராமப்புற சமுதாய வளர்ச்சி (Rural Development) முதலாய பல பிரிவுகளைக் கொண்ட பல் பொருள் பொதிந்த பொருட் சொல்லாக விளங்குகின்றது. இன்று இச்சொல் உலகளாவிய சொல்லாகவும் அமைந்து உள்ளது. இவ் வடிப்படையில் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் கருத்துக்கள் இங்கு தெளிவு படுத்தப் படுகின்றன.

அகப்பாடல்களில்

வேளாண்மையைப் பின்னணியாகக் கொண்டு அமைந்த சங்கப் பாடல் ஒன்று நன்செய், புன்செய்ப் பயிர்கள் பற்றி, உவமை வாயிலாகப் பல்வேறு கருத்துக்களை விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

நானிலங்களில் ஒன்றான குறிஞ்சியில் புன்செய்ப் பயிராகிய தினை விதைத்துள்ளார்கள். மலைச்சாரலில், பருவத்தில் விதைத்த தினைப் பயிர்கள் இப்போது விளைவுக்கு வந்து விட்டன. மண் வளத்தையும் மழை வளத்தையும் காட்டும் வகையில் சில கதிர்கள் மிகப் பெரியனவாய் விளைந்திருந்தன. விளைந்துள்ள கதிர்களை மலைச்சாரலில் உள்ள குரங்குகள் தின்று விடும் என்பதற்காக அவற்றை விரட்டக் குறிஞ்சி நிலப்பெண்மகள் ஒருத்தி காவல் காத்து வருகிறாள். இருப்பினும் அவளையும் அறியாமல் பெண் குரங்கு ஒன்று தினைக் கதிர்களைக் கொய்து கொண்டு ஓடித் தனது ஆண் குரங்கோடு சேர்ந்து கொள்கிறது.

இரண்டும் சேர்ந்து மலைமீது ஏறி, கொய்த தினைக் கதிர்களைத் தத்தம் கையில் வைத்துத் தேய்த்துக் கதிரில் உள்ள உமியையும் தினையோடு ஒட்டிக்கொண்டிருக்கும் பொட்டையும் ஊதி, வாயில் அடக்கித் தின்றுகொண்டிருக்கின்றன. அத்தகைய வளம் சார்ந்த நிலம் குறிஞ்சி நிலம். மலை சூழ்ந்த பகுதியாதலின் எதிர்பாராத வகையில் அவ்வப்போது மழையும் பெய்யும். அன்று பெய்த மழையில் அக் குரங்குகள் இரண்டுமே நனைந்து போயின. அத்தோற்றம் உண்ணா நோன்பு இருப்பவர்கள் மார்கழி மாதம் முழுதும் நோன்பிருந்து தைமாத முதல் நாள் நீராடிவிட்டு உண்பதுபோல் இருந்தது. பயிர்வளம் இப்பாடலுக்குப் பின்னணியாக அமைந்துள்ளது.

'கொடிச்சி காக்கும் அடுக்கல் பைந்தினை
முந்து விளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை ஏறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டிருந்தன்
திரையணல் கொடுங்கவுள் நிறைய முக்கி
வான்பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்
தையூண் இருக்கையில் தோன்றும் நாடன்

[கொடிச்சி-குறிஞ்சிநிலப் பெண்மகள், அடுக்கல்-மலைச்சாரல், பெருங்குரல்-பெரிய தினைக்கதிர், ஞெமிடி-தேய்த்து.]

இத்தகைய நாட்டைச் சார்ந்த தலைவன் ஒருவன் அந்நிலத்துப் பெண்மகள் ஒருத்தியிடம் அன்பு செலுத்துகிறான்; அது பின்னர் காதலாக மலர்ந்தது. திருமணத்திற்கு இடையீடு ஏற்பட்டுச்சிலகாலம் தடைப்பட்டுப்போயிற்று. திருமணம்செய்துகொள்ள என்று வருவானோ ஏற்ற காலம் இது. இப்பொழுது வாரானோ எனவும் வருத்தினாள். அவள் ஏக்கத்தை உணர்ந்த தோழி ஓர் உவமையின் மூலம் விளக்கி அவள் நிலையைப் புலப்படுத்துகின்றாள்.

தினை போன்ற புன்செய்ப் பயிருக்கு மிகுந்த நீர் தேவை யில்லை. ஆனால் நெல் போன்ற நன்செய்ப் பயிருக்குத் தேவை பருவ மழை தவறியதால் குளத்திற்கு நீர் வரத்து இல்லா மல் வற்றிப்போய் விட்டது. நெற்பயிர் 'புடைத்து' வளர்ந்து கதிர் விடுகின்ற காலம். தண்ணீர் இன்மையால் விளைவுக்கு வந்த நெற் பயிர்கள் எல்லாம் வாடிப் போய்விட்டன. இன்னும் சில நாட்கள் இப்படியே இருந்தால் பயிர்கள் நீரின்மையால் காய்ந்து மடிந்து விடும். குளங்கள் எல்லாம் வறண்டு போகின்ற அளவிற்கு அத் தகைய கொடிய வறட்சி.

ஒரு நாள் திடீரென்று நல்ல மழை பெய்யத் தொடங்கியது. அம் மழையும் நடுயாமத்தில் பெய்தது. நண்பகலில் பெய்திருந்-தால் வெப்ப மிகுதியால் நிலம் சூடேறியிருக்கும் மழை நீர்விழுந்த வுடன் அந்நீரும் வெம்மைப்பட்டுப் பயிர்களின் வேரைப் பாதித்து பயிரைக் கெடுத்து விடும். இதற்கு மாறாக இரவில் நிலத்தின் சூடுதணிந்து குளிர்ந்து இருக்கும். குளிர்ந்த நிலையில் மழை பெய்தால் பயிர்களைப் பாதிக்காது.

வாடிய இப் பயிர்களைப்போல், தலைவன் இன்னும் திருமணம் ஏற்பாடு செய்யவில்லையே என்று தலைவி ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், தலைவன் திருமணத்திற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டான் என்று தோழி தலைவியிடம் கூறி அவளது துன்பத் தைப் போக்குகின்றாள்.

'வந்தனன் வாழி தோழி உலகம்
கயம்கண் அற்ற பைதுஅறு காலைப்
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே'

அகம்–22

[கயம்-குளம், கண் அற்ற-நீர் அற்ற, பைது அறு- ஈரம் இல்லாத, பீள்-சூல் (புடை), திரங்கிய-வாடிய, நள்-நடு]

இப்பாடல் அகத்துறைச் செய்திகளை விளக்க எழுந்தது ஆயினும் வேளாண்மைச் சூழலைப் படைத்து விளங்கும் அளவிற்கு அத்தொழிலின் தாக்கம் புலவர் உள்ளத்தில் படிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடலை ஆழ்ந்து நோக்கினால் பல அரிய வேளாண்மைச் செய்திகள் புதைந்துகிடப்பதை அறியலாம். பயிர் செய்வதில் நன்செய், புன்செய் என்ற இருவகை நிலை இருப் பதை அப்பாடல் உணர்த்துகின்றது. புன்செய்ப் பயிர்களுக்கு நீர்த் தேவை குறைவு. அதனால் மழையை எதிர்பார்த்துப் பயிர்

செய்யலாம். ஆனால் நன்செய்ப் பயிர்களுக்கு நீர்த்தேவை அதிகம். அதனால் மழையை எதிர்பார்த்துப் பயிர் செய்தல் இயலாது. மாறாக நிரந்தர நீர் வசதியைச் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் இப்பாடல் குறிப்பிடுகின்றது.

புன்செய்ப் பயிருக்கு (மானாவாரி) நீர்ப் பாய்ச்சுவதில்லை. நன்செய்ப் பயிருக்கு நீர்ப் பாய்ச்சும்போது நிலம் குளிர்ந்துள்ள அதிகாலைப்போதிலோ அல்லது மாலைப் போதிலோ நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும். வெப்பம் மிகுந்த நேரத்தில் நீர்ப்பாய்ச்சுதல் கூடாது என்பதை 'வாடிய பயிருக்கு நள்ளிரவில் மழை பெய்தது' என்ற செய்தியால் அறியமுடிகிறது.

இக் கருத்தினை விளக்கும் வகையில் காலையில் நீர்பாய்ச்சுதல் மிகவும் நல்லது; இரவில் நீர்ப்பாய்ச்சுதலும் நல்லது. நிலம் குளிர்ந்து கொண்டிருக்கும் மாலை நேரத்தில் நீர்ப்பாய்ச்சுதல் இடைநிகர்த்த நன்மை பயப்பதாகும். ஆனால் வெப்பம் மிகுந்த நண்பகலில் நீர்ப்பாய்ச்சுதல் பயிருக்குக் கெடுதலை விளைவிக்கும் என்பதை ஏர்ப்படலம் எனும் நூல் குறிப்பிடுகின்றது.

காலைநீர் உத்தமோ உத்தமமதாம், கங்குல்
சாலுநீர் உத்தமம், தண்மை வெம்மையாம்
மாலைநீர் மத்திமம் ,மத்தி யானநீர்
ஆலுறப் பாய்ச்சுதல் அதமம் ஆகுமால்

ஏர்ப்படலம்-193

[உத்தமோ உத்தமதாம்-உத்தமத்திலும் உத்தமமாம்-நன்றிலும் நன்று, ஆலுற-சுற்றிவர]

ஆதலின் வேளாண்மைக்கு நிலையான நீர் வளம் இன்றியமையாததைப் போல் அந்நீரைப் பாய்ச்சும் முறையை அறிந்து கொள்ளுதலும் இன்றியமையாதது என்பதையும் அப்பாடல் குறிப்பு உணர்த்துகின்றது.

தினைக்கதிர்கள் பருத்திருந்தன என்பதால் நல்ல நிலத்தில், உரிய பருவத்தில், நல்ல விதையினை விதைத்துள்ளார்கள் என்பதையும், விதைத்து விட்டால் மட்டும் போதாது விளைவு வீடுவந்து சேரும் வரைக் காப்புமிகவும் இன்றியமையாதது என்பதையும், உழுதல் முதலாய கடினமான உழைப்பை ஆண்களும் பயிர்களைப் பாதுகாத்தல் முதலாய மென்மை பணிகளைப் பெண்களும் செய்தார்கள் என்பதைக் 'கொடிச்சி காக்கும் அடுக்கல் பைந்தினை' என்ற தொடராலும் அறியமுடிகின்றது.

புறப் பாடல்களில்

உழவுத்தொழிலின் மேன்மையைப் பல்லாற்றானும் மக்கள் உணரவேண்டும் என்பதற்காகவே புலவர்கள் தத்தம் கவிதைகளில் வேளாண்மைச் செய்திகளைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறினார்கள். பண்டை நாளில் அரசர்களுக்கு அறிவுரை வழங்கிய புலவர்கள் நாட்டின் நடப்பை எடுத்து விளக்கி, கொள்ள வேண்டுவன இவை இவை, தள்ள வேண்டுவன இவை இவை என்பதைத் தெளிவு படுத்தினார்கள் 'ஓர் அரசனுடைய வெற்றி நிலைபேறு உடையதாக விளங்கவேண்டுமானால் அது அவனது நால்வகைப் படைகளால் ஆகாது. மாறாகக் கலப்பையால் உழுது விதைத்த விளைவின் பயனால்தான் அவ் வெற்றி நிலைபேறு உடையதாக ஆகும். பெய்ய வேண்டிய காலத்து மழைபெய்யாது பொய்த்தாலும், விளைவு குறைந்தாலும், இயல்பு அல்லாத செயல்கள் மக்கள் நடைமுறை வாழ்வில் காணப்பட்டாலும், இவ்வுலகம் அரசனையே குறை கூறும். ஆதலின் இவ்வுலக இயல்பினை நன்கு அறிந்து, பிறர் குறை சொல் கேளாது, உண்மை எது என்பதை உணர்ந்து, உழவர் சமுதாயத்தைப் பாதுகாத்து வாழ்தல் அரசனது முதன்மையான கடமையாகும். உழவர் சமுதாயம் பாதுகாக்கப்பட்டால் அச் சமுதாயம் மக்கள் சமுதாயத்தையே பாதுகாக்கும் என்பதை உணர்வாயாக' என்று அரசனுக்கு அறிவுரை வழங்குகிற பாங்கு சிந்தனைக்குரியதாகும்.

'... .. . . உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகல் ஞாலம்
அதுநன்கு அறிந்தனை யாயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறம் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறம் தருகுவை யாயின்நின்
அடிபுறம் தருகுவர் அடங்கா தோரே

புறம்-35

[உழுபடை-கலப்பை, ஈன்றதன் பயன்-விளைவின் பயன், ஞாலம்-உலகம், பகடுபுறம் தருநர்-உழவர்கள், பாரம் ஓம்பி-துன்பம் போக்கி, அடங்காதோர்-பகைவர்]

இவ்வாறு அறிவுரை கூறுவதன் நோக்கம் உழவர்களைப்

போற்றுதல் வேண்டும் என்பதற்கேயாகும். நாட்டின் முதுகெலும்பான தொழிலையும் தொழில் செய்வாரையும் போற்றாத நாடு 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிப்போவதில்' வியப்பில்லை. அவ்வுண்மை நிலையை நம் பாரதநாடு பன்னெடுங்காலமாக அனுபவித்து வந்துள்ளது. நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டுக் கண்ணீர் விட்டோரை, உயிரிழந்தோரை நினைந்து பாடும்போதுகூட

'தண்ணீர்விட்டோ வளர்த்தோம்- சர்வேசா
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ?'

என்று இறைவனைப் பார்த்து, சுதந்திரத்தைப் பயிராக உருவகம் செய்து பாடுகின்றார் பாரதியார். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யவும் வீணில் உண்டு களித்து இருப்போரை நிந்தனை செய்யவும்' பாடியதும் ஈண்டு கருதத்தக்கது.

நாடு விடுதலை பெற்றபின், நாடுவளம் பெறப் பாடிய புரட்சிக் கவிஞர் காதலைப் பாடும்போதும்

'வளவயல் நான் —அவள்
சம்பா நடவு'

எனப் பாடுகின்றார். இந்நாட்டின் ஆடவர்கள் வளம் சான்ற வயல்களாகவும் பெண்டிர் நடப்பட்ட நல்ல சம்பா நெற்பயிர் போன்றும் விளங்கவேண்டும். வளமான வயலில் தரமான பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல விளைவைக் கொடுப்பதைப்போல இல்லறம் செழித்தால் எல்லாம் செழிக்கும் என்பதற்குப் பயிர்த் தொழிலை எடுத்தாளுகின்றார் புரட்சிக் கவிஞர். இவ்வகையில் வேளாண்மைச் செல்வாக்கு இன்றையக் கவிதைகளில், தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத் தகுந்த அளவில் இடம்பெற்றுள்ளன என்பதை அறியலாம். இச்செல்வாக்கு இலக்கியத்தில் மட்டும் இருந்தால் பயனில்லை. வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்பதைக் கவிஞர் கு. சிவஞானம் என்பவர் சமுதாய நோக்கில் பாடி இருப்பது அனைவரின் சிந்தனைக்கும் விருந்தாக அமைகின்றது.

உழுபவனும் நான் விதைப்பவனும் நான்
ஊறு வராமல் காப்பவனும் நான்
நடுபவனும் களை எடுப்பவனும் நான்
நாளும் தண்ணீர் பாய்ச்சுபவன் நான்
அறுப்பவனும் கதிர் அடிப்பவனும் நான்

அழகாய்த் தூற்றிப் பிரிப்பவனும் நான்
மூட்டை சுமந்து வண்டியி லேற்றி
முதலாளியிடம் சேர்ப்பவனும் நான்
நெல்லை விற்பவன் நானில்லை
நிறைய உண்பவன் நானில்லை
காரில் செல்பவன் நானில்லை
களித்துத் திரிபவன் நானில்லை
போரடி நெல்லில் கூலி தருவார்
போராடினால் கொஞ்சம் கூட்டித் தருவார்
பதடுதல் ஒருவன் தின்னுதல் ஒருவன்
வாடுதல் ஒருவன் வாழுதல் ஒருவன்
நெடுநாள் வந்த நிலைமை யீது
நெடுநாள் இனிமேல் இதுநிலைக் காது
உழைத்தோன் பசியால் வாடுதலை
உலகம் நெடுநாள் இனிபொறுக்காது
பசித்தோர் திரண்டு எழுந்து விட்டால்
பாரதப்புரட்சி மூண்டு விடும்.

என்ற பாடல் உழவர் சமுதாயத்தின் நிலையினைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இலக்கியங்களில் காணப்படும் இவ்வேளாண்மைச் செல்வாக்கு இலக்கியச் சுவை காணுதற்கு மட்டுமின்றி 'எல்லார்க்கும் எல்லாம் என்ற இடம் நோக்கிச் செல்கின்ற இந்த வையம்'' என்ற நிலையினை உருவாக்குதற்கும் பயன்பட வேண்டும். அத்தகையதொரு போக்கு இன்றைய வளர்ந்து வரும் இலக்கியங்களில் காணப்படுகின்றது என்பது உண்மை. அத்தகைய வளர்ச்சி நிலைக்குக் கவிஞர் அப்துர் ரகீம் என்பாரின் கவிதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவரது தாலாட்டுப் பாடல் ஒன்று நம் சிந்தனையை ஈர்க்கின்றது. எவ்வளவோ தாலாட்டைக் கேட்டு இருக்கிறோம். இந்தக் தாலாட்டு புதுமையிலும் புதுமை.

முந்தைப் பழமுறைகள் முன்னேற உதவுதில்லே
விந்தைமிகும் கருவிகொண்டு வேளாண்மை செய்பவளோ!

உயர் விளைச்சல் ரகங்களென்றும் ஒட்டுரக விதைகளென்றும்
பயிர் வகைகள் தேர்ந்தெடுத்துப் பாங்காய் விளைப்பவளோ!

கலப்புப்பயிர் ஊடுபயிர் கால்நடைகள் கோழிப்பண்ணை
கலப்புப்பண்ணை முறைகளையே கடைபிடிக்கும் கற்பகமோ!

கொழிக்கும் பயிர்க்குலத்தின் கொடியபூச்சி நோய்களெல்லாம்

தெளிப்பானில் மருந்தெடுத்துத் தெளித்தழிக்க வந்த
கண்ணோ!

சொட்டு நீர்ப்பாசனமும் தெளிநீரின் பாசனமும்
திட்டமிட்டுச் செயல்படுத்திச் சிக்கனத்தைக் காண்பவளோ!

பெண்ணே உழவர் உன்னைப் பின்பற்றித்தாம் நடப்பார்
கண்ணே! கருமணியே! கண்மூடிக் கண்ணுறங்கு

கற்பூரப் பெட்டகமே! கனவு நனவாகும்
பொற்காலம் ஒன்றுவரும் பூ மகளே கண்ணுறங்கு.

'வாழிய நிலனே'-பக். 72



1. தொல்காப்பியம்

தமிழ் உலகிற்குக் கிடைத்த நூல்களுள் காலத்தால் மிகவும் பழமையானது தொல்காப்பியம், அதனை யாத்த பெருமகனார் தொல்காப்பியர். அவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களைக் கூறும் இலக்கணவியல் அறிஞர் மட்டும் அல்லர். மக்கள் வாழ்க்கையை அகம், புறம் என இரண்டாகப் பகுத்து, அதன் கூறுபாடுகளை ஆராய்ந்து கூறும் வாழ்வியல் அறிஞருமாவார். அவரது காலம் சுமார் 2700 ஆண்டுகட்கு முற்பட்டது எனபது இந்நாளைய ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்தாகும்.[1] தொல்காப்பியர், அவர் காலத்திற்கும் பன்னெடுங் காலத்திற்கும் முன்பே வழங்கிய நூல்களின் கருத்துக்களைத் தொகுத்தும் வகுத்தும் கூறியுள்ளார். அவர் கூறும், "என்ப, என்மனார், மொழிப, வகுத்துரைத்தனரே, சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" என்பன போனற சொற்களும் சொற்றொடர்களுமே இக்கூற்றுக்குச் சான்றாகின்றன.

வரலாற்று நோக்கு:

எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்திலிருந்து வடிக்கப்படுவது இலக்கணம். தமிழுக்குக் கிடைத்த நூல்களுள் தொன்மை வாய்ந்தது இலக்கண நூல் எனின், அதற்கு முன்னர் தோன்றிய இலக்கியங்கள், அவ்விலக்கியங்கட்கு முன்னர் தோன்றிய வழக்காறுகள் ஆகியவற்றின் காலத்தை அறுதியிட்டுக் கூறுதல் என்பது அரிதினும் அரிதே. அவற்றில் குறிப்பிட்ட பல்வேறு கருத்துக்களை அறியப் போதிய சான்றுகள் கிடைத்திலவாயினும், தொல்காப்பியம் கொண்டு, கி.மு. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்த் தமிழர்கள் மேற்கொண்டிருந்த வாழ்வியல் நெறிமுறைகளைத் தொகுத்து அறியலாம். இவ்வரலாற்று அடிப்படையில் தொல் காப்பியத்தில் குறிப்பிட்டுள்ள வேளாண்மைக் கருத்துக்களாகிய நிலப்பாகு-

பாடு, நீர் நிலைகள், பயிர்கள், மரஞ்செடிகள், மலர், காய் கனிகள், கால்நடைகள், விலங்கினங்கள், பறவைகள் ஆகியவை பற்றிய கருத்துக்களை வரலாற்று அடிப்படையில் ஆய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வகையில் இக் கட்டுரை தமிழக வேளாண்மை வரலாற்றிற்குத் தோற்றுவாய் செய்கின்றது.

நிலப்பாகுபாடு

உலகம் என்பது நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் எனும் ஐந்தும் கலந்து மயங்கிய ஒன்றாகும். 'நிலம் நீர் தீ வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்பது தொல் காப்பியர் கருத்து. இவ்வைந்தனுள்ளும் முதன்மையானது நிலம் ஆதலின், இதனை முதற்பொருள் என்று கூறுவது பண்டைய மரபு. இயற்கைச் சூழலையும் மண்ணின் தன்மையையும் நோக்கி நிலத்தை நான்காகப் பிரித்தனர் தமிழர்.

காடும் காடுர்ந்த சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. மலையும் மலைசாந்த இடத்தைக் குறிஞ்சி என்று குறித்தனர். வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் எனப் போற்றப்பட்டது. கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலென வழங்கப்பட்டது இதனை,

> 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
> சொல்லிய முறையால் சொல்லவும் படுமே'
>
> தொல்–பொருள்–அகம்–3

என்று குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். சொல்லிய முறையால் என்பதால் மனித இனம் தோன்றி வளர்ந்தது முதல் தொல் காப்பியர் காலம் வரை அப் பாகுபாடே வழக்கில் இருந்து வந்துள்ளது என்பதை அறியலாம். முல்லையோ குறிஞ்சியோ வளங்குன்றினால் அது பாலை எனப்படும்.

தொல்காப்பியத்திற்கும் பின்னர்த் தோன்றிய நூல்களாகிய சங்க இலக்கியங்களில் முல்லையும் குறிஞ்சியும் 'வன்புலம்' என்றும் மருதமும் நெய்தலும் 'மென்புலம்' என்றும் வழங்கப்பட்டது. இன்றும் இப்பகுதிகளில் நீர்வளமுள்ள பகுதி நன்செய் என்றும், நீர்வளம் குறைந்த பகுதி 'புன்செய்' என்றும் வழங்கி வருகிறது. காலந்தோறும் பெயர்கள் மாறினாலும் அன்றும் இன்றும் மண்ணின் தன்மைகளுக் கேற்பவே பயிர் செய்யப்படுகின்றது என் பதை அறியலாம்.

பருவங்கள்

நிலமே அன்றி எல்லாவற்றிலும் இயைந்து நிற்பது காலமாதலின் 'நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்' என்றார் தொல்காப்பியர். எத்தொழிலையும் காலமறிந்து செய்வதே சிறப்பு. பருவத்தே பயிர் செய்யும் பண்பு சான்ற தமிழர் இயற்கையின் தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்ப, ஓர் ஆண்டை ஆறு பருவங்களாகப் பகுத்தனர்.

இளவேனில்	சித்திரை, வைகாசி	(ஏப்ரல், மே)
முதுவேனில்	ஆனி, ஆடி	(ஜூன், ஜூலை)
கார்	ஆவணி, புரட்டாசி	(ஆகஸ்டு செப்டம்பர்)
கூதிர்	ஐப்பசி, கார்த்திகை	(அக்டோபர் நவம்பர்)
முன்பனி	மார்கழி, தை	(டிசம்பர் சனவரி)
பின்பனி	மாசி, பங்குனி	(பிப்ரவரி, மார்ச்சு)

என்பன பருவங்களும் அவற்றிற்குரிய கால அளவுகளுமாகும். இவ்வாறு பருவங்களை ஆறாகப் பகுத்துக் கொண்டது போல ஒரு நாளையும் ஆறாகப் பகுத்து வாழ்ந்தனர்.
தமிழரின் நாள் தொடக்கம் நண்பகல்[2] ஆகும்.

நண்பகல்	(10 மணி	முதல்	2 மணி	வரை)
மாலை	(2	,,	6	,,)
எற்பாடு	(6	,,	10	,,)
யாமம்	(10	,,	2	,,)
வைகறை	(2	,,	6	,,)
விடியல்	(6	,,	10	,,)

என்பன நாட் பிரிவுகள். இப்பிரிவுகள் அகத்துறை வாழ்விற்கே அன்றி, புறத்துறையில் பருவமறிந்து பயிர் செய்யவும், வினை செய்யவும் அமைத்துக் கொள்ளப்பட்டன என்பது தெளிவு.

நீர் நிலைகள்

நிலத்தை நான்காகப் பாகுபடுத்திக் கூறிய தொல்காப்பியர் அவற்றில் தோன்றும் பொருள்களையும் வகைப்படுத்திக் கூறியுள்ளார். நிலத்தைச் சார்ந்துள்ள எல்லாம் கருப்பொருள் எனப்படும்.

'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப'
தொல்-பொருள்-அகம்-18

தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில், இசை முதலாயினவும் இவை போன்ற பிறவும் கருப்பொருள் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இவை உலக வாழ்விற்கு இன்றியமையாது கருப்போன்று விளங்குதலின் கருப்பொருள் எனக் குறிக்கப்பட்டது எனக் கொள்ளலாம். கருப்பொருள்களில் முதன்மையானது உணவு. அவ்வுணவுப்பொருளை உண்டாக்க நிலத்தோடு நீரும் இயையவேண்டும். நிலப் பாகுபாட்டிலேயே அவற்றிலுள்ள நீர் நிலைகளையும் உய்த்துணர வைக்கின்றார் தொல்காப்பியர். மலையில் சுனைகள், அருவிகள் உண்டு. காட்டில் சிறு நீர் நிலைகள் காட்டாறுகள் உண்டு. மருதத்தில் வற்றாத ஆறுகள் ஓடும். நெய்நலில் நீர்க்கேணிகள் மிகுந்து காணப்படும். இந் நீர்நிலைகளைக்கொண்டும் மழையை எதிர்நோக்கியும் விதைத்து விளைத்துக் கொண்டதை அறியலாம். ''ஆறு, குளம்'' முதலாய சொற்களைத் தொல்காப்பியர் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பயிர்கள்

இயற்கைச் சூழலுக்கும் மண் வளத்திற்கும் ஏற்ப தினை, வரகு, சாமை முதலாய புன்செய்ப் பயிர்களும், நெல், கரும்பு, வாழை முதலாய நன்செய்ப் பயிர்களும், பயிரிடப்பட்டன என்பதை அறியலாம். பயிர்களே அன்றிக் கிழங்குகள், 'பீர்க்கு' போன்ற காய்கறிகள் பற்றிய பெயர்க்குறிப்பும் காணக்கிடக்கின்றன. பயிர் வகைகளில் 'நெல்லும்', எண்ணெய் வித்துக்களில் 'எள்ளும்', 'போத்து' எனும் இளமைப் பெயரால் 'கரும்பும்' தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படடுள்ளன. விதையைக் 'காழ்' என்று குறிக்கின்றார் தொல்காப்பியர்.

மரம் செடி கொடிகள்

தொல்காப்பியத்தில் பல்வகையான மரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பழங்காலத்தில் பெரும்பான்மையான நிலங்கள் உழவு செய்யப்படாமல் கன்னி நிலமாகவே (Virgin land) இருந்ததால் அவற்றில் இயற்கையாகவே மரஞ் செடி கொடிகள் நிறைந்திருந்தன. உழவுசெய்யும் பொழுது அக் காடுகளை அழித்துக் கழனியாக்கினர் என்பது வரலாறாகும். அன்று மக்கள் தொகை மிகவும் குறைவாதலின் உழவுசெய்த நிலம் போக எஞ்சியவற்றில் மரங்கள் நிறைந்திருந்தன.

யா, பிடா, தளா, மா, உதியம், புளி, ஓடு, சேய் (மூங்கில்), விசை, ஞெமை, நமை, அரை (அரசமரம்), ஆவிரை (பொன்னாவிரை), ஆண், இல்லம் (தேற்றாமரம்), ஆர் (ஆத்தி), வெதிர் (மூங்கில்), சார், பூல், ஆல் (ஆலமரம்) வேல், குமிழ், விளா, பலா, வேம்பு, மருதம், குறிஞ்சி, வாகை, காஞ்சி மு. தலாய மரத்தின் பெயர்களும், கரந்தை, தும்பை, காந்தள் முதலிய செடிகளும், முல்லை, வஞ்சி, பீர்க்கு முதலாய கொடிகளும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் விசை, நமை, ஞெமை, ஆண், சார் முதலாய பல மரங்கள் இனங்கண்டு கொள்ள முடியாத நிலையில் உள்ளன. இம்மரங்கள் இலை தழைகளால் நில வளத்திற்கும், மழையைப் பெய்வித்தலால் நீர் வளத்திற்கும் பெரிதுந்துணை செய்வதாதலின் உழவுத் தொழில் சிறப்புற்று விளங்கியது. அன்றியும் மா, பலா, விளா, புளி முதலிய மரங்கள் காய் கனிகளால் மக்களை வாழ்வித்தன. பனை மரத்திலிருந்து வேள் நீர் (தெளிவு) இறக்கிக் கட்டி செய்தார்கள் என்பதையும் அக் கட்டியைப் 'பனாட்டு' என்று குறித்தார்கள் என்பதையும் தொல்காப்பியம் கூறுகின்றது.

தாவர இயல் அறிவு

இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன்னரே தாவரங்களுக்கு உயிரும் உற்று உணரும் தன்மையும் உண்டு (The plant is endowed with Sensitiveness and Consciousness) என்று கண்ட இனம் தமிழினம். அறிவியல் அடிப்படையில் இவ்வுண்மை சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அன்றியும் உள்ளீடு இல்லாதவைகளைப் புல் என்றும் உள்ளீடு உள்ளவைகளை மரம் என்றும் தொல்காப்பியர் வகுத்துக் கூறியுள்ள திறம் தாவர இயல் அறிஞர்களாலும் போற்றப்படுகின்றது.

'புறக்கா ழனவே புல்லென மொழிப'
'அகக்கா ழனவே மரமென மொழிப'

தொல்-பொருள்-மரபு-86,87

இதனையே இன்று ஒரு விதையிலைத் தாவரம் (Monocotyledon) இருவிதையிலைத்தாவரம் (Dicotyledon) என்று பாகுபடுத்தியுள்ளனர். இப்பாகுபாடும் 1986-ல் தான் காணப்பட்டது.[3]

மேலும் புல்லின் உறுப்புகளாகிய தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை ஆகியவைகளையும், மரத்தின் உறுப்புகளாகிய இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ,

அரும்பு, நனை ஆகியவற்றையும், இவ்விரண்டிற்கும் பொதுவான காய், பழம், தோல், செதிள், வீழ் முதலாய உறுப்புகளையும் கூறி, இவற்றிலும் அடங்காதன உண்டு என்று குறிப்பிட்டுள்ள திறம் அவரது ஆழ்ந்த அறிவினையும், வருங்கால வளர்ச்சியினை ஏற்கும் மன நலத்தையும் காட்டுவதாக உள்ளது.

கால் நடைகள்

ஆ, பெற்றம், எருது, ஆடு, தகர் (ஆட்டுக்கிடாய்) எருமை போன்ற கால்நடைப் பெயர்களைத் தொல்காப்பியர் ஆண்டுள்ளார். கால்நடைகள் செல்வங்களாகப் போற்றப்பட்டன. முல்லை நில மக்கள் கால்நடைகள் வளர்ப்பதையே தொழிலாகவும் கொண்டிருந்தனர். தனி மனிதர்களே அன்றி மன்னர்களும் பசுக்களைப் போற்றி வளர்த்தனர். மன்னர்களுள் பகை நேர்ந்தபோது முதன் முதலில்'பசுக்கவர்தல்' என்ற வழக்கம் இருந்துவந்துள்ளது. அதனைத் தொல்காப்பியம் 'நிரை கவர்தல்' என்று குறிப்பிடு கின்றது. கவர்ந்து சென்றவர்கள் அப்பசுக்களைத் துன்புறுத்தாமல் ஓட்டிச்சென்று வீரர்கட்கும் மற்றவர்கட்கும் வழங்கினார்கள் என்பதை, 'நோயின்றி உய்த்தல், பாதீடு' முதலிய சொற்களால் அறியலாம். இக்கால்நடைகளின் கழிவுப் பொருள்களை எருக் குழியிலிட்டு வைத்து வேளாண்மைக்குப் பயன் படுத்தினார்கள் என்பதை 'எரு' என்ற சொல்கொண்டு உணர்த்துகின்றார் தொல்காப்பியர்.

விலங்கினங்கள்

யானை, குதிரை, ஒட்டகம், சிங்கம், புலி, நரி, மான் முதலிய விலங்கினப் பெயர்கள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. இவைகளில் சிலவற்றைப் பிடித்துத் தம் வாழ்க்கைக்குப் பயன் படுத்தி உள்ளனர். இவ்விலங்கினங்களுள் ஆணினத்தையும் பெண்ணினத்தையும் குறிக்கத் தனித்தனிப் பெயர்கள் இருந்தன என்பதைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இப்பெயர்கள் கொண்டே இவ்விலங்கினங்கள் பெருவழக்காய் இருந்தமையை அறியலாம். இவைகள் காட்டில் திரிந்து வாழ்ந்ததால் காடுகளுக்கு அழிவு ஏற்படவில்லை. மரங்களடர்ந்த காடுகள் நிலவளத்தையும் நீர்வளத்தையும் மிகுவித்து வேளாண்மைக்குத் துணை செய்தன.

ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன

நத்தை, சிப்பி, கறையான், எறும்பு, நண்டு, எலி, அணில்,

கீரி, முயல் முதலாய ஊர்ந்தும், தவழ்ந்தும், வாழும் சிற்றுயிர்களையும் தொல்காப்பியம் குறிக்கின்றது. இவை உற்றும் சுவைத்தும் மோந்தும் கண்டும் கேட்டும் வாழும் ஐந்தும், ஐந்திற்கும் குறைவான அறிவினையும் உடைய சிற்றுயிர்களாகும். பறவைகளில் சேவல், பெடை, அன்னம், புறா, மயில், கிளி முதலியவற்றின் பெயர்களைத் தொல்காப்பியத்தில் காணலாம். இவற்றில் சிலவற்றை உணவுக்காகவும் சிலவற்றை அழகுக்காகவும் வளர்த்திருக்கக் கூடும் என்று கருதலாம். இவைகளே அன்றிப் பொதுவாக 'நீர்வாழ்சாதி' என்று குறிப்பிட்டுள்ளதால் நீர்வாழ் இனங்கள் பற்றிய கருத்தினையும் கொண்டிருந்தார்கள் என்பதை அறியலாம்.

வேளாண்மாந்தர்

தொல்காப்பியர் காலத்தில் பல்வேறு தொழில்கள் நடைபெற்றிருப்பினும் இரண்டு தொழில்கள் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 'இருமூன்று மரபின் ஏனோர்' என்று கூறி ஆறு கடமைகளை மேற்கொண்டுள்ள உழவர்களையும் வணிகர்களையும் குறிப்பிடுகின்றார். 'இருமூன்று மரபின் ஏனோர்' என்பதற்குப் பலரும் பலவாறு பொருள் கூறினும் அவற்றுள் உழவர்க்கு உழவும் வணிகர்க்கு வணிகமும் தலையாய தொழில் என்பதை ஒருவரும் குறிப்பிடத் தவறவில்லை. மேலும் உழவர்க்கு உழுதொழிலே முதன்மை வாய்ந்தது என்பதை வற்புறுத்துவார் போன்று,

> வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
> இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி'
>
> தொல்-பொருள்-மரபு-81

எனக் கூறியுள்ளார். உழவு செய்வோர் உழவை விடுத்துப் பிறவற்றில் நாட்டம் கொண்டால் உழவில் வருவாய் குன்றிவிடும். ஆதலின் அவர்கட்குப் பிறவகைத் தொழில்கள் கூடாது என்றும் இந் நூற்பாவிற்குப் பொருள் கொள்ளலாம். வள்ளுவரும் இக் கருத்தை அரண் செய்வார்போன்று 'செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும்' என்று நாள்தோறும் நிலத்தின்மீது கவனம் செலுத்தவேண்டிக் கூறுகின்றார். 'தான் ஏறி விளையுமல்லது நீர் ஏறி விளையாது' என்பது பழமொழி. ஆதலின்வேளாண்மைத் தொழில் செய்வோர் அத் தொழிலில் கண்ணும்கருத்துமாக இருக்க வேண்டும் என்பதை தொல்காப்பியம் தெளிவுறுத்துகின்றது என்பதை அறியலாம்.

இவ்வாறு இலக்கண நூலிலும் வேளாண்மைச் செய்திகளும் குறிப்புகளும் காணக்கிடப்பது பண்டைய மக்களின் அறிவுத் திற

னையும் தொழில் நுட்பத்தையும் உணர்த்துவதாக உள்ளது. தொல்காப்பியர் கூறும் பல்வேறுபட்ட வேளாண்மைக் கருத்துக் களை இன்றைய வேளாண் அறிவியலோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்து பயன்பெற வேண்டியது வேளாண் தமிழறிஞர்களின் இன்றியமையாத கடமைகளுள் ஒன்றாகும் இவ்வரலாற்றுஅறிவு,

> ''முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
> பின்னர் நாடுறு பெற்றியும்''4

அறிந்து செயல்பட வழிவகை செய்யும் என்பது திண்ணம்.

மேற்கோள்.

1 Tholkappiyam in English with critical studies-Page 11
Dr. Ilakkuvanar.

2 விரிவு, வள்ளுவர் உள்ளம், பக்கம்–7.
கி. ஆ. பெ. விசுவநாதம்.

3 First introduced by John Ray of Cambridge in 1686 and later followed by others – By A. C. Dutta, Botany, Page-12.

4 பாரதி சுய சரிதை-பாரதியார் பாடல்கள்.

2. சங்க இலக்கியம்

உழவுத் தொழில் தமிழகத்தின் தொன்மையான தொழில் இயற்கையாகக் கிடைத்த காய், கனி, கிழங்குகளை உண்டு வாழ்ந்த மனித இனத்தவர் இயற்கையின் வளம் குறையக் குறைய அவற்றை உண்டாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தாங்கள் வாழ்ந்த பகுதிகளில் தங்கட்குத் தெரிந்த அளவில் பயிரிட்டு வாழ்ந்தனர். கால்நடைகளைப் பழக்கிப் பயன் படுத்தினர். புதிய கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்தினர். பருவங்களை அறிந்து பயிரிட்டனர். பருவமழை இல்லாத காலங்களில் நீர் நிலைகளில் உள்ள நீரைப் பயன்படுத்திப் பயிரிட்டனர். நீர்வளமும் குறைந்த போது குறைந்த நீர்த் தேவையுள்ள பயிர்களைப் பயிரிட்டு விளைவித்தனர். ஆறும் ஏரியும் குளமும் வற்றியபோது கிணறுகளைத் தோண்டி நீர்வளம் பெருக்கினர். இத்தகைய கடினமான முயற்சிகளை மேற்கொண்டபோது, விதைத்த பயிர்கள் முளைக்காத நிலையில், விதையைப் பற்றி ஆராய முற்பட்டனர். முளைத்தாலும் களையும் உடன் முளைப்பதை அறிந்து அவற்றைப் போக்க வழிகண்டனர். பயிர் வளர்ந்து அறுவடைக்கு வரும் வரை அவற்றைப் பாதுகாத்தனர். பலமுறை பயிரிட்டதால் நிலம் வளம் குன்றிய போது எருவிட்டுப் பயிர் செய்தனர். வெவ்வேறு பயிர்களை மாற்றி மாற்றிப் பயிர் செய்தனர். இவ்வாறு காலங்காலமாக உழன்று உழன்று உழவுத் தொழிலில் ஏற்பட்ட தெளிவு, தலைமுறை தலைமுறையாகப் போற்றப் பட்டு வந்தது. அத்தகைய அனுபவங்களையே இன்று மரபுகள் என்று போற்றுகின்றோம். அம் மரபுகளை அறிய, சங்க இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

தமிழக எல்லை

பண்டைய தமிழகம் தெற்கே குமரிமுனை முதல் வடக்கே வேங்கடம் (இன்றைய திருப்பதி) வரை நீண்டு, கிழக்கும் மேற்

கும் கடலால் சூழப்பட்டிருந்தது. இன்றைய கேரளமும் தமிழகத்தோடு இணைந்த பகுதியாகவே இருந்தது. இதனைப் பனம்பாரனார் என்ற பழம்பெரும் ஆசிரியர், 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம்' எனப்பாடித் தமிழகத்தின் எல்லையை வரையறைப்படுத்தி உள்ளார்.[1] இவ்வெல்லைக்கு உட்பட்ட பகுதியில் வாழ்ந்த மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

இயற்கைச் சூழல்

இவ்வெல்லைக்கு உட்பட்ட தமிழகத்தின் இயற்கைச் சூழல், பல்வேறு தட்ப வெப்ப நிலைகளைக்கொண்டது. வேங்கடமலை, பொதிகை மலை, பழனி மலை, கொல்லி மலை முதலாய மலைகளையும், பற்பல குன்றுகளையும் உடையது. தமிழ்நாடு, காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை முதலாய ஆறுகளைக் கொண்டது. மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டு, கடல்வளம் நிறைந்தது. இடைஇடையே மரங்களடர்ந்த காடுகளும், சமவெளிகளும் அமையப்பெற்றது. மக்களின் வளமான வாழ்க்கைக்கு ஏற்ற தட்ப வெட்ப நிலைகள் அமைந்தது. எவ்வகையான பயிர்களும் வளருவதற்கேற்ற வகையில் வேளாண்மைத் தட்ப வெட்பங்களைக் கொண்டது. பருவமழை சீரான வகையில் பெய்யும் சூழல் வாய்க்கப் பெற்ற இயற்கை அமைப்பினைக் கொண்டது.

சான்றுகள்

இத்தகைய தமிழ்நாட்டின் வேளாண்மை நுட்பங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்குச் சான்றுகளாக மிகவும் துணை புரிபவை, அந்த அந்தக் காலத்தில் தோன்றிய இலக்கியங்களே ஆகும். பிற நாடுகளில் தலைமுறை தலைமுறையாக அரசர்களது வரலாறுகள் தொகுத்து எழுதப்பட்டது போலத்தமிழக அரசர்களுடைய வரலாறுகளும் எழுதப்படாமை ஒரு பெருங்குறையே எனலாம். பிற்காலத்தில் எழுந்த செப்பேடுகள், கல்வெட்டுக்கள் அந்த அந்த அரசர்களின் வெற்றிகள், அறச்செயல்கள் பற்றிக் குறிப்பிடும் அளவுக்கு வேளாண்மை பற்றி அதிகமாகக் குறிப்பிடவில்லை எனினும், அவற்றிலும் அவ்வக்கால வேளாண்மை நுட்பங்கள் சில தென்படுகின்றன. இலக்கியங்களில் கூடப் பண்டைய காலத்தில் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய போது மிகுதியான வேளாண்மைக்கருத்துக்கள் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் புரா

ணங்களும், பக்தி இலக்கியங்களும் தோன்றியபோது வேளாண்மைச் செய்திகள் பெற்ற இடம் மிக மிகக் குறைந்துவிட்டது. இவ்வகையில் தொன்மைத் தமிழ்நாட்டில் காணப்பட்ட வேளாண்மை நுட்பங்களைச் சங்க இலக்கியங்களே பெரிதும் தெளிவு படுத்துகின்றன.

சங்ககாலம் (கி. மு, 200 முதல் கி. பி. 500 வரை)

சங்க காலம் என்பது கி.மு. 200 முதல் கி. பி. 500 வரையான கால எல்லையை உடையது.[2] இக்காலமே வேளாண்மையின் பொற்காலம் எனலாம். பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும், சிலம்பும், மேகலையும் இக் கால எல்லைக்கு உட்பட்ட தமிழ் இலக்கியங்களாகும். இக்காலத்தில் வேளாண்மையில் ஒருவகையான தெளிவும் திருத்தமும் ஏற்பட்டு, வேளாண்மை நுட்பங்கள் வளர்ந்திருந்தன.

உழவின் சிறப்பு

பழந்தமிழ் நாட்டில் சாதிப் பிரிவுகள் இல்லை. செய்கின்ற தொழிலைக் கொண்டே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பாகுபாடு செய்யப்பட்டது. என்றாலும் செய்யும் தொழில் வேறுபாட்டால் உயர்வு தாழ்வு கருதப்படவில்லை. வேளாளர் எனப்படும் உழவர்கள், சமுதாயத்தில் சிறந்த மதிப்பைப் பெற்றிருந்தனர். பயிர்த்தொழில் பிற எல்லாத் தொழில்களுக்கும் முதுகெலும்பாகக் கருதப்பட்டது. அதனால் தலைமையான தொழில் சுதந்தரமான தொழில் என்று புகழப்பட்டது.[3] ஏரை ஓட்டும் உழவனின் கையிலிருக்கும் தார்க்கோல் அரசனின் செங்கோலுக்கு உயிர் ஊட்டுவது என்று போற்றப்பட்டது.[4] சமுதாயத்திலுள்ள எல்லோரும் எவ்வகையிலேனும் தங்களை உழவர்களாகக் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டனர். புலவர்கள் தங்களைச் சொல்லாகிய ஏரைக் கொண்ட உழவர்கள் என்றும் அரசர்களும் படைவீரர்களும் தங்களை வில்லாகிய ஏரைக் கொண்ட உழவர்கள் என்றும் பறைசாற்றிக் கொண்டனர். பாடல்களில் வரும் கருப்பொருள்களில் அந்த அந்த நிலத்துத் தொழில்களும் இடம் பெற்றிருந்தன. திருவள்ளுவர் தமது ஒப்பற்ற திருக்குறள் என்னும் நூலில் 'உழவு' என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களால் அத்தொழிலைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இது ஒன்றே உழவின் சிறப்புக்குப் போதிய சான்றாகும். முழுமையாக நோக்கின் அக்காலத்தில் 'உழவுத் தொழில்' நாகரிகத்தின் சின்னமாகக்கருதப்பட்டது.[5]

அரசனது கடமை

சங்க காலம் முடியாட்சிக் காலம் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் அவர்களது ஆணைக்குட்பட்ட குறுநில மன்னர்களும் ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் தங்கள் நாட்டில் உழவுத்தொழில் வளர்ச்சிக்கு வேண்டியவற்றைச் செய்வதையே தங்கள் முதல் பெரும் கடமையாகக் கொண்டனர். தங்கள் நாடு எந்த ஒரு பொருளுக்காகவும் பிற நாட்டை எதிர் பார்த்து இருக்கக் கூடாது என்பதும், தங்கள் நாட்டு மக்கள் பிழைப்புத்தேடி பிற நாடு செல்லமாட்டார்கள் என்பதும் உள்ள டங்க 'பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇ' [6] எனத் தங்கள் குடி மக்களைப் பற்றிப் பெருமையாகப்பேசிக்கொண்டார்கள். தங்கள் நாடு நீர்வளமும் நில வளமும் உடையதாகத் திகழ்ந்து, அதனால் விளைபொருள்களும் செல்வமும் பெருக வேண்டும் என்பதும் அவர்களின் கருத்தாக இருந்தது. அதற்காகக் காடுகளையும் தரிசு நிலங்களையும் வயல்களாகத் திருத்தினர். பாசன வசதிக் காக ஏரி, குளங்களை வெட்டுவித்தனர். இந்தக் கடமைகளை அர சர்கள் மறந்து இருந்தாலோ, நிறைவேற்றுவதில் கவனக் குறைவாய் இருந்தாலோ சான்றோர்கள் அவ்வப்போது நினைவூட்டத் தவறியதில்லை. 'விதைத்துவிட்டு வான் மழையை எதிர்பார்க்கும் புன்செய் நிலம் எவ்வளவுதான் இருந்தாலும் அர சனுடைய மேர்பாட்டிற்கு அவை உதவாது. ஆகையால் போது மான நீர்நிலைகளை, நீர்வரத்து உள்ள பள்ளமான இடங்களில் அமைத்து, மழை நீரைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். நீர் நிலைகளை அமைக்கும் அரசனுடைய புகழ்தான் இவ்வுலகில் நின்று நிலைபெறும்' என்பதை மன்னர்கள் உணர்ந்திருந்தனர் என்பதைப் புறநானூறு அறிவிக்கின்றது.

> வித்தி வானோக்கும் புன்புலம் கண்ணகல்
> வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
> இறைவன் தாட்கு உதவாதே அதனால்.........
> ....
> நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
> தட்டோர் அம்ம இவண் தட்டோரே
> தள்ளாதோர் இவண் தள்ளா தோரே'
>
> புறம்—*18*

உழவுத் தொழிலுக்கென நிலம் மிகுதியாக இருந்ததால் நீர்-நிலை, அமைப்பதிலேயே மக்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். நிலம் தேவையான போது அருகில் உள்ள காடுகளை அழித்து நாடாக்கிக் கொண்டனர். 'காடு கொன்று நாடாக்கிக் குளம்,

தொட்டு வளபெருக்கிய பெருமை பண்டைத் தமிழ் மன்னர்களுக்கு என்றும் உண்டு.

நீர்நிலை அமைப்பு

நீர்ப்பாசனத்திற்கென ஆற்று நீர், குளத்து நீர், கிணற்று நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். இவ்வகை நீர்நிலைகள் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் அதிகக் கவனம் செலுத்தினர். நீர் வரத்து அதிகமாக உள்ள இடங்களில் குளம் அமைத்தனர். அவற்றின் கரைகளைப் பிறைச் சந்திரன் போன்று அரைவட்ட வடிவில் அமைத்து இருந்தார்கள். 7 குறிஞ்சி நிலப்பகுதிகளில் பாறைகள், சிறு சிறு குன்றுகள் இடையிடையே வருமாறு கரையை அமைத்தனர். இதனால் கட்டுமானச் செலவு குறைவதுடன் நீர்ப்பிடிப்புத்திறனும் கூடும். வரத்துக்கால் இல்லாத குளங்களுக்கு ஆற்றுநீர் கால்வாய்கள் மூலம் கொண்டு வந்து நிரப்பப்பட்டது. இந்நீர் நிலைகளில் உள்ள நீர் வீணாகி விடக்கூடாது என்பதற்காவும், நீர்நிலைகளுக்குப் பழுது நேராமல் இருத்தற்பொருட்டும் ஒரு காவலனை அமர்த்திக் காத்து வந்தனர். அவனுக்குப் 'பெருங்குளங் காவலன்' என்பது பெயர். 8 நீரைச் சிக்கன முறையில் பயன் படுத்த பாத்திகட்டி நீர்ப் பாய்ச்சும் வழக்கமும் அக்காலத்தில் இருந்து வந்தது. 9

உழவு

அகல உழுவதைக் காட்டிலும் ஆழ உழுவதே சிறந்தது என்பது பண்டைய உழவர்களின் கருத்தாக இருந்தது. அத்தகைய உழவர்களைச் 'செஞ்சால் உழவர்கள்' என்று போற்றினர். 10 எருதுகளும், எருமைக்கடாக்களும் உழவிற்குப் பயன்படுத்தப்பட்டன. பெருங்கட்டிகளாக இருந்த மண்ணைச் சிறு கட்டிகளாகும் வரை உழுது ஆற விட்டுப் பயிர் செய்தனர். உழுது விதைத்த அல்லது பயிரிட்ட விளை நிலங்களுக்கு எருவிட்டு வேலிகட்டிப் பாது காத்து வந்தனர். அவ்வேலிகள் உயிர்வேலிகளாகவும் 'இடு முள்' வேலிகளாகவும் அமைக்கப்பட்டிருந்தன. 11

விதை

நல்ல விளைச்சலுக்குத் தரமான விதை தேவை என்பதை உணர்ந்திருந்தனர். அதனால் முதலில் விளைவுக்கு வருகின்ற சிறந்த கதிர்களை விதைக்கெனத் தேர்ந்து கொண்டனர். 12 விதைக்கென வைத்திருந்த தானிய மணிகளை அவர்கள் ஒரு

போதும் உணவுக்குப் பயன்படுத்தியதில்லை. யாரேனும் பயன் படுத்துவார்களாயின் அவர்தம் குடி அழிந்து போகும் என்ற எண்ணமும் மக்கள்பால் பொதுவாக நிலவி வந்தது. 'வீழ்குடி உழவன் வித்துண்டாங்கு' என்பது புறநானூறு.[13]

பல்வகைப் பயிர்கள்

வேளாண் பெருமக்கள் தானியப் பயிர்களுடன் பணப் பயிர்களையும் பயிரிட்டு வந்தனர். நன்செய் நிலங்களில் நெல், கரும்பு, வாழை பயிரிடப்பட்டன. புன்செய் நிலங்களில் தினை, வரகு, எண்ணெய் வித்துக்களான எள்ளும் கடலையும் பயிரிடப்பட்டன. தோட்டப்பயிர்களான தென்னை, பாக்கு, பழமரங்கள், ஏலம், மிளகு முதலியனவும் நெசவுத்தொழிலுக்கு இன்றியமையாத பருத்தியும் பயிர்செய்யப்பட்டன.

கலப்புப்பயிர்ச் சாகுபடி

பழந்தமிழர்கள் சாகுபடி முறைகளில் பல நுணுக்கங்களைக் கையாண்டுள்ளனர். நெல் அறுவடைத் தரிசில் உளுந்து முதலிய பயறு வகைப் பயிர்களைப் பயிர்செய்வது அவர்களது வழக்கம்.[14] இப்பயறுவகைப் பயிர்களின் வேர்முடிச்சுக்களில் உள்ள பாக்டீரியாக்கள் நிலத்தில் தழைச்சத்தை நிலைப்படுத்த உதவி செய்வது அறிவியல் உண்மை. இதனால் அடுத்த சாகுபடியில் விளைச்சல் அதிகம் கிடைக்க வாய்ப்பு உண்டு. இந்த அறிவியல் உண்மையைத் தங்கள் அனுபவத்தால், அடுத்த பயிர் அதிக விளைச்சல் தருவதைக்கொண்டு உணர்ந்து பின்பற்றி வந்தனர். இந்தப் பயிர்ச் சுழற்சி முறையைத் (Crop Rotation) தவிரக் கலப்புப் பயிர் முறையும் நடைமுறைப் பழக்கத்தில் இருந்தது. தினையுடன் அவரையும் கலந்து விதைக்க தினை அறுவடைக்குப்பின் அவரை பூத்துக் காய்க்கத் தொடங்கியதைச் சான்றுகள் கூறுகின்றன, பருத்தியும் தினையும் கலப்புப்பயிராகப் (Mixed Crop) பயிரிடப்பட்டதும் உண்டு.[15] தென்னை, பலா மரத்தோப்பில் ஊடுபயிர்களான இஞ்சி, மஞ்சள் பயிரிட்ட செய்தியையும் அறிய முடிகின்றது (Inter Crop).[16] மேலும் குறைந்த நிலத்தில் நிறைந்த விளைவை விளைவிக்கும் வண்ணம் பயிர் செய்த குறிப்பும் காணப்படுகிறது. 'ஒரு பிடி படியும் சீறிடம் எழு களிறு புரக்கும் நாடு' என்பதும், வேலி ஆயிரம் விளையுள் ஆக' என்பதும் இன்றைய நடையில் தீவிர சாகுபடியைக் (Intensive Cultivation) குறிப்பதாகும்.

அறுவடை

நெல் முதலாய தானியங்களின் கதிர்கள் அறுவடை செய்யக்

'குயம்' என்ற கருவி பயன்பட்டது. கதிர்களைக் கைகளால் சுழற்றி அடித்தும் எருதுகளால் மிதிக்கச்செய்தும் தானியங்களைப் பிரித்தெடுப்பர். காற்றில் தூற்றிப் பதரையும் கூளங்களையும் நீக்கி அளந்து எடுத்துச் சென்று களஞ்சியங்களில் சேமித்து வைப்பர். வைக்கோல் புரிகளாலான சாணம் பூசப்பட்ட நெற்கூடுகளும் தானிய சேமிப்பிற்குப் பயன்பட்டன.[17] ஆழாக்கு, நாழி, மரக்கால் முதலிய அளவு கருவிகளால் பறை, கலம், கோட்டை என்ற கணக்கில் தானியம் அளக்கப்பட்டது. விளைச்சலில் ஆறில் ஒரு பகுதி அரசனுக்கு வரியாகத் தரப்பட்டது. கோவில், கூலிக்காரர்கள், வேளாண் தொழிலுக்கு உதவும் தச்சர், கொல்லர் முதலியோர், வயலுக்கு நீர்ப்பாய்ச்சும் தொழிலாளர் ஆகியோருக்குரிய நெல்லும் 'களத்திலேயே அளந்து கொடுக்கப்பட்டது பழைய தானியங்கள் நிறைந்திருந்த மனையை 'வள மனை' என்று குறிப்பிட்டனர்.[18]

அறுவடைக்குப் பின்

அறுவடைத் தரிசை உடனேயே உழுது காயவிட்டு விடுவர், அல்லது அரிதாள் மூழ்கும்படி நீரைத் தேக்கி நெற்பயிரின் தூர்கள் அழுகிவிடும்படிச் செய்யும் வழக்கமும் இருந்தது. தாளடியிலே உழுது இரண்டாம் போகம் பயிர் செய்த முறையும் இருந்தது. கரும்பு, வாழை போன்றவைகளில் கட்டைப் பயிர் வளர்க்கும் முறையும் 'மறுதாம்புப் பயிர்' (Ratoon) வழக்கத்தில் இருந்தது.[19]

கருவிகள்

வேளாண்மைக் கருவிகள் உழவர் பெரு மக்களின் காலத்தையும் உழைப்பையும் மிச்சப்படுத்தும் அரிய சாதனங்களாகும். இன்றுள்ள அளவிற்கு முன்னேற்றமான கருவிகள் அன்று இல்லை என்றாலும் உழுதற்குக் கலப்பையும், நிலத்தைச் சமன்படுத்த 'தளம்பு' (பரம்பு) என்ற கருவியும் ஆறு, குளம், கிணறுகளில் நீர் இறைத்தற்கு ஆம்பி, கிழார், ஏத்தம் முதலாய கருவிகளும் கதிர்களை உண்ண வரும் பறவைகளை ஓட்டுதற்கு குளிர், தட்டை, கவண் போன்ற கருவிகளும் வடிவம் பெற்றிருந்தன. தினைக் கதிர்களை மேய வரும் காட்டுப்பன்றிகளைப் பிடிப்பதற்கு அவை நுழையும் வழிகளில் பொறிகள் அமைக்கப்பட்டன.[20]

கால்நடைகள்

வேளாண்மைத் தொழிலுக்குப் பெரிதும் உதவியாக இருந்-

தவை கால்நடைகளே. வேளாண் விளைபொருள்களைப் 'பகடுதரு செல்வம்' என்றே போற்றினர். அதனால் மக்கள் அவற்றைத் தெய்வங்களாகவே கருதினர். கால்நடைகளின் அளவைக் கொண்டே மன்னனின், தனிப்பட்டவரின் செல்வ வளம் மதிப்பிடப்பட்டது. நீர்வளம் குன்றிய பகுதிகளில் இல்லந்தோறும் பால் பண்ணைகள் போன்ற சிறு அமைப்பு செயல்பட்டது. பால், மோர், வெண்ணெய் ஆகியவற்றை அண்மையில் உள்ள நகரங்களுக்குக் கொண்டு சென்று விற்று வந்தனர். அவ் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்ததோடு எஞ்சிய பொருளில் தங்கள் கால்நடைகளையும் பெருக்கிக் கொண்டு வளமாக வாழ்ந்தனர்.

மீன் வளம்

முல்லை நில மக்கள் கால்நடைகள் வளர்த்ததுபோலக் கடற்கரையோரப் பகுதியில் வாழ்ந்த நெய்தல் நில மக்கள் மீன் பிடிப்பதைப் பெருந்தொழிலாகக் கொண்டிருந்தனர். மீன் புரதச் சத்து மிகுந்தது. மீன் உணவின் அச்சிறப்பை உணர்ந்தோ உணராமலோ பண்டைத் தமிழ் மக்கள் மீனை மிகுதியாகப் பயன்படுத்தினர். மீனுக்குப் பண்ட மாற்றாக நெல்லைக் கொடுத்துப் பெற்றனர். விற்காத மீன்களை உலர்த்திப் பதப்படுத்தி விற்றனர். அதனை 'மீன் உணக்கல்' என்பர்.[22] மீன் விற்பதைப் பெண்கள் செய்து வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. இருபதிற்கும் மேற்பட்ட மீனின் பெயர்கள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.[23] குளங்களில் மீன் வளர்ப்பு மேற்கொண்டதை 'மீன் முதிர் இலஞ்சி' என்ற தொடரால் அறியலாம்.

வனவளம்

நாளுக்கு நாள் விளைநிலம் தேவைப்பட்டதால் வனங்கள் அழிக்கப்படவேண்டிய நிலையில் இருந்தன. ஆதலின் அவற்றை அழித்து வந்தனர். அவ்வாறு அழிப்பதை மன்னர்கள் கடமையாகக் கொண்டிருந்தனர். எனினும் அவர்கள் அவரவர்களுக்கு என்று ஒரு மரத்தைத் தேர்ந்து அதனைக் 'காவல் மரம்' என்று போற்றி வந்தனர்.[24] அம் மரம் செழித்தால் அரசனும் அவனது மக்களும் செழிப்பார்கள் என்பது நம்பிக்கையாக இருந்தது. மேலும் சேரன் பனம்பூ மாலையையும், சோழன் ஆத்திப்பூ மாலையையும், பாண்டியன் வேப்பம்பூ மாலையையும் உரிமையாகக் கொண்டிருந்தமையும், ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு வகையான மரம் சிறப்புடையதாகப் போற்றப்பட்டதும் பயன்தரு மரம் வளர்த்தற்கான ஊக்கத்தை மக்களிடையே உண்டாக்கின.

விளைபொருள் விற்பனை

வேளாண் விளை பொருள்கள் கிராமப் புறங்களில் பண்ட மாற்று மூலமும் நகரங்களில் காசுக்கும் விற்பனை செய்யப் பட்டன. நெல், முதலாய பண்டங்களைக் கொடுத்து மீன், உப்பு, பால் பண்டங்கள் வாங்கப்பட்டன இவை எடையளவில் நேருக்கு நேர் அல்லது ஒன்றுக்கு இத்தனை மடங்கு என்ற முறையில் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றது. மதுரை, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய பெரிய நகரங்களில் தானியங்கள், பயறு வகைகள் விற்பனை செய்வதற்கென்றே கூலவீதிகள் (Food Grains Bazaar) இருந்தன. அவற்றில் 18 வகையான தானியங்களும் பயறு வகைகளும் விற்கப்பட்டன[25]. அவ்வக்கடைகளில் கிடைக்கும் பொருட்களைக் கடையின் உயரே கட்டப்பட்டிருக்கும் கொடிகளால் (Banners) அறிந்து கொள்ளலாம். வணிகர்கள், தம் பொருளையும் பிறர் பொருளையும் சமமாகக் கருதி அதிக லாபம் வைக்காமலும் கொடுக்கும் பொருளை எடை குறையாமலும் கொடுக்கும் நாணயம் உடையவர்களாகத் திகழ்ந்தனர்.[26] பிற நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கும், பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கும் சுங்கவரி விதிக்கப்பட்டது. உழவர்கள் தங்கள் வயல்களில் வேலை செய்வோருக்குக் கூலியாகத் தங்கள் விளைபொருள்களையே கொடுத்தனர்.

பெண்களின் பங்கு

வேளாண்மையில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பங்கு கொண்டனர். சாகுபடி வேலைகளில் நடவு, களைபறித்தல், கதிரறுத்தல், தானியமணிகளைத் தூற்றிச் சுத்தப்படுத்துதல் முதலிய பல்வேறு வேலைகளைக் கவனித்துக் கொண்டனர். புன்செய்த்தானியப் பயிரான திணைப்புனத்தைப் பகல் வேளைகளில் காவல் செய்யும் பணியும் அவர்களால் ஆற்றப்பட்டது. திணைக் கதிரைக் கொத்திச் செல்லும் பறவை இனங்களைக் கவண் முதலிய கருவிகளைக் கொண்டு விரட்டினர்.[27] நெய்தல் நிலப் பெண்கள் மீன்கள், உப்பு முதலியவற்றையும், முல்லை நிலப் பெண்கள் பால் பண்டங்களையும் பண்டமாற்றாக விற்பனை செய்வதையும் மேற்கொண்டிருந்தனர். மீன்களில் விற்றதுபோக எஞ்சியதைப் பக்குவப்படுத்திக் காயவைப்பதும் கால்நடைகளைப் பராமரிப்பதும் அவர்களால் கவனமாக மேற்கொள்ளப்பட்டன. கைம்பெண்டிர் இராட்டைகளில் நூல் நூற்றல் தொழிலும் செய்து வந்தனர்.[28]

உழவர் சமுதாயம்

பண்டைய மக்கள் மன்னனைத் தங்கள் உயிராகக் கருதினர். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பது சங்க இலக்கியம். மன்னனும், தனது நாட்டில் ஏற்படும் நன்மை தீமைகளுக்குத் தனது ஆட்சியே காரணம் என்று கருதினான்.[29] ஆட்சி செம்மையாக நடைபெற்றால் பருவமழை தவறாது பெய்யும் என்றும், விளைச்சல் பெருகும் என்றும் மக்கள் கருதினர். மக்கள் கடினமாக உழைத்தார்கள். எனினும் எல்லாம் இயற்கையின் விதிப்படியே நடக்கும் என்ற அறவுணர்வே அவர்கள்பால் மேலோங்கி இருந்தது. அறத்தின் வழி பிறழாத உலகுக்கு உணவூட்டுகின்ற உழவர் பெருமக்களை அரசர்களும் புலவர்களும் பெரிதும் போற்றினர். உழவர் பெருமக்கள் சமுதாயத்தில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.[30]

மேற்கோள்

1. தொல் – எழுத்து - பாயிரம் – 1.
2. தமிழ் இலக்கியம் – இராமசாமிநாயுடு - 1954, பக்கம் 13
3. திருக்குறள் - 1033.
4. ஏர் எழுபது - பாடல் - 13
5. தமிழக வரலாறு - (தமிழ்) கே.கே. பிள்ளை, பக்கம் - 20
6. சிலம்பு, மங்கலம் - வரி – 15
7. புறம் - 118
8. அகம் - 252
9. திருக்குறள் - 118
10. நற்றிணை - 340
11. முல்லைப்பாட்டு - வரி 27
12. ஐங்குறுநூறு - 270
13. புறம் – 230
14. ஐங்குறுநூறு – 47
15. குறுந்தொகை – 73
16. சிலம்பு – நாடுகாண் - 72 - 75
17. சிலம்பு – நாடுகாண் - 121 - 124
18. நற்றிணை – 119
19. பதிற்றுப் பத்து – 30 - 14
20. நற்றிணை - 119
21. பெரும்பாண் - 165 - 170
22. சிலம்பு – கானல் வரி 16

23. 'சங்க இலக்கியத்தில் வேளாண்மை'-இல. செ. கந்தசாமி
24. புறம்-57
25. சிலம்பு - இந்திர விழா – ஊர்காண் – 211
26. பட்டினப்பாலை - 209 - 10
27. குறுந்தொகை - 291
28. புறம் – 125
29. திருக்குறள் - 560
30. வேளாண் பல்கலைக் கழக ஆய்வுத் திட்டத்தின் கீழ் மேற் கொண்ட 'சங்க இலக்கியத்தில் வேளாண்மை' என்ற ஆய்வில் வேளாண்மையியல், கால்நடை இயல், வேளாண் பொறியியல், மீன் வள இயல், வன் வள இயல்,'மனையியல், வேளாண் சமுதாய இயல் ஆகிய ஏழு இயல்களும் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

3. திருக்குறள்

திருக்குறள் வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டு கட்குப் பின்னும் உலகுக்கு உறுதுணையாக விளங்கும் நூல். நிலைபேறுடைய பொதுமை அறங்களைக் கூறும் நூல். வாழும் இலக்கியங்கள் வரிசையில் முதலிடம்–முதன்மையிடம் பெறும் நூல். இத்தகு நூலை யாத்த திருவள்ளுவர் பல்துறைகளிலும் வல்லுநராக விளங்கும் பேரறிஞர். அவர்தம் பல்துறை அறிவினைத் திருக்குறளில் பல இடங்களிலும் காணலாம்.[1] அவர் அதிகாரம் வகுத்துச் சிறப்பித்துக் கூறியவற்றுள் தலைமையிடம்பெறுவது உழவுத்தொழிலாகும். மனிதன் வயிறார உண்டு வளமோடு வாழ்ந்தாலன்றி எதுவும் செம்மையாக நடைபெறாது என்ற எண்ணம் இத்தொழிலைச் சிறப்பித்தமைக்கு ஒரு காரணமாகலாம். திருவள்ளுவர் உழவைத் தம் தொழிலாகக் கொண்டவர் என்ற கூற்றும் ஈண்டுக் கருதத்தக்கது.[2]

உழவு

உழவு என்னும் அதிகாரத்தில் உழவின் சிறப்பு, உழவர் சிறப்பு, உழவு செய்யும் முறைகள், அது செய்யாவழி ஏற்படும் இழுக்கு ஆகியவை வகுத்து உரைக்கப்பட்டுள்ளன. இதே காலத்தில் (கி.மு. 70-19) இலத்தீன் மொழிக் கவிஞரான வெர்ஜில் என்னும் அறிஞர் உழவுப்பாட்டு (Georgics- Farm life) என்ற நூலை இயற்றி அந்நாட்டு மக்களுக்கு வேளாண்மையின் சிறப்பை விளக்கி உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.[3] உழவியல் முறைகள், மரம் செடி கொடிகள் வளர்த்தல், கால்நடை வளர்த்தல், தேனீ வளர்த்தல் என்பன உழவுப்பாட்டின் கருப்பொருள்களாக அமைந்துள்ளன. இப்பாகுபாடுகள் உழவுத் தொழிலின் அடிப்படைக் கூறுகளே ஆகும். வேளாண்மை என்பது இவற்றினும் விரிவான பொருளை உடையது. இவ்வடிப்படையில் திருக்குறள் ஆராயப்படுகிறது.

நிலம்

வேளாண்மைக்கு நிலவளமும் நீர்வளமும் அடிப்படையா னவை. முல்லை குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நானிலப் பாகுபாட்டிற்குப் பின்னர், முதலிரண்டையும் வன்னிலம் என்றும் பின்னிரண்டையும் மென்னிலம்[5] என்றும் கொண்டனர். அந் நிலையும் மாறிவிளைகின்ற நிலம் எதுவாயினும் அதனைப் 'புலம்' என்றும் 'நிலம்'[6] என்றும் பொதுச் சொல்லால் வழங்குவது வேளாண்மையின் வளர்ச்சியைக் காட்டுவதாகும். மிகச் சிறந்த விதையாயினும் நிலம் வளமானதாக இல்லையாயின் முளைத்து வருதல் அரிது. ஆதலின் நிலத்தின் வளமறிந்து பயிரிட்டார்கள் என்பதை 'நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்' 7 என்ற அடி யால் அறிய முடிகின்றது. இந்நில வள ஆராய்ச்சியில் பயன்படா தவை என்றுஒதுக்கப்பட்டவை 'பயவாக்களரும்', 'வன்பாலை யும்' ஆகும். தேவைக்குமேல் நிலம் இருந்த காலத்தில் உண்டான நிலை இது. நிலம் பற்றாக்குறை ஏற்பட்ட காலத்தில் 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி'க் கொண்ட னர்.[8] வேளாண்மை அறிவியல் வளர்ந்துள்ள இக் காலத்தில் களரைத் திருத்தவும், நீர்வளமற்ற நிலத்தில் நீர்வளம் காணவும் முயல்கின்றனர். மற்றொரு வகையில் அந்நிலங்களுக்கு ஏற்ற பயிர் வகைகளையும் கண்டு வருகின்றனர்.

நீர்

நீரின்றி உலக இயக்கம் நடைபெறாது என்பது பொது உண்மை. நாட்டின் உறுப்புக்களைக் கூற வந்த வள்ளுவர் நான் கில் இரண்டை நீர்வளச் சார்புக்கு ஒதுக்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு
குறள்-737

மழைநீர், நிலநீர் ஆகிய இருபுனலும், ஆற்றுநீராகிய வருபுன லும் நாட்டிற்குப் பெரிதும் வேண்டப்படுவதாகும். மழை நீரா கிய ஆதாரம் இல்லாதபோது ஆறும் ஏரியும் குளமும் கிணறும் நீரற்றுப்போகின்றன. மழையின்றேல் உழவுத்தொழில் நடை பெறாது என்பதால் மழைபெய்யுங் காலத்து அந்நீரைச் சேமித்து வைத்துக் கொள்ளக் குளங்கள் அமைத்துக் கொண்டனர். பண்டைய நாளில் ஏரியும் குளமும் வேறுபாடின்றி ஒரே சொல் லால் வழங்கப்பட்டுள்ளன. குளங்களில் நீர் மிகுதியாகத் தேங்கு

வதற்குக் (கோடு) கரையும் அமைத்திருந்தனர். அதனைக் குளவளாக் கோடு' என்று குறிப்பிடுகிறது திருக்குறள். இன்றைய அறிவியல் இம்முறையினை நீர் சேகரித்தல் (Water Harvesting) என்று கூறுகின்றது. குளத்தில் நீர் குறைந்த காலத்தில் ஆற்று ஓரம் மணற்பாங்கில் கிணறு தோண்டி வேளாண்மை செய்தனர். நீர் நிலைகளைப் பொறுத்த அளவில் இன்று அணைக்கட்டுகள் தோன்றினாலும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ள அடிப்படையிலிருந்து மிகப் பெரிய மாறுதல் எதுவும் நிகழ்ந்து விடவில்லை.

ஒரு பகுதியில் நில வளமும் வேறு ஒரு பகுதியில் நீர் வளமும் தனித்தனியே அமைந்து கிடப்பினும் பயனற்றுப் போகும். இவ்விரு வளமும் ஒருங்கே இணைந்தாலன்றி-கங்கை நீர் காவிரிக் கழனிகளில் பாய்ந்தாலன்றி-நம்நாட்டு வேளாண்மை பிற நாட்டிற்கு வேளாண்மை செய்யும் நிலையை அடையாது. அதனை 'நிலத்தோடு நீர் இயைந்து' என்று குறிப்பிடுகிறது குறள். 'நிலமும் நீரும் சேர்ந்ததே உணவு' என்ற கருத்தும் குறிப்பிடத்தக்கதாகும் [9]

உழுதல்

வளங்கள் செறிந்திருந்தாலும் அவற்றை வகையாகப் பயன் படுத்தும் நெறிமுறைகள் அறிந்தாலன்றி உரிய பயன் விளையாது

'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

குறள்-1038

என்பது பயிர் செய்வதில் மேற்கொள்ள வேண்டிய மிகச் சிறந்த வழிமுறைகளாகும். இவ்வமைப்பு இன்று கட்டுக்கோப்புச்சாகுபடி முறை (Package of Practice) என்று போற்றப்படுகின்றது.

பெரும் பெரும் கட்டிகளாக உள்ள வயல் மண் சிறு சிறு கட்டிகளாகும்வரை உழவேண்டும். அதற்குப் பலமுறை-பலசால் உழ வேண்டும். அவ்வாறு உழும்பொழுது கீழ் மண் மேலேயும் மேல் மண் கீழேயும் சென்று நன்றாகக் கலக்கின்றது. அவ்வாறு கலப்பதால் முன்னைய பயிரால் அடிமண்ணில் குறைந்துள்ள சத்துக்கள் சரிசெய்யப் படுகின்றன. பின்னர் காற்றாட உணக்கல்-காய விடுதல்-ஆறப்போடுதல் வேண்டும். அப்பொழுதுதான் மண்ணில் கோத்துள்ள ஈரத்தன்மை நீங்கும். நிலத்தைப் பலமுறை உழுதலும் பயிருக்குப் பயிர் இடைவெளி விட்டுப் புயிரிடுதலும் ஆகிய வள்ளுவர் கூறும் இவ்விரு கருத்துக்களும் உழவர் பெருமக்

கள் இன்றும் போற்றிவரும் பொதுவிதியாகும். கம்புக்குக் கால் உழவு, கொள்ளுக்கு ஓர் உழவு, என்பது போலப் பயிருக்கு ஏற்ற குறைந்த அளவு உழவு (Minimum tillage) என்ற முறையும் இன்று கையாளப்பட்டுவரினும் பழைய முறையின் சிறப்பையே வேளாண் அறிஞர்கள் பெரிதும் போற்றி வருகிறார்கள்.

எருவிடுதல்

பலமுறை ஆழ உழுவதால் எரு இல்லாமலே நிலம் விளையும் என்பது நிலையான பொது விதி அல்ல. அது உழவு செய்தலின் இன்றியமையாமையை வற்புறுத்திக் கூற எழுந்த கூற்றாகும். 'சாலப்படுவது' ஒருபோகம் விளையலாம், இருபோகம் விளையலாம், அடுத்து எரு இட்டே ஆகவேண்டும். அதனால் தான் 'ஏரினும் நன்றால் எருவிடுதல்' என்பதை அடுத்த குறளிலேயே கூறிவிடுகிறார் திருவள்ளுவர். முற்காலத்தில் தழை, தொழுவக் கழிவு, ஆட்டுக்கிடை ஆகியவை எருவாகப் பயன்படுத்தப்பட்டன. இவை இயற்கை உரங்களாகும் (Manure). இன்று செயற்கை உரங்கள் (Fertilizers) மேலோங்கிவிட்டன. பயிருக்கு என்னென்ன சத்துக்கள் தேவை என்பதைப் பாகுபாடு செய்து எரு இடும் நிலையும் வளர்ந்துள்ளது. செயற்கை உரத்தில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து (N.P.K.) என்ற மூன்று வகைகள் உண்டு. அவை முறையே பயிரின் செழுமையையும் மிகுதியான விளைவையும் மணிகளின் தரத்தையும் உயர்த்த வல்லன.

காதல் பயிர் வளர ஊரினர் பலரும் பேசுகின்ற பல்வேறு விதமான பேச்சுக்கள் எருவாகவும், வழக்கமாக ஒன்றுபோல் கூறுகின்ற அன்னை சொல் நீராகவும் அமைகின்றது என்கிறது குறள். இவ்வுவமையில் ஒவ்வொருவர் பேச்சும் ஒவ்வொரு தன்மையுடையதுபோல எருவிலும் பல்வேறு தன்மைகள் இருத்தல் வேண்டும் என்ற குறிப்பினை தோற்றுவிக்கின்றது இக்குறள். [10] எரு வகையினைப்போலவே எரு இடும் முறையிலும் அடியுரம் (Basal Dressing), மேலுரம் (Top Dressing) என்ற இருமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இவை அனைத்தையும் உள்ளடக்கினாற்போல் 'எரு' என்ற சொல் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

விதைத்தல்

சிறந்த வித்துக்கள் இல்லாதவிடத்து உழவும் எருவும் என் செய்யும்? அதனால் உழவர்கள் வித்துக்களைப் போற்றிக் காத்த

னர். 'ஐம் பொறிகளையும் அடக்கி ஆள்பவன் வீட்டுலகமாகிய வயலில் விதைப்பதற்கேற்ற சிறந்த விதை போன்றவன்' என்ற வள்ளுவரின் கருத்து [11] 'மிக நல்ல நிலத்தில் மிக நல்ல விதை' யிட்டுப் பயிரிடவேண்டும் என்ற தெளிவை உண்டாக்குகின்றது. இத்தகைய விதைகளைத் தேர்வு செய்ய விதை நுணுக்கங்கள் (Seed Technique)கையாளப்படுகின்றன.

நல்ல விதையையும் உரிய பருவத்தில் விதைத்தால் தான் உரிய பலனை எதிர்பார்க்க முடியும் என்பது எல்லாச் செயல்களுக்கும் பொதுவானது எனினும் 'பருவம்' பார்த்துப் பயிர் செய்தல் வேளாண்மைக்கு மிகவும் இன்றியமையாததாகும். அதனைப் பருவத்தோடு ஒட்ட ஒழுகல்'என்ற குறள் தொடரால் கருதலாம்.

நீர்ப் பாய்ச்சுதல்

நீர் வளம் மிகுந்திருந்தாலும் அதனைச் சிக்கன முறையில் பயன்படுத்துதலே வேளாண்மை செய்வோர்க்கு அழகாகும். நெற் பயிருக்குத் தேவையான நீரின் அளவு இரண்டு அங்குலமாகும் (5செ.மீ,). அதிக நீர் தேங்க விடுவதால் விளைச்சல் அதிகம் காணுவது இல்லை என்பதை இன்றைய ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. [12] இவ்வாறு சிக்கனமாக நீரைப் பயன்படுத்தும் முறையை நீர் நிர்வாகம் (Water Management) என்பர். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தப் பாத்திப் பாசன முறையைக் (Basin Irrigation) கையாண்டனர் என்பதை வள்ளுவர், 'வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். இது நீர் நிர்வாகத்தின் தொடக்க கால வளர்ச்சியாகும். இம்முறையை அடியொற்றி தெளிநீர்ப்பாசனம் (Sprinkler Irrigation), சொட்டு அல்லது துளி நீர்ப்பாசனம் (Drip Irrigation) முதலிய பாசன முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன 'பாத்தியுள் நீர் சொரிந்தற்று' என்ற முறை இன்று வேருள் நீர் சொரிந்தற்று என்ற நிலைக்கு வளர்ந்துள்ளது.

களை எடுத்தல்

'களை பிடுங்காப் பயிர் கால்பயிர்' என்பது பழமொழி.

விளைச்சலில் இரண்டு மடங்கிற்கும் மேலாகக் களைகளால் இழப்பு ஏற்படுகிறது என்ற புள்ளி விவரம்,பழமொழியின் கருத்தும் ஆராய்ச்சியின் முடிவுதான் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. பண்டைக்காலந் தொட்டே உழவர்கள் களைகளால் பெரிதும் துன்புற்றார்கள் என்பதை அதனைக் குறிப்பிட்டுக் கூறுவதிலி

ருந்தே அறியலாம். மன்னனுக்கு நீதி உரைக்கும்போது 'உழவன் பயிரில் வளரும் களையை வேரோடு பிடுங்கி எறிவதைப் போல அரசன் கொடியவர்களைக் கொன்று அழிக்க வேண்டும்' என்று குறிப்பிடுகின்றது குறள். இவ்வுவமைச்சிறப்பே களை எடுத்தலின் இன்றியமையாமையை உணர்த்துவதாக உள்ளது. இக்களைகளை முற்றும் அழிக்க முடியாத நிலையில் அவற்றை வயல்களில் வளர வொட்டாமல் தடுப்பதே (Weed Control) சிறப்புடையதாகக் கொள்ளப்படுகிறது.

காத்தல்

களையினும் வேறுபட்டது காத்தல்-அஃதாவது பயிர்ப் பாது காப்பு. காத்தலில் இருவகை உண்டு. பூச்சி, புழுக்கள், பிற உயிர்கள் (பறவை, விலங்கு) ஆகியவற்றால் பயிர்களுக்கு அழிவு வராமல் காத்தல் (Pest Control) ஒன்று; பூஞ்சாணம், நுண்ணுயிர்கள், நச்சுயிர்கள் (Fungus, Bacteria, Virus disease) முதலியவற்றால் நோய்கள் வராமல் காத்தல் (Disease control) மற்றொன்று. இவ்விரு வகையாலும் பயிர்களைக் காத்தல் வேண்டும். புதுப் புது பூச்சிகளும் நோய்களும் தோன்றுகின்றன. பயிர்களை இவ் விருவகைத் தொல்லைகளிலிருந்தும் விடுவித்துக் காத்தற் பொருட் டுப் பூச்சி இயல் (Entomology), நோயியல் (Pathology) ஆகிய இரு இயல்களும் செயல்படுகின்றன. இவற்றை எல்லாம் உள்ள டக்கிய வகையில் 'காத்தல்' எனப்பொதுப்படக் கூறி இருப்பது வருங்காலத்தில் ஏதேனும் புதுவகை இன்னல் வரினும் அதனையும் சேர்த்துக் கொள்ள இடங்கொடுத்திருப்பதாகத் தோன்று-கிறது. 'குறுகத்தரித்த குறள்' என்று குறிப்பிட்டதன் உண்மை இங்கே புலப்படுவதைக் காணலாம்.

இவ்விருவகைக் காப்போடு உழவனின் நேரடிப் பார்வையும் நாள்தோறும் வயலில் பட வேண்டும் என்பதையும் வள்ளுவர் குறிந்பிடத் தவறவில்லை.[13] 'பயிர் பாராமல் கெடும்' என்பது பட்டறிவு உள்ளவர்களுக்கு எவ்வளவு பொருத்தமான சொல் என்பது விளங்கும்.

பயிர்கள்

இத்தகு வேளாண்மைச் செய்முறைகளை மேற்கொண்டு பயிரிட்டால் 'வேலி ஆயிரம்' விளையும் (ஒரு வேலி நிலம்: 1000 கலம் நெல் : 1 ஏக்கர் : 75 மூட்டை) என்பது திண்ணம்.[14] திருக்குறளில் நெல், கரும்பு, தினை, எள் ஆகிய நான்கு பயிர்களைப் பற்றிய

குறிப்புகள் காணப்படுகின்றன. நெற்பயிரில் விளைவு சரியில்லாதபோது 'பதர்' உண்டாவதும், அறுவடைக்குப்பின் வைக்கோலைப் பாதுகாப்பான இடத்தில் போரிட்டு வைப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. கரும்பை ஆலையிலிட்டுக் கசக்கிப் பிழிந்த செய்தியும் எள்ளும் தினையும் சிறிய அளவுகட்கு உவமையாக்கப்பட்ட குறிப்பும் காணப்படுகிறது.

தோட்டக்கலை

மலரும் காயும் கனியும் விளைவிப்பதைத் தோட்டக்கலை (Horti culture) என்ற துறையாக வளர்த்துள்ளனர். நீர்ப்பூ, கூம்பி விரியும் தன்மையும் நிலப்பூ ஒருமுறை மலர்ந்தபின் கூம்பிவிரியாத் தன்மையும் உடையது என்னும் மலரின் அடிப்படைப் பிரிவைப் பாகுபடுத்திக் கூறி இருப்பது போற்றுதற்குரியதாகும். திருக்குறளில் தாமரை, குவளை, அனிச்சம் ஆகிய மலர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மலரின் பல்வேறு நிலைகளாகிய அரும்பு, போது, மலர் முதலியனவும் மலரின் உறுப்புகளாகிய 'கால்' (காம்பு), தோடு (இதழ்) ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. மிகுதியும் பிஞ்சு நிலையில் உள்ள கருக்காயும் மிகவும் கனிந்து விட்ட கனியும் பயன்படாது என்பதோடு, விதையில்லாப்பழம்— 'காழில்கனி' பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.[15] விதை இல்லாப் பழங்கள் உருவாக்கப்படுமாயின உண்ணும்போது இடையீடு இல்லாது, சுவை உண்டாகும் என்று குறிப்பிட்டது இன்று நடைமுறைக்கு வந்துள்ளது. விதை குறைந்த பழங்களையும் (பப்பாளி) விதை இல்லாப பழங்களையும் (Seedless Fruits (திராட்சை) உருவாக்கி வெற்றி கண்டுள்ளனர் இன்றைய வேளாண் அறிஞர்கள். வேளாண்மை நுட்பங்கள் உணர்ந்து செயல்பட்டால் வியக்கத்தக்க செயல்களை விளைவிக்கலாம் என்பது திண்ணம்.

கால் நடை அறிவியல்

இன்றுபோல் அல்லாமல் பண்டைநாளில் உழுவதற்கும், நீர் இறைப்பதற்கும் வண்டி இழுப்பதற்கும் கால்நடைகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தன. உழவு மாடுகள்போல் தளராத முயற்சி உடையவனிடத்தில் துன்பங்கள் தோற்றோடிப் போகும் என்கிறது திருக்குறள். பாரத்தைத் தளராமல் இழுப்பதற்கு ஏற்ற வகையில் கால்நடைகள் உடல் வலிவோடும் பொலிவோடும் வளர்க்கப்பட்டன என்பதை இக்கருத்து அறிவுறுத்துகிறது.[16] காளைகளுக்குப் பெயர்வைத்து வளர்த்ததும் ஏறுதழுவும் விழாக்

கள் நடைபெற்றதும் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க நடத்தப் பெற்றவை எனலாம்.

இன்றைய வேளாண்மை அறிஞர்களின் எண்ணம் உழவு மாடுகளை விடுத்துப் பால்வளம் பெருக்கும் (Dairy science) பசுக்களை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. கற்பனைபோலத் தோன்றிய 'வாங்கக்குடம் நிறையும் வள்ளல் பெரும் பசுக்களும், வீட்டளவும் பால்சொரியும் மோட்டு எருமைகளும்' இன்று கண் முன்னர் காட்சியளிக்கின்றன. இன்றைய கலப்பினப் பசுக்களுள்-சிந்தியினம் போன்றவை நாளொன்றுக்கு 25 லிட்டர் வரை பால் கறக்கின்றன. அத்தகைய பசுக்கள் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலேயே உள்ளன.

பசுவை எல்லாவற்றிற்கும் மேலாகப் பண்டு போற்றினர்; துதித்தனர் என்றும் கூறலாம். 'ஆவுக்கு நீரென்று இரப்பினும்' என்ற தொடரில் உள்ள உம்மையே அதன் பெருமையை உணர்த்தக் காண்கிறோம். கறவைகளுக்கென மேய்ச்சல் நிலங்கள் இருந்தன. அவற்றில் கறவைகள் இயல்பாக மேய்ந்து வளமாகப் பாலைச்சொரிந்தன. பாலும் நெய்யும் பற்றிய குறிப்பையும் திருக்குறள் குறிப்பிடுகின்றது. செம்மையான ஆட்சியில் எல்லாம் போற்றி வளர்க்கப்படுவதும் அதனால் உற்பத்தி பெருகுவதும், சீர்கேடான நிலையில் எதுவும் போற்றப்படாமல் உள்ளதையும் விற்று உண்பதும் இயல்பாக நிகழக்கூடியதாகும். காவலன் காவானாயின் கால்நடைகளின் பயன் குன்றுவதோடு கால்நடைகளும் குன்றுவது இயல்பேயாகும். இது நம்பிக்கையன்று. நடைமுறை உண்மை.

ஆடு வளர்ப்பும் உழவர்கள் பண்ணைகளில் நடைபெற்றுவந்தது. ஆடுகள் கிடைக்காக வளர்ப்பதில் தொடங்கி, பின்னர் இறைச்சிக்காக வளர்க்கத் தலைப்பட்டிருத்தலைத் தெளிவாக்குகிறது திருக்குறள். விலைப்பொருட்டு ஊன் விற்கப்பட்டதையும் அறிகின்றோம். ஆட்டுக்கிடாய்களை வளமாக வளர்த்து மோதவிட்டு வேடிக்கை பார்ப்பது வீரம் செறிந்த இளம் உள்ளங்களுக்கு வழக்கமாக இருந்துவந்துள்ளது. இத் 'தகர்போர்' ஆடுகளை வளர்க்கத்தூண்டியதில் வியப்பு இருந்ததற்கில்லை. இன்று இவற்றோடு கோழிகளும் வளர்க்கப்பட்டு இறைச்சி உற்பத்திக்கு வழிவகுத்து வருகின்றனர். கால்நடை வளர்ப்போடு கால்நடை மருத்துவமும் இன்று செழித்து வளர்ந்து வருகின்றது.

கால்நடைகளைச் செல்வம் என்று குறிப்பிட்டது மிகவும் பொருந்துவதாகும். வேளாண்மைப் பொருளாதாரம் இக் கால்

நடைகளைக் கொண்டே இயங்கி வந்துள்ளது என்று கூறலாம். கால் நடை வளர்ப்பு இன்று வேளாண்மைத் துணைத் தொழிலாகப்போற்றப்பட்டு வருகிறது.

வேளாண் பொறியியல்

கருவிகள், காலத்தையும் உழைப்பையும் மிச்சப்படுத்துவன. கால்நடைகள் இருந்த இடத்தில் இன்று கருவிகள் இடம் பெற்றுள்ளன. உழுவதற்கு ஏரும் இறைப்பதற்கு ஏற்றமும், களை எடுப்பதற்குக் களைக்கட்டும், அறுப்பதற்கு அரிவாளும், மரங்கள் முதலாயினவற்றை வெட்டுதற்குக் கோடாரியும், உழவு மாடுகளைப் பிணைப்பதற்குக் கயிறும் பிறவும் திருக்குறளில் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த்தப்படும் சில வேளாண்மைக் கருவிகளாகும். மண்வெட்டியால் வெட்டி வயலைப் பண்படுத்தி நடவு செய்ததை விடுத்து, ஏரால் உழுது பயிரிட்டது வளர்ந்த நிலையே. இந்நிலை வரை வள்ளுவர் கலத்தில் கருவிகள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. ஏரால் உழுவதை விடுத்து எந்திரக் கலப்பையால் உழுவது இன்றைய நிலை. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் தனி மனிதன் நூறு ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் வேளாண்மை செய்து வருவது குறிப்பிடத்தக்கது இதற்கு அடிப்படை புதுமுறைக் கருவிகளே. வேளாண்மைக் கருவிகளைப் பொறுத்த அளவில் நாம் இன்னும் வெகுதொலைவில் பின் தங்கி இருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

மீன்வளம்

நெய்தல் நில மக்களின் தொழில்களில் முதன்மை வாய்ந்தது மீன் பிடிப்பேயாகும். அந்நிலத்து மக்கள் பிடித்த மீன்களை அருகிலுள்ள ஊர்களுக்குக் கொண்டு சென்று விற்று நெல் முதலிய பொருள்களாகப் பெற்று வருதல் சங்க காலத்தில்பெரு வழக்காக இருந்து வந்துள்ளது. எஞ்சியதை 'உணக்கி' வற்றலாக்கி விற்றதையும் அறிகின்றோம்.[17] திருக்குறளில் தூண்டிலால் மீன் பிடிப்பதைப் பற்றிய குறிப்புமட்டுமே காணப்படுகிறது.

பண்ணைகளில் உள்ள குளங்களிலும் சிறு நீர்நிலைகளிலும் மீன் வளர்ப்பது வருவாய் தரும் சிறந்த வேளாண்மைத் துணைத் தொழிலாகக் கருதப்படுகிறது. நீர் வளமுள்ள பகுதிகளில் நீரை வீணாக்காமல் பயனுள்ள வகையில் பயன்படுத்த மீன்வளர்ப்பு ஏற்றதாகும் புரதச்சத்து மிகுந்த, எளிதில் செறிக்கக் கூடிய உணவு மீன் என்பதால் கலப்புணவில் அதன் பங்கு பெரிதும் வற்புறுத்தப் படுகின்றது.

வனவளம்

ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பங்கு மரங்களடர்ந்த காடுகள் இருத்தல் வேண்டும் என்பது வன இயல அறிஞர்களின் கருத்தாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் 17 விழுக்காடு அளவே காடுகள் இருப்பதாகக் கணக்கிட்டு இருக்கின்றனர். வேளாண்மை வளம் பெறமழை வளமும் தழை வளமும்தரும் காடுகள் பெரிதும் இன்றியமையாதவையாகும். வள்ளுவர் பகைவர்கள் புகாவண்ணம் 'அணிநிழல்' காடுகள் வளர்ப்பது நாட்டிற்கு அரணாக அமையும் என்றாரேனும் இன்று அவை வேளாண்மைக்கும் பாதுகாப்பாக அமைந்து வருவது கருதத்தக்கது.

காடுகளே அன்றி ஊர்ப்பொது இடங்களிலும் மரங்கள் வளர்த்ததை 'பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்றால்' என்பதால் அறியலாம். வேலிக் கால்களிலும் வெற்று இடங்களிலும் மரம் வளர்க்கும் நிலையிலிருந்து வேறுபட்டுப் பண்ணைகளில் சற்று மண் வளங்குன்றிய பகுதிகளிலும் பயிர்களைப் பயிரிடுவது போல மரங்களைப் பயிராக வளர்ப்பதை 'பண்ணைக்காடு வளர்த்தல்' (Farm Forestry) என்று குறிப்பிடுகின்றது அறிவியல், தென்னை, பனை, பாக்கு, மா, பலா முதலாய பயன்தரு பழ மரங்களேயன்றி இன்று மருந்து மரங்களும்(தைலமரம்), மூங்கில், சவுக்கு, வேல் முதலாய மரங்களும் வளர்க்கப்படுகின்றன.

மனையியல்

வேளாண்மையில் கடின உழைப்பு நீங்கலாக நடவு செய்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் விளை பொருள்களைப் பக்குவப்படுத்துதல், சேமித்து வைத்தல், பழுதுநேரா வண்ணம் அவற்றைப் பாதுகாத்தல், கால்நடைகளைப் பேணல், வேளாண் பணிகளைக் காலமறிந்து செய்யத் தூண்டுதல் போன்ற பெரும் பான்மையான பணிகள் பெண்களையே சார்ந்துள்ளன. இவைகளே அன்றி இல்லறத்தைச் செம்மையாக நடாத்தி வருபவர்களும் பெண்களே. உணவும் உடையும் உறையுளும் வேளாண்மையைச் சார்ந்தவையே ஆதலின் மனையியல் கல்வி வேளாண்மையின் ஓர் உறுப்பாகக் கருதப்படுகின்றது.

மனையியல் என்ற தனியான பாகுபாட்டைத் திருக்குறள் வகுக்கவில்லை எனினும் நூலில் பரவிக் கிடக்கும் கருத்துக்களைத் தொகுப்பின் மனையியல் கோட்பாட்டின் சாரமான பகுதிகளைக் காணலாம். உணவு, உடை, உறையுள், குழந்தை

வளர்ப்பு, குடும்ப நிருவாகம், நிறுவன நிருவாகம் என்பன மனையியல் கல்வியின் இன்றியமையாத கூறுபாடுகளாகும்[18]. குடும்ப நிருவாகத்தை இல்லறம், வாழ்க்கைத் துணைநலம், விருந்தோம்பல் முதலாய அதிகாரங்களிலும், குழந்தை வளர்ப்பை மக்கட்பேற்றிலும், உணவு முறைகளை மருந்து முதலாய அதிகாரங்களிலும் உடை, உறையுள் ஆகியவற்றைக் குறிப்புப் பொருளாக நூலுள் ஆங்காங்கேயும் உணர்த்தக் காணலாம். இல்லறத்தை நடாத்திச் செல்லும் பெண்களின்றி வேளாண்மை சிறக்காது என்பது சிற்றூர்களில் வாழ்ந்தவர்கள் நன்கு உணர்ந்திருப்பர் என்பது திண்ணம்.

சமுதாய இயல்—உழவர் சமுதாயம்

உழவர் சமுதாயம் அன்றுமுதல் இன்றுவரை புலவர்களால் புகழப்படுதற்குரிய கருப்பொருளாகவே இருந்து வந்துள்ளது. ‘உழுவார் உலகத்தார்க்கு ஆணி’, ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’, ‘பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்’, ‘இரவார், இரப்பார்க் கொன்று ஈவார்’, உழவினார் கைம்மடங்கின் இல்லை’ என்பன போன்ற புகழுரைகள் எல்லாம் அக் கடினமான தொழிலில் அவர்களைத் தொடர்ந்து ஈடுபடுத்தும் கருவிகளாகவே அமைந்துள்ளன. புகழுரைகளில் மயங்கியோ, அன்றி இயல்பாகவோ தங்களை வருத்திக் கொண்டேனும் உலகோரை வாழ்வித்து வரும் பெருமை உழவர்களையேசாரும். வேளாண்மைப் பழமொழிகள் பற்றிய ஆய்விலும் இத்தகைய கருத்தே வெளிப்படக் காணலாம்.[19]

இந்நிலையில் மாற்றம் கண்டு, அவர்தம் உடமையில் உரிமை பெறவும் பொருளாதாரத்தில் ஏற்றம் பெறவும் விளைவிப்பதை உரிய விலைக்கு விற்கவும் வாங்கவும் சிற்றூர் மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாகி உள்ளன. (Rural Development Scheme) அச்சிந்தனைகள் வள்ளுவத்திலும் பொலிவதைக் காணலாம்,

நில அளவு

உழுபவர்க்கே நிலம் சொந்தம் என்ற கருத்தை, ‘செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும்! என்ற குறள் குறிப்பதை நுணுகி ஆராய்ந்தால் உணரலாம். இல்லாளை நிலத்துக்கு உவமை கூறுகிறார் வள்ளுவர். இல்லாளைஆள்பவன் கணவன். நிலத்தை ஆள்பவன் - உழுபவன் - உழவன். இல்லாளுக்கும் அவளது கணவனுக்கும் உள்ள உரிமையைப் போல

(உரிமை உடையார்க்கே புலத்தல் கூடும்) நிலத்திற்கும் அதனை உழுபவனுக்கும் உரிமை இருத்தல் வேண்டும். ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு வாழ்கின்ற ஒருத்தியை, வேறு ஒருவன் உரிமை கொண்டாடுவது எவ்வாறு கூடாதோ, முறையற்றதோ அது-போல, ஒருவன் உழுதுவிளைவிக்கும் நிலத்தையும் வேறு ஒருவன் உரிமை கொண்டாடுவதும் முறையற்றதேயாகும். மாறாக உரிமை கொண்டாடினால், ஒருவன் மனைவியின்மீது வேறு ஒருவன் உரிமை செலுத்துவதுபோல் ஆகும். தமிழ்ப்பண்பாட்டின் அடிப்படையில் நோக்கினால் உழுபவர்க்கே நிலம் சொந்தம் என்ற இக் கருத்தோடு மற்றொரு குறிப்பும் வெளிப்படுவதை உணரலாம்.

நில அளவு

ஒருவன் ஒருத்தி என்ற கொள்கையை வற்புறுத்தியவர் வள்ளுவர். ஒருவன் வாழ்வுக்கு ஒருத்தி என்ற வரையறை கொண்டதுபோல, உழுகின்ற ஒருவனுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நிலமே இருத்தல் வேண்டும் என்ற வரையறை இருந்திருக்கக்கூடும். ஒருவன் இரண்டு மூன்று பெண்களை மணந்து கொள்ளுதல் தவிர்க்கப்படுதல் போல இருவர், மூவர்க்கு உரிய நிலத்தையும் ஒருவன் தனதாக்கிக் கொள்ளுதலும் தவிர்க்கப்படல் வேண்டும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற எண்ணிக்கையைப் போல ஒருவனுக்கு 'இவ்வளவு' நிலம் என்று கொண்ட நிலஅளவு இன்று புலப்படவில்லை, என்றாலும் ஒருவன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவே அவ்வளவாகவே இருந்திருத்தல் கூடும் என்று கருதலாம். இவ்விரு கருத்துக்களையும் உணர்த்தற் பொருட்டு இவ் வாழ்வியல் உவமையை 'உழவு' என்ற அதிகாரத்தில் கொடுத்துள்ளார் என்று கருதுவது பொருந்துவதாகும்.

வேளாண்மையில் பெரும்முன்னேற்றம் கண்டுள்ள, அதனால் பொருள் வளம் பெருகியுள்ள நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் ஒரு எக்டருக்கும் (2½ஏக்கர்) குறைவான நிலம் வைத்துள்ள உழவர் பெருமக்களே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது,

கூட்டுறவு

நில உரிமையும் அளவும் வரையறுக்கப் படுவதால் மட்டும் உழவர் நிலை உயர்ந்து விடாது. அவர்கள் விளைபொருள்களை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் வழிவகைகள் செய்து அவர்தம் பொருளாதார நிலையையும் உயர்த்தல் வேண்டும். அதற்கான அமைப்பினை ,கூட்டுறவு, என்று குறிப்பிடுகிறது இன்றைய வேளாண்மை அறிவியல். விளைவிப்பதிலும்

விற்பனை செய்வதிலும் ஒரு நிலையான தன்மை இல்லாத வேளாண்மையில் இன்று கூட்டுறவு அமைப்புகள் பெரிதும் உதவி வருகின்றன இம்முறையினைக் 'குறிஎதிர்ப்பு' என்ற சொல்லால் குறிக்கின்றார் வள்ளுவர். குறிஎதிர்ப்பு என்பது 'அளவு குறித்து வாங்கி, அவ்வாறு வாங்கியவாறே எதிர்கொடுப்பதாகும். 'பிறர் ஈவதை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள் தேவையான போது ஒன்றைப்பெற்று, தேவை நிறைவுற்ற போது திரும்பக் கொடுத் தார்கள். இதுவே கூட்டுறவின் தொடக்கம் எனலாம். 'ஒருவரை ஒருவர் நாடி வாழ்வது பிச்சையாகாது; கூட்டுறவு வாழ்க்கையின் விளக்கம் அது' 20 என்ற கூற்றும் நோக்கத்தக்கது. இன்று இந்நிலை வளர்ந்து வேளாண்மைக்கு வழித்துணையாக விளங்கி வருவது கண்கூடு.

இத்தகைய பாகுபாட்டில் இன்றைய வேளாண்மை வளர்ந்துள்ளது என்பதும், இவ்வளர்ச்சிக்கான அடிப்படை திருக்குறளில் காணப்படுகிறது என்பதும் தெளிவாகிறது. இவ்வடிப்படைக் கருத்துக்களை வேளாண்மை அறிஞர்கள் ஆய்வுக்கு உட்படுத்துவார்களாயின் மேலும் பல்துறை வளர்ச்சிக்கு இவை உதவும் என்பது திண்ணம்,

திருக்குறள் கூறும் தெளிந்த வேளாண்மை அறிவும் அதனைப் பயன்படுத்துவதற்கேற்ற வாய்ப்பும் உழவர் பெருமக்களுக்கு நல்கப்படுமாயின் 'தள்ளா விளையுளும், தக்காரும் தாழ்விலாச்செல்வரும்' நிறைந்த நாடாக ஒவ்வொரு நாடும் திகழும். அத்தகைய சூழ்நிலை உருவாகும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை உள்ளம் உணர்கிறது.

'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை'

குறள்-594

துணைபுரிந்த நூல்கள்

இக்கட்டுரைக்கு முன்னர் இதே தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரைகளும் நூல்களும்:

1. ராஜவேலு, கு வேளாண்மை,' திருக்குறள் கனிகள், பக்கம்-271 தமிழுறவு வெளியீடு, 1973.

2. கந்தசாமி இல, செ. திருக்குறளில் வேளாண்மை வேளாண்மைப்பல்கலைக் கழகம் வெளியீடு. -1973

3. டாக்டர் வீராசாமி, தா. வே., 'திருக்குறளில் உழவு' ஆய்வுக்கதிர், பக்கம்–65, மணிமேகலை வெளியீடு, 1974.

4. சண்முகம்பிள்ளை, மு. 'திருக்குறளும் வேளாண்மையும்' திருக்குறள் கருத்தரங்கக் கட்டுரைகள், பக்கம் 27, திரு வேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி1974.

மேற்கோள்

1. இராசமாணிக்கனர், மா. திருக்குறள் கனிகள்', பக்கம், 53, தமிழுறவு வெளியீடு, சென்னை, 1968

2. இராமச்சந்திரஞ்செட்டியார், சி. எம். திருவள்ளுவர் நினைவு மலர், பக்கம் 90 கழகவெளியீடு, சென்னை 1961.

3. The new book of knowledge, Vol. XIX-1971.

4. திருநாவுக்கரசு, க. த. திருக்குறள் நீதி இலக்கியம், பக்கம் 212, சென்னைப்பல்கலைக் கழக வெளியீடு, 1971.

5. பெரும்பாண் வரி-206, ஐங்குறு நூறு-408-4

6. குறள், 85, 1039.

7. குறள் : 959.

8 பட்டினப்பாலை, வரி: 283, 4,

9. புறநானூறு, பாடல்: 18, 'இலக்கியத்தில் நீர்வள நிர்வாகம்' வேளாண் பல்கலைக்கழக வெளியீடு (1974) (அச்சில்)

10. குறள்: 1147.

11. குறள்: 24.

12. வளரும் வேளாண்மை, காலாண்டு இதழ், தமிழ் நாட்டில் நெல் சாகுபடி, பக்கம்: 9, மலர் 2: இதழ் 1, 1976. த. நா. வேளாண்மைப் பல்கலைக்கழக வெளியீடு.

13. குறள் : 1039

14. கந்தசாமி, இல. செ வேளாண்மையும் பண்பாடும், பக்கம் 47. வேளாண்மைப் பல்கலைக்கழக வெளியீடு 1975.

15. குறள்: 1191.

16, முல்லைக்கலி, முக்கூடற் பள்ளு.

17. நற்றிணைப் பாடல்: 'சங்க இலக்கியத்தில் வேளாண்மை' (1975) வேளாண் பல்கலைக் கழக ஆய்வு.

18. இராசம்மாள் தேவதாசு டாக்டர். பி, மனையியல், பக்கம் 9, கலைக்கதிர் வெளியீடு, 1962.

19. சாலை' இளந்திரையன், டாக்டர், சமுதாய நோக்கில் பழமொழிகள் பக்கம்-126. 168, பாரி நிலையம் 1975.

20. மீனாட்சி சுந்தரனார், தெ. பொ. மீ., வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பக்கம் 192, பழனியப்பா சகோதரர்கள், 1957.

4. பதினெண்கீழ்க்கணக்கு

பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் சங்க இலக்கியங்கள் எனப்படுவன, இவற்றிற்கும் அடுத்த காலக் கட்டங்களில் தோன்றிய நூல்களின் தொகுப்பே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படுவன. நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது. ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது' திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பன அப்பதினெட்டு நூல்கள், இந்நூல்களைத் தொகுத்துரைக்கின்றது ஒரு பழம் பாடல்:

நாலடி, நான்மணி, நானாற்பது, ஐந்திணை, முப்
பால், கடுகம், கோவை, பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு

காலம்

இந்நூல்கள் அனைத்தும் சங்ககாலத்திற்குப் பிற்பட்டவை என்பதும் இவை பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர் பெருமக்களால் பாடப்பட்டவை என்பதும் முரண்பாடு இல்லாத கருத்துக்களாகும். இவற்றுள் சங்க இலக்கியத்தோடு வைத்து எண்ணப்படுவதும், காலத்தால் முற்பட்டதுமாகிய நூல் திருக்குறள் என்பதும் அறிஞர்களின் ஒப்பமுடிந்த கருத்தாக நிலவி வருகிறது. எஞ்சிய நூல்கள் அனைத்தும் களப்பிரர் ஆட்சிக்குப் பின் கி. பி, 5-ஆம் நூற்றாண்டு-தொடங்கி 6-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம்வரைத் தோன்றியவை என்று வரலாற்று அறிஞர்கள் கணித்துள்ளனர்.

அறம் உரைப்பவை

இந்நூல்கள் பெரும்பான்மையும் அறம் உரைக்கும் நீதி நூல்களாகும். அவற்றுள் அறம் உரைப்பவை பதினொன்றும், அகப்பொருள் நூல்கள் ஆறும், புறப்பொருள் பற்றிய நூல் ஒன்றும் ஆக அமைந்துள்ளன. இந்நூல்களுள் வேளாண்மைக் குறிப்புகள் ஆங்காங்கே சில காணப்படுகின்றன எனினும் அவை வேளாண் மையை விளக்கும் நோக்கத்தோடு எழுதப்படவில்லை என்பது தெளிவு. ஆயினும், அவற்றில் காணப்படும் சில குறிப்புகள் கொண்டு, அக்கால உழவர்தம் நிலை, உழவுத் தொழில் செய்ய நீர்வளம் அமைத்தல், கால்நடைச் செல்வங்களைப் போற்றிய முறை, சில பயிர்வகைகள் பற்றிய செய்திகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளப் போதிய சான்றுகள் உள்ளன.

உழவர்கள்

உழவர்கள் எனப்படுவோர் எப்போதும் தங்கள் விளை நிலத்தினைப் பற்றிய சிந்தனையிலேயே இருக்க வேண்டும்; அவர் களது தொழிலைக் குறைபாடின்றிச் செய்யச் சொந்தமாக உழவுமாடுகள் வைத்திருக்க வேண்டும் என்பன போன்ற நடை முறைக் கருத்துக்களையும், அவர்தம் இல்லத்திற்கு வருவோர்க்கு உணவளித்துப் பின்னர் உண்ணுவதே உழவர்தம் பண்பாடாக மிளிர்ந்தது என்பதையும் அவர்தம் பண்பாட்டை நிலைநிறுத்த உழவுத்தொழிலைச் செம்மையுற விருப்பத்தோடு செய்து வந்தார்கள் என்பது போன்ற வாழ்வியல் கருத்துக்களையும்,

'பயந்த விளைநிலம் உள்ளும் உழவன்'

-நாலடி 356

'எருதுடையான் வேளாளன்'

-நான்மணி 55

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்'

-திரிகடுகம் - 12

உழவின்கண் காமுற்று வாழ்தல்... ... ...
அழகு என்ப வேளாண் குடிக்கு.

-திரிகடுகம்-42

என்ற தொடர்களால் அறியலாம்.

கலப்பை நூல்

கலப்பை நூல் என்ற ஒரு நூல் இருந்ததை சிறுபஞ்ச-

மூலம் என்ற நூல் குறிப்பிடுகின்றது அந்நூலில் உழவர்க்கு உரிய இலக்கணமும் வகுக்கப்பட்டிருந்த குறிப்பும் காணப்படுகின்றது. உழவன் என்பவன், தனக்கென நன்செய் புன்செய் என்ற இருவகை நிலங்களையும் உடையவனாக இருத்தல் வேண்டும், அவற்றுள் நன்செய்யில் பயிர் செய்து, அறுவடை செய்த தானியங்களை மட்டும் பாதுகாத்துக் கொள்ளாமல், கால்நடைகளுக்காக வைக்கோலையும் பாதுகாத்து வைக்கவேண்டும். 'குண்டை வளம் குடி வளம்' என்பது பழமொழி, ஆதலின் உழவன் தன் உழவு மாடுகளைக் கண்ணேபோல் போற்றிக் காக்க வேண்டும். புன்புலமாகிய புன்செய் நிலத்தையும் நன்செய் நிலத்தைப் பேணுவதுபோல் பலசால் உழுது உழுது, எரு ஏற்றிப் பயிர் செய்யவேண்டும். இவ்வாறு நாளும் செய்பவனே நல்ல உழவனாவான் என்பதைக் கலப்பை நூல் குறிப்பிடுகின்றது.

> நன்புலத்து வையடக்கி,நாளும்மா டேபோற்றிப்
> புன்புலத்தைச் செய்து, எருப்போற்றி–இன்புலத்தின்
> பண்கலப்பை, என்றிவை பாற்படுப் பான்உழவோன்
> நுண்கலப்பை நூலோது வார்.
>
> -சிறுபஞ்சமூலம்-60

உழவர்க்கு ஆகாதன

உழவர்க்கு ஆகாதன பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. அக்காலத்தில் எந்திரக் கலப்பைகள் இல்லை. உழவுத்தொழிலில் எருதுகளே முதலிடம் பெறுபவை. எருது இல்லாமல் உழவுத்தொழில் செய்தல் துன்பம் மிகுந்த செயலாகும். உரிய பருவத்தில் விதைக்க முடியாமல் போய் விடும். அன்றியும் உழவர்கள் விதைமுதலை உண்ணக் கூடாது. உரிய பருவத்தில் நல்ல விதைகளை விதைத்தாலும் விளையும் பருவத்தில் போற்றிக் காக்காவிடின் பயனற்றுப்போய்விடும். ஆதலின் இக்குறைபாடுகள் இல்லா வகையில் உழவுத் தொழிலைச் செய்ய வேண்டும் என்பதை,

> 'எருதுஇல் உழவர்க்குப் போகுஈரம் இன்னா'
>
> இன்னா- 4
>
> 'வித்துக்குற்று உண்ணா விழுப்பம் மிக இனிதே'
>
> இனியவை-40
>
> .... பைங்கூழ்
> விளைவின்கண் போற்றான் உழவும்................

உள்ளன போலக் கெடும்' —திரிகடுகம்-59

ஆகிய தொடர்களால் அறியலாம்.

நிலவளமும் நீர்வளமும்

உழவர்கள் கடினமாக உழைத்தாலும் நிலவளம் இன்றிப் பயிர் வளம் சிறக்காது. நிலத்திற்கு ஏற்பவே விளைவு சிறக்கும் என்பதை உழவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

'நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்'
நாலடி—179

என்பது தமிழறிஞர்கள் கருத்தாகும்.

நல்ல நிலத்திலும் நன்றாக உழுது பயிரிட வேண்டும். குறைந்த ஈரத்தில் உழுது பயிரிட்டால் உழுத பயனைக் காண முடியாது. கற்றறிந்தவர்களாயினும் அவர்கள் வறுமை நிலையில் இருப்பார்களாயின் அவர்கள் சொல்கின்ற கருத்துக்கள் சமுதாயத்தில் சிறப்புப்பெறுவதில்லை; அதனால் பயனும் விளைவதில்லை, ஈரமில்லாமல் செய்யும் உழவும் அதுபோல் தான் என்பதை,

'புல்ஈரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல்'

எனக் குறிப்பிடுகிறது நாலடியார்.

நல்ல நிலத்தில், நன்முறையில் உழுது, உயர்வகைப் பயிர்களைப் பயிரிடுவது சிறப்பாகும். உணவுப் பொருள்களைப் பயிரிடுவதோடு வணிகப் பொருள்களையும் பயிரிடவேண்டும் என்பதையும் நிலவளத்திற்கு ஏற்பத் தேர்ந்து பயிர்களைப் பயிரிட வேண்டும் என்பதையும் 'நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்' என்ற நான்மணிக்கடிகை[1] யால் அறியலாம். அறுவடை முடிந்ததும் அரிகாலை அப்படியே காய விடுவதால் அதன் வேர்கள் காய்ந்து பயனற்றுப் போய்விடும். அறுவடை செய்தவுடன் ஒருமுறை நீர்ப்பாய்ச்சி உழுதுவிட்டால் அரிகாலின் வேர்கள் அழுகி நிலத்திற்கு நல்ல உரமாக அமையும் என்பதை 'அரிந்து அரிகால் நீர்ப்படுக்குமாறு, எனக் குறிப்பிடுகின்றது பழமொழி.[2] இவ்வாறு நல்ல நிலங்களைத் தேர்வதும் அவற்றிற்கு வளம் சேர்ப்பதும் வழக்கத்தில் இருந்து வந்துள்ளன.

இவற்றோடு மட்டுமின்றிப் பயிர் செய்ததற்கு ஏலாத நிலத்தை இனங்கண்டும் ஒதுக்கி உள்ளார்கள்.

நீர்வளம்

பயிர்த் தொழிலுக்கு உயிராக விளங்குவது நீர். நல்ல மழை வளம் உண்டானால் நீர் வளம் சிறக்கும் என்பது பொதுவான உண்மை. நல்ல மழை பெய்ய வேண்டுமாயின் நாட்டில் மக்கள் அறநோக்கும் முயற்சியும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். நல்ல முயற்சி உடையோர் வாழ்வதற்கு நல்ல அரசு ஆட்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாடும் நலம் பெற நல்ல மழை பெய்யும் என்பதை,

'மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை, மழையும்
தவம்இலார் இல்வழி இல்லை, தவமும்
அரசு இலார் இல்வழி, இல்லை அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல்.

—நான்மணிக்கடிகை-48

என்று குறிப்பிடுகின்றது.

நீர் நிலைகள்

மழை வளம் சிறக்கவில்லையாயினும் குளம் வெட்டி வைத்தல், கிணறுவெட்டிவைத்தல் முதலாய நீர்நிலைகள் அமைப்பதை மக்கள் அறச்செயலாகக் கருதினார்கள். இதனை, 'காவொடு அறக்குளம் தொட்டல் மிக இனிதே' என்று குறிப்பிடுகிறது இனியவை நாற்பது.

அறம் என்று கருதாமல் புகழ்மேல் நாட்டங்கொண்டார்க்கும், நீர்நிலைகளை அமைத்தல் புகழ் தருவதோடு புண்ணியமும் நல்கும் செயலாகும் என்ற கருத்து அறிவுறுத்தப்பட்டிருந்தது என்பதையும் அறிய முடிகின்றது. அறச்செயல்களைத் தொகுத்துரைக்கும்பொழுது புகழ்தரும் நற்செயல்கள், நல்ல கற்புடைய மனைவி, குடிநீர்க்கிணறு அமைத்தல் ஆகியவை இறவாப்புகழ் தருபவை என்று உரைக்கின்றது திரிகடுகம்.

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்—உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தினார்

நீர்மட்டம்

ஒவ்வொரு கிணற்றுக்கும் நீர்மட்டம் என்பது உண்டு. ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் நீர் உயராது, இறைக்காமலே பல நாட்கள் விட்டு வைத்தாலும் அந்த அளவிற்கு மேல் நீர் ஊறாது. அதனால் அவ்வப்பொழுது இறைத்து நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்திட வேண்டும் என்பதை உழவர்க்கு உணர்த்துகிறது பழமொழி. அதுபோல் செல்வமும் கொடுக்கக்-கொடுக்க வளரும் தன்மையது என்ற சமுதாயக் கருத்தினையும் புலப்படுத்துகின்றது.

இரப்பவர்க்கு ஈயக் குறைபடும் என்றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ? - பரப்பில்
துறைத்தோணி நின்றுஉலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!
இறைத்தோறும் ஊறும் கிணறு

—பழமொழி-378

பயிர்கள்

பயிர்களுள் குறிப்பாக நெல்லும் கரும்பும் பற்றிய குறிப்புகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. நெல்லையும் கரும்பையும் தத்தம் வயலில் பயிரிடுவதை உழவர்கள் பெருமையாகவும் கருதியுள்ளார்கள். விதைத்த நெல் முளைத்து வளர்ந்து மீண்டும் நெல்லாகப் பல்கிப் பெருகுவது போல் தந்தையறிவு மகனுக்கு வாய்க்கும் என்னும் உலகியல் உண்மையை,

'செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றும்அச்
செந் நெல்லே ஆகி விளைதலால்-அந்நெல்
வயல்நிறையக் காய்க்கும் வளவயல் ஊர
மகன்அறிவு தந்தை அறிவு'

—நாலடியார்-367

என விளக்குகிறது.

கரும்பு

செந்நெல்லும் செழுங்கரும்பும் நிலத்துக்கு அழகு தருவன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மக்களுக்கு அறிவுரை கூறக் கரும்பையே மிகுதியாகப் பயன் படுத்தி உள்ளன. இப்பயன் பாட்டை நோக்க மிகுதியாகப் பயிர் செய்யப்பட்ட நன்செய்ப் பயிர்களில் கரும்பே முதலிடம் பெறுகிறது எனலாம். கரும்பைப்

பயிர் செய்யும் முறை பற்றிய குறிப்புக்கள் இல்லையாயினும் பயிர் செய்த பிறகு அதனைப் பாதுகாப்பதில் உள்ள தொல்லையைக் குறிப்பிடுகிறது இன்னாநாற்பது. கரும்புத் தோட்டத்திற்கு வேலிகட்டிப் பாதுகாக்கவில்லையாயின் மிகுந்த சேதம் ஏற்படும் என்பதை 'சிறையில் கரும்பினைக் காத்து ஓம்பல் இன்னா' என்ற தொடர் அறிவிக்கின்றது.[4]

சுவை மிகுந்த கரும்பிலிருந்து தோன்றியது என்ற பெருமை உடையதாயினும் கரும்பின் மலருக்கு மணம் இல்லை. அதைப் போல் பெருமை சான்ற குடும்பத்தில் பிறந்திருந்தாலும் முயற்சி இல்லாதவர்கள் சிறப்படையமாட்டார்கள் என்ற கருத்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கரும்பை நுனியிலிருந்து அடிவரை தின்பது சுவை தருவதைப்போல நல்லார் நட்பு பழகப்பழக இன்பம் தரும் என்பதும் கரும்பைக் கடித்தாலும் சுவைதருவதைப்போல உயர்குடியில் பிறந்தவர்கள் பிறர் தமக்குத் துன்பமே தரினும், தவறியும் வழுவான சொற்களைப் பேசமாட்டார்கள் என்பதும் கரும்பு வழங்கும் கருத்துக்களாகும். அறுவடை செய்த கரும்பினைச் சாறு பிழிந்து அதிகாலையிலேயே கட்டி செய்து விட வேண்டும், இல்லாவிடின் உரிய 'பதம்' கெட்டுவிடும் என்ற குறிப்பு 'கரும்பு உழவர்கள்' கருத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும்.

எருதுகள்

உழவுத்தொழிலில், கடின வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது உழவுமாடுகள்; நன்றாக வேலைக்குப் பழக்கப்பட்ட மாடுகளை ஊரார் நன்கு அறிவர். அதேபோல் சரியாக வேலைக்குச் செல்லாத எருதுகளை வைத்துக்கொண்டு தொல்லைப்படுவதைவிடத் துன்பந்தருவது வேறொன்றும் இல்லை, அதனையும் ஊர் அறியும். தொழிலின் அன்றாடத் தேவைகளில் எருதுகள் முதன்மையான இடம் பெற்றிருந்ததால் உழவர்பெருமக்கள் எருதின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் நல்ல எருதுகளாகத் தேர்ந்து வாங்கிக் கொண்டார்கள் என்ற கருத்தினை அறிகின்றோம்.

'ஊரறியா மூரியோ இல்' —பழமொழி-102

'இன்னா, மூரி எருத்தால் உழவு' —இன்னா-20

'ஏருடையான் வேளாண்மை தானினிது'
— இனியவை-3

பசுக்கள்

உழவரின் இல்லந்தோறும் பசுக்கள் இருந்தன. கால மாற்றத்தால் உழவுத்தொழில் செய்யாதவர்கள்கூடப் பசுக்களை வைத்துப் பால் கறந்து விற்ற செய்தி அறியப்படுகின்றது. தான்செய்த வினையின் பயன் அவன் எங்கிருந்தாலும் அவனை வந்து அடைந்தே தீரும் என்ற கருத்தினை விளக்க ஒரு பசுங்கன்றினைப் பல பசுக்களிடையே அவிழ்த்து விட்டு விட்டாலும் அது தன் தாய்ப் பசுவினைக்கண்டு, சென்று அடைந்துவிடும் என்ற செய்தி உவமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு-

—நாலடி-101

என்பது பாடல். கன்றுகளையும் பசுக்களையும் கூட்டங் கூட்டமாக ஓட்டிச் சென்று விற்பனை செய்கின்ற சந்தைகளில் இந்நிலையினை இன்றும் காணலாம். பசுக்கள் ஒருபுறமும் கன்றுகள் வேறு ஒரு புறமும் கட்டி இருந்தாலும் கன்றினை அவிழ்த்து விட்டவுடனே சரியாகத் தன் தாய்ப் பசுவினைக் கண்டு பிடித்துப் பால் ஊட்டுவதைக் காணலாம். இதனால் மிகுதியாகப் பசுக்கள் வளர்த்த செய்தியினை உய்த்து உணர முடிகின்றது. பல்வேறு நிறங்களை உடைய பசுக்களையும் வளர்த்தார்கள் என்பதையும் குறிப்பால் உணர்த்தும் வகையில் ‘ஆவேறு உருவின ஆயினும் ஆபயந்த பால்வேறு உருவின அல்லவாம்’[5] என்ற தொடர் அமைந்துள்ளது. பல்வேறு நிறங்களை உடைய கலப்பினப் பசுக்கள் மக்களிடையே பரவத் தொடங்கிய காலம் என்பதையும் இக்குறிப்பு உணர்த்துகின்றது.

மக்களிடையே அற உணர்வு குறைந்தபோது அறநூல்கள் தோன்றுவது இயல்பு. மக்கள் பசுக்களைத் தெய்வமாகக் கருதிய காலம் கடந்து, அவற்றை வைத்துத் தங்களை வளர்த்துக் கொண்ட நிலையினைப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. பால் விற்பனை ஒரு பொது வணிகம் என்ற நிலை வளர்ந்தபோது வலிந்து பால்கறத்தல்,[6] கன்றுக்கு விடாமல் முழுமையும் கறத்தல், முதலாய செயல்கள் மேலோங்கி விட்டதைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறிவிக்கின்றன.

கன்று இறந்துவிடினும் அதன் தோலினைப் பாதுகாத்து,

அதனுள் வைக்கோல் திணித்துக் கன்றுபோல் செய்து, கறவையின் முன்நிறுத்தி, தோற்கன்று காட்டிப் பால்கறக்கும் நிலையும்[7] வளர்ந்திருந்ததை அறிய முடிகின்றது. பசுவளர்ப்பு நாட்டில் பெருகி இருந்தது என்பதையும் அவை முழுமையாக வணிக நோக்கில் வளர்க்கப்பட்டன என்பதையும் இப்பாடல்கள் நமக்கு அறிவிக்கின்றன.

இவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் கொண்டு இந்நூல்கள் தோன்றிய காலம் வேளாண்மைச் செழிப்பில்லாத காலம் என்பதையும், இதற்கு மழை பொய்த்துப் போதல் முதலாய இயற்கையின் மாற்றங்களே காரணமாக இருக்கலாம் என்பதையும் ஆய்ந்து அறியலாம். கலப்பை நூல்கள் போன்றவை தோன்றி இருந்தும் அவை இன்று கிடைக்காமல் போனது பெருங்குறையே. அவற்றைத் தேடிக் காணும் முயற்சியும் இன்றைய நிலைக்கு ஏற்பப் புதியன படைக்கும் முயற்சியுமே இன்று வேண்டப்படுவதாகும்.

மேற்கோள்

1. நான்மணிக் கடிகை—11
2. பழமொழி—299
3. பழமொழி—289
4. இன்னா நாற்பது—5
5. நாலடியார்—118
6. நாலடியார்—279
7. சிறுபஞ்சமூலம்—84

5. பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு
　　காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை
　　வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னம்
　　குளமெல்லாம் கடலன்ன
நாடெல்லாம் நீர்நாடு
　　தனையொவ்வா நலமெல்லாம்

—சேக்கிழார்

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவராகிய சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் ஒரு வரலாற்றுக் காப்பியம். தமிழகத்தின் பல்வேறு பகுதியிலும் வாழ்ந்த பல்வேறு தொழில் செய்யும் மக்களைப் பற்றிய வாழ்வியலைக் கூறுதலின் இக்காப்பியத்தை ஒரு தேசிய காப்பியம் எனவும் போற்றுவர் அறிஞர்.

சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கனாகிய அநபாய சோழனிடம் முதல் அமைச்சராய்ப் பணிபுரிந்தவர் என்பது வரலாற்று உண்மை. அம்மன்னனது ஆட்சிக் காலம் கி. பி. 1113 முதல் 1150 வரையான காலம். சேக்கிழார் அமைச்சராய் இருந்தமையால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளையும் நேரில் சென்று பார்க்கக்கூடிய வாய்ப்புக்கள் பல்வேறு சூழ்நிலைகளில் ஏற்பட்டிருக்கக்கூடும். அந்நிலையில் தமிழ்நாட்டின் இயற்கை வளத்தையும் தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகளையும் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதில் வியப்பில்லை.

அவர் தமது பெருங்காப்பியத்தில், 4287 பாடல்கள் கொண்ட அப்பெரு நூலில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும்

கோடிட்டுக் காட்டியுள்ள சில குறிப்புகள் கொண்டு அக்கால மக்களின் வேளாண்மை நுட்பங்களை அறிந்து கொள்ளலாம்.

பக்திப் பயிர் வளர்ப்பதும் கொண்ட குறிக்கோளில் தளராது நிற்பதை வற்புறுத்துவதுமே இந்நூலின் நோக்கம் என்றாலும் அதனை வெளிப்படுத்தும் முறையிலேயே வேளாண்மைக் குறிப்புக்களும் இணைந்து வெளிப்படுகின்றன. அன்றியும் தொண்டை நாட்டவராகிய குன்றத்தூர் சேக்கிழார் வேளாளர் மரபில் வந்தவர் ஆதலின், 'குலவிச்சை கல்லாமல் பாகம்படும்' என்பதற்கிணங்க அவர் வேளாண்மையில் கொண்டிருந்த ஈடுபாடும் அதன் இன்றியமையாச் சிறப்பும் அவர்தம் கவிதைகளில் வெளிப்படுகின்றன.

விளைந்த நன்செய் நிலங்களைப் பார்க்கின்றார் சேக்கிழார், நெல் வயலில் கதிர்கள் முற்றி விளைந்து விட்டன நெல் மணிகளின் பாரம் தாங்காமல் அப்பொன்னிறக் கதிர்கள் வளைந்து விட்டன. நன்றாக வளைந்து விட்டதால் நெல் தாள் களும் பழுப்பு நிறமாக மாறிவிட்டன, இக்காட்சியைக் காணுகின்ற அவருக்கு அடியவர்கள் திருக்கூட்டமே நினைவிற்கு வருகின்றன. இறைவன் மீது அன்புகொண்ட அடியவர்கள் பலர் ஒன்று கூடும் பொழுது ஒருவருக்கொருவர் தலைதாழ்த்தி வணங்கிக்கொள்வார் கள் என்பதனை அக்காட்சியோடு ஒப்பிட்டு,

> பத்தியின் பாலராகிப் பரமனுக் காளா மன்பர்
> தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
> மொய்த்தநீள் பத்தியின் பால் முதிர்தலை வணங்கி மற்றை
> வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்.

எனப்பாடுகின்றார்.

இவ்வாறு வேளாண்மையில் பெரிதும் நாட்டம் உடைய சேக்கிழார் சேர, சோழ, பாண்டிய தொண்டை நாடுகள் முதலா-கத் தமிழகம் முழுமையும் தம் நூலில் குறிப்பிட்டிருப்பினும், சிறப் பாகச் சோழ நாட்டையும் குறிப்பாகத் தான் பிறந்த நாடாகிய தொண்டை நாட்டையும் விரிவாகப் பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

காவிரி நாடு

சோழ நாட்டில் காவிரி பாய்வதால்தான் அந்நாட்டைச் 'சோழர் காவிரி நாடு' என்றே குறிப்பிடுகின்றார் சேக்கிழார். காவிரிப் புனல் கால்வாய்களாகப் பிரிந்து வயல்களில் எல்லாம்

பாய்கின்றது. உழவர்கள் வயலைப் பலசால் உழுகிறார்கள். பல முறை உழுது உழுது ஊறிய சேறு வெண்ணெய்போல் கட்டிகள் இன்றிக் கலக்கப்படுகிறது, நன்றாகக் கலங்கிய சேற்று வயலுக்குக் குறைவான நீர் பாய்ச்சினாலே போதும் என்பது உழவர்கள் அறிந்த தொழில் நுட்பமாகும். அச்சேற்று வயலில் மழைக் கடவுளை வணங்கி நாற்று நடுகிறார்கள். காவிரிநாடு முழுமையும் இக்காட்சியைக் காணலாம் என்பதை,

'உழுத சால்மிக ஊறித் தெளிந்தசேறு
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்
தொழுது, நாறு நடுவர் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்'

எனக் கவிநயம் தோன்றக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

இவ்வாறு நட்ட நெல்--கரும்பு போலவும், கரும்பு—பாக்குமரம் போலவும் வயல்களில் செழித்துப் பருத்து வளர்ந்து விளைந்துள்ளன. இதனைக் 'கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கன்னல் என்ன ....வயல் எல்லாம்' என்று குறிப்பிடுகின்றது பெரியபுராணம்.

மனைவளம்

இவ்வாறு எதிர்பாரத்த உயர்விளைச்சல் விளைந்ததால் அந்நாளில் மக்கள் நலம்பட வாழ்ந்தார்கள். அரசுக்குக் கொடுக்க வேண்டிய வரிகளை எல்லாம் முறையாகச் செலுத்தினார்கள். எஞ்சிய பொருள்கள் கொண்டு அறப்பணிகள் பலவும் செய்தார்கள். விருந்தினர்களைப் பேணினார்கள். உற்றார் உறவினர்களுக்கு உதவிகள் பல செய்தார்கள். தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டார்கள். அதற்கு விளக்கமாக அவர்தம் ஊர்களில் உள்ள வீடுகள் எல்லாம் உயர்ந்து ஓங்கிய மாடி வீடுகளாகக் காட்சியளித்தன. இதனை,

அரசுகொள் கடன்கள் ஆற்றி
மிகுதிகொண்டு அறங்கள் பேணிப்
பருவருங் கடவுள் போற்றிக்
குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி
விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம் நீடி
மலர்ந்துள பதிகள் எங்கும்

என்று குறிப்பிடுகின்றார் சேக்கிழார். இயற்கை ஒத்துழைக்க உழவர்கள் உரிய முறையில் பாடுபடுவார்களாயின் அறம் தழைப்பதும் பண்பாடு நிலைப்பதும் மனைவளம் சிறப்பதும் உறுதியாகும் என்பது வெளிப்படை.

இவ்வாறு சோழ நாட்டின், இன்றைய திருச்சி, தஞ்சை மாவட்டங்களடங்கிய சிற்றூர் பேரூர் வளங்களைப் பாடியுள்ளது போலவே, தொண்டை நாட்டின் நானில வளங்களையும் மிக விரிவாகப் பாடியுள்ளார்.

தொண்டை நாடு

தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்பது முதுமொழி. பல்லவர் ஆட்சிக்காலத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய அப்பகுதியின் இயற்கை வளத்தையும் பாலாற்றின் சிறப்பையும், செந்நெல்லும், செழுங்கரும்பும், செழுங்கரும்பைத் தொடர்ந்து வளர்ந்த கமுகும் தென்னையும் வாழையும் பயிராகிய மேன்மையையும் எடுத்து விளக்குகின்றார்.

ஓங்கு செந்நெலின் புடையன உயர்கழைக் கரும்பு
பூங்க ரும்புஅயல் மிடைவன பூகம், அப்பூகம்
பாங்கு நீள்குலைத் தெங்கு, பைங்கதலி, வண்பலவு
தூங்கு தீங்கனிச் சூதநீள் வேலிய சோலை

பெரிய—திருக்குறிப்பு-27

இப்பாடல் வருணனை போலத் தோன்றினாலும் பல்வேறு பயிர்களையும் பழ மரங்களையும் பயிரிடும் ஒரு கலப்புப் பண்ணையாக அக்காலத்துப்பண்ணைகள் (Mixed Farming) மிளிர்ந்துள்ளன என்பதைக் காணலாம். திணை மயக்கம் என்பதும் கலப்புப் பண்ணையின் தோற்றமேயாகும் இன்று இந்நிலை அறிவியல் அடிப்படையில் பெரிதும் வளர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வளம் செறிந்த நாடாக மட்டும் இல்லாமல் நாட்டில் ஆங்காங்கே உள்ள சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டும் இருந்தன என்ற உண்மை நிலையையும் அவர் சுட்டத் தவறவில்லை. முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் அடுத்த சிலபகுதிகள் வேனிற்கால வெப்பத்தால் பாதிக்கப்பட்டுப் பாலைநிலம்போல் காட்சியளித்தன என்றும் குறிப்பிட்டுள்ளார். நிலம் வளம் குன்றியபோதும் தொண்டை நாட்டு மக்களின் மனவளம் மட்டும் என்றும் குன்றியதில்லை என்பதை,

'தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர் வாழ் தொண்டை நாடு,

என்று குறிப்பிடுவதால் அறியலாம்.

தொண்டை நாட்டின் பொதுவான வளத்தைக் குறிப்பிட்ட அவர்' தொண்டை நாட்டின் பிற வளங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். தொண்டை நாட்டில் பாலாறு பாய்ந்து வளங்கொழித்ததால் முல்லைநிலமும் மருதநிலம்போலவே வளம் பெற்றது. முல்லை வாயில் என்ற முல்லைநில ஊரும் மருத வளம் பெற்று மருதம் சான்ற முல்லை நிலமாக மாறியதை வாசமென்மலர் மல்கிய முல்லைசூழ் மருதம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நானிலப் பிரிவு

நானிலங்களையும் பிரித்தறியும் வகையில் அவர் வெளிப்படுத்தும் கருத்துக்கள மனங்கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளன. மரஞ்செடிகொடிகளடர்ந்த பகுதி குறிஞ்சி. அதில் வண்டுகள் குறிஞ்சி யாழ் போல் ஒலிக்கின்றன. முல்லை நிலத்திற்கு முல்லைக் கொடிகளும் பருவமழை பெய்யும் கார்கால முழக்கமும் சிறப்புடையவை. நீர்வளஞ்சான்ற மருத நிலத்தின் மருத மரங்களில் கிளிகள் இணைந்து மகிழ்கின்றன. வளம் கொழிக்கும் பகுதியாதலின் பறவைகளும் மகிழ்கின்றன என்பதால் மக்களின் மகிழ்ச்சிக்கு அளவில்லை என்பது பொருள். நெய்தல் நிலத்தில் தாழை மரங்கள் வளர்ந்து மீன் உணக்குவோர்க்கு நிழல் செய்கின்றன.

குழல்செய் வண்டினம் குறிஞ்சி யாழ் முரல்வன குறிஞ்சி
முழவு கார்கொள் முல்லைகள் முகைப்பன முல்லை
மழலை மென்கிளி மருதமர் சேக்கை மருதம்.
நிழல்செய் கைதைசூழ் நெய்தலங் கழியன நெய்தல்

—(திருக்குறிப்பு-10)

குறிஞ்சிநிலம் (உடுப்பூர் வேட்டுவச்சேரி)

மலையும் மலைசூழ்ந்த பகுதியுமாகிய குறிஞ்சியைக் கண்ணப்ப நாயனார் வரலாற்றை விளக்கும் வகையில் குறிப்பிடுகின்றார். திருக்காளத்தி மலைக்கும் அருகிலுள்ள உடுப்பூர் என்ற அச்சிற்றூரில் வேடர் சேரியின் தோற்றம் அழகுறப் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. வேடர் வாழ்கின்ற பகுதியில் ஒவ்வொரு இல்லத்தின் முன்னரும் வேட்டைநாய்

கட்டப்பட்டிருக்கும். வீட்டைச் சுற்றி விளாமரங்கள் நிறைந்திருக்கும், அதில்வேட்டை வலைகள் தொங்கவிடப்பட்டிருக்கும்; பிற விலங்குகளைப் பிடிப்பதற்காகப் பார்வை மான்கள் கட்டப்பட்டிருக்கும். அச்சேரியில் அருகில் உள்ள பாறைகளில் குறிஞ்சி நிலத்தில் விளையும் ஐவனம் என்ற வறட்சி தாங்கும் மலை நெல் உலர்த்தப்பட்டிருக்கும் என்பதனை,

குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலியார்த்தி
வன்திரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும்

எனக் குறிப்பிடுகின்றார். புன்செய் நிலப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் அந்நாளில் வேட்டையாடியும் சிறிய அளவில் வேளாண் தொழிலில் ஈடுபட்டும் வாழ்ந்தார்கள் என்பதனை அறிய முடிகின்றது.

உணவு

குறிஞ்சி நில மக்களின் உணவு மிகவும் எளிமையானதும் இயற்கையானதும் ஆகும். மலை நெல், தினை, கிழங்கு, ஊன் முதலியனவே அவர்தம் உணவுப்பொருள்கள் ஆகும். செந்தினையை இடித்துத் தேனைக்குழைத்து உண்பதும், இறைச்சியைத் தேனில் கலந்து உண்பதும், விலங்கினச்சோறு (புலால் உணவு) உண்பதும், புற்றாஞ்சோறு சமைத்து உண்பதும் அவர்தம் உணவுப் பழக்கங்களாகும்.

மருதநிலம்- (ஆதனூர் புலைப்பாடி)

வயலும் வயல் சார்ந்த நீர் வளஞ்சான்ற பகுதியாகிய நன்செய் நிலம் நிறைந்த ஊர் ஆதனூர். சோழ நாட்டின் கொள்ளிடக்கரையில் அவ்வூரின் நிலவளமும் நீர்வளமும் சொல்லுந் தரமன்று. வயல் வளமும், தோட்டக்கால் நிலத்தின் பயிர் வளமும் அவ்வூர் மக்களைச் செல்வர்களாக்கி இருந்தது. அவ்வூரின் மாடங்களே அவர்தம் செல்வச் செழிப்பை வெளிக்காட்டி நின்றன என்பதனை,

வயல்வளமும் செயல்படுபைந் துடவையிடை வருவளமும்
வியலிடமெங் கணும்நிறைய மிக்கபெருந் திருவினவாம்
பெரிய - திருநாளை—5

எனக் கூறும் வகையில், நீர்வளம் நிறைந்திருப்பதால் முழுமையும் நன்செய்யாக்கி நெல்லே விளைவிக்காமல் தோட்டக்கால் நில

மாக்கி வணிகப் பயிர் செய்து வருவாயைப் பெருக்கிக்கொண்டார்கள் என்பதை 'துடவையிடை வருவளமும்' என்ற தொடரால் அறிய முடிகின்றது.

மருத நிலத்தில் மக்கள் உணவுப் பொருள்களை விளைவித்தது போக எஞ்சிய பகுதிகளில் மலர்ச்செடிகள் வளர்ப்பதில் நாட்டங்கொண்டார்கள் என்பதை அவர்களின் மலர் வகைப்பிரிவே உணர்த்துகின்றது.

கோட்டு மலரும், நிலமலரும், குளிர்நீர் மலரும், கொழுங்கொடியின்
தோட்டு மலரும், மாமலரும் சுருதிமலரும் திருவாயில்
பெரிய-முருக நாயனார்-8

என்பதால் அவர்தம் மலரியல் அறிவினை அறிய முடிகின்றது.

நெய்தல்-(நாகப்பட்டினத்து நுளைப்பாடி)

கடல் சூழ்ந்த பகுதியில் உள்ள சிற்றூர் நுளைப்பாடி என்பது. அதிபத்த நாயனார் வரலாற்றில் நெய்தல் நிலச் சிறப்புக்கள் குறிக்கப்படுகின்றன. பொதுவகையில் மீனவர் வாழ்க்கை துன்பந்தரும் வாழ்க்கையாகும். அது நிலையான வருவாயற்ற வாழ்க்கை.

பரதவர் குடிசை ஓரங்களில் மீன்வலைகள் உலர்த்தப்பட்டு விரிந்து கிடக்கும், மீனவர் கடலிலிருந்து பிடித்து வந்த மீனை விலை கூறி விற்பர். எஞ்சிய மீன்களைக் கடற்கரையில் உணக்குவர். மீன் உணங்கலைக் கவர வரும் குருகுகள், நாரைகள் முதலியவற்றை இளம் பெண்கள் விரட்டிப் பாதுகாப்பர். இத்தகையோர் எழுப்பும் ஓசையே அக்கடற்கரை முழுதும் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதை,

வலைநெடுந்தொடர் வடம்புடை வலிப்பவர் ஒலியும்
விலைபகர்ந்துமீன் குவைகொடுப் பவர்விளி ஒலியும்
தலைசிறந்தவெள் வளைசொரி பவர்தழங்கு ஒலியும்
அலைநெடுங்கடல் அதிரொலிக்கு எதிர்ஒலி அனைய
பெரிய—அதிபத்தர்—

எனும் பாடல் விளக்குகின்றது.

இக்குறிப்பால் பரதவ மக்கள் நாள் முழுதும் மீன்பிடிதொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதோடு அவர்தம் மகளிரும் மீன்

விற்பதற்கும் மீன் உணக்குதற்கும் துணை நின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

வேளாண் பெருமக்கள்

பெரிய புராணம் அறுபத்து மூவர் வரலாற்றைக் கூறுகின்றது. அதில் பதின்மூவர் எத்தொழிலைச் செய்தார்கள் என்பது தெறியைவில்லை. எஞ்சிய ஐம்பதின்மரில் மூர்க்கர், செருத்துணையார், வாயிலார், கோட்புலியார், சத்தி, தாயனார், இளையான்குடி மாறனார், திருநாவுக்கரசர், சாக்கியர், மானக்கஞ்சாறர், விறன் மீண்டார், முனையடுவார், ஏயர்கோன் கலிக்காமர் ஆகிய பதின்மூவரும் வேளாண்தொழில் செய்தோர் ஆவார் எஞ்சியவர்களுள் முடிமன்னர்கள் (5), குறுநில மன்னர்கள் (5), அந்தணர் (13), வணிகர் (5) முதலியோரும் பிறதொழில் செய்தோரும் அடங்குவர். இக்கணக்கு, அக்கால மக்கள் சமுதாயத்தில் வேளாண் மக்களின் இடத்தை மதிப்பீடுசெய்ய உதவும் குறிப்பாகக் கொள்ளலாம். இவர்களே அன்றி வேளாண்மைப் பணிசெய்த திருநாளைப்போவார் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது.

உழுது உண்ணும் உழவர்கள்

இலக்கிய வரிசையில் உழவர் சமுதாயத்தை ஆராயும் பொழுது சேக்கிழார் மட்டுமே மிகத்தெளிவாக, உழுது உண்ணும் சமுதாயத்தைத் தெளிவாகக் காட்டியுள்ளார். அவர்களின் நிலை இன்றும் அப்படியே இருப்பதை ஒப்பிட்டு நோக்குவோர்க்கு உண்மை புலப்படும். ஆதனூர் புலைப்பாடியில் உழுது உண்ணும் உழவர்கள் (உழவுக் கூலிகள்) வாழ்ந்தார்கள்.

வைக்கோலால் வேயப்பட்ட அவர்தம் பழங் கூரையில் சுரைக்கொடிகள் படர்ந்திருக்கும்; தெருவில் நாய்கள் கோழிகள் திரிந்து கொண்டிருக்கும். கருநிறமுடைய உழவர் சிறுவர்களும், அத்தெருவில் விளையாடிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் இரும்பாலான மணிகள் கட்டப்பட்டிருக்கும். உழத்தியர் தம் தோளில் மகவைக் கிடத்திக் கொண்டே தத்தம் செயலில் ஈடுபட்டு இருப்பார்கள். மருதமர நிழலில் நெல் குற்றுவர்.

உழவர்கள் சேவல் கூவுதற்கு முன்பே எழுந்து வயலில் செயல் செய்யப் புறப்பட்டு விடுவார்கள். அவர்கள் 'செறிவலித்திண் கடைஞர்' எனப்பட்டனர்.

இத்தகையோர் அமைப்பு சமுதாயத்தில் நிலைபெற்று விட்டது என்பதை உள்ளது உள்ளபடி குறிப்பிட்டுள்ளது போற்றுதற்குரியதாகும். காலவளர்ச்சியில் இத்தகைய பிரிவுகள் தவிர்க்க முடியாதவையாய் நிலை பெற்று விட்டன என்பதையே இக்-கருத்துக்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. பொருளாதாரச் சீரமைப்பாலன்றி இத்தகைய ஏற்றத் தாழ்வுகளைச் சரிசெய்ய இயலாது என்ற குறிப்பும் இக்கருத்துக்களில் மிளிர்வதைக் காணலாம்

சமுதாய இயல்

சேக்கிழார் வாழ்ந்த சோழ மன்னர்களின் முடி ஆட்சிக் காலத்தில் வேளாண்மை வளம் பெற்று இருந்தது என்பதை நூல் முழுமையும் காண முடிகிறது, வறுமை நிலைபற்றி எங்கும் காணப்படவில்லை. இளையான்குடி மாறனார் இல்லத்தில் வறுமை வந்துற்றதைக் குறிப்பிடுவது, கொண்ட கொள்கையில் உள்ள உறிதிப்பாட்டைக் காட்டுதற்கே ஆகும்.

மாறாகச் சாதி வேறுபாடுகள் கிளைத்துப் படர்ந்திருந்ததையும் அவற்றை மேலும் வளரவிடாது ‘ஒன்றே குலம்’ என்ற கொள்கையை நிலைநாட்ட சேக்கிழார் முயன்றுள்ளார் என்பதும் தெளிவாகிறது.

மக்கள் வளமாக வாழினும், கொள்கையில் தளர்ச்சி ஏற்-பட்டால் அதைத்தவிர்க்க அறத்தில் நம்பிக்கையும், கொண்ட குறிக்கோளை அடைவதில் விடாப்பிடியுமாக இருந்த பெரியோர்களின் வரலாற்றினையும் கூறியுள்ளார் ஆதலின் பெரியபுராணம் ஒரு சமுதாய மறுமலர்ச்சி இலக்கியம் எனின் மிகவும் பொருந்துவதாகும். இவ்விலக்கியம் அக்கால வேளாண்மை நுட்பங்களை, மக்கள் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப விதைத்து விளைத்துப் பயன் கொண்ட முறையினைத் தெளிவாகக் காட்டுகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. பெரியபுராணச் சொற்பொழிவுகள் - கழக வெளியீடு, 1975

2. தேசிய இலக்கியம்- அ. ச. ஞானசம்பந்தம், 1978

3. பெரியபுராண ஆராய்ச்சி- டாக்டர் மா. இராசமாணிக்கனார்

6. கம்ப ராமாயணம்

'எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ'
—கம்பர்

ஒரு நாடு வளம் நிறைந்த நாடாகவோ, மரங்களடர்ந்த காடாகவோ, மேடுபள்ளங்கள் நிறைந்த திருந்தா நிலமாகவோ இருந்தாலும் இருக்கலாம்; அந்நிலை பற்றி அந்நாட்டிற்கு உயர்வோ, தாழ்வோ உண்டாவதில்லை. அந்நாட்டு மக்களின் செயற்பாட்டில் உள்ள நன்மை தீமைகளைப் பொறுத்தே அந்நாட்டின் உயர்வு தாழ்வு கணிக்கப்படும் என்பது நாட்டைப் பற்றிய பண்டைய கருத்தாக இருந்தது. இது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்ககாலநிலை.

அடுத்த ஒரு காலக் கட்டத்தில் குன்றாத விளையுளும் குணம் நிறைந்த மக்களும் குறைவுபடாத செல்வர்களும் எதற்கும் பிற நாட்டை எதிர்பார்க்காத நிலைமையும் நிறைந்த நாடே மிகச் சிறந்த நாடு என்ற கருத்து நிலவியது. இது சங்ககாலத்திற்கும் பிற்பட்ட காலத்தின் நிலை. வள்ளுவர் உருவாக்க விரும்பிய நாடும் இத்தன்மையானதே.

இடைக் காலத்தில் 'எல்லாரும் எல்லா வகையான செல்வங்களையும் பெற்று இன்புற்று வாழவேண்டும்; அத்தகையதொரு வாய்ப்பை உருவாக்கித் தரும் நாடே சிறந்த நாடு என்று கருதப்படுகிறது. இது சோழர் காலநிலை. இன்றைக்கு எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட நிலை.

தனி மனிதனைப் போற்றுதலுடன், இத்தகைய சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனைகள் வளர்ந்திருந்த சோழப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் கம்பர் தோன்றினார். கல்வியில் பெரியவராகிய அவர் ஆசை மீதூர வடமொழியில் வால்மீகி எழுதிய

இராம காதையைத் தழுவித் தமிழில் காவியம் செய்தார். அவர் பெயரோடு அக்காவியம் இணைந்து கம்பராமாயணம் என்னும் பெயர் பெற்றது. இன்று உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

செல்வமும் செல்வாக்கும் பேரும் புகழும் பெருமையும் நிறைந்திருந்தாலும் அறவழியில் வாழ்ந்தாலன்றி அவர் தம்முடிவு நல்லதாக இருக்காது என்பதை வலியுறுத்தி, 'அறம் வெல்லும்' என்ற கொள்கையை நிலைநாட்டி உள்ளார் கம்பர். 'பிறர்மனை நயப்போர் கிளையொடுங் கெடுவர்' என்பது இக்காவியத்தின் பண்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகு நீதியை நிலைநாட்ட எழுந்த காவியத்தில், காவிய அமைப்புக்கேற்ப அயோத்தியும் சரயு நதியும் மக்கள் வாழ்வும் அவர்தம் பண்பாடும் குறிக்கப்பட்டிருந்தாலும், கம்பர் வாழ்ந்த சோழ நாட்டின் கழனிகளும் காவிரியாறுமே அக்குறிப்பில் வெளிப் படுவதைக் காணலாம். அக்காவியப் போக்கில் ஆங்காங்கே குறிப் பிட்டுள்ள வேளாண்மைக் கருத்துக்கள் இக்கால வேளாண்மைக்கு வழிவகுக்கக் கூடும் என்ற அடிப்படையில் அவர்தம் வேளாண்மைக் கருத்துக்கள் தொகுத்து விளக்கப்பட்டுள்ளன.

நீர்வளம்

ஒரு நாட்டின் செழிப்பிற்கு நிலவளத்தைக் காட்டிலும் நீர் வளமே முதன்மையாகக் கருதப்படுகின்றது. 'நீரின்று உலக இயக்கம் நடைபெறாது' என்ற பழந்தமிழ்க் கருத்தும் ஈண்டுக் கருதத்தக்கது. காவியங்களைப் பாடிய கவிஞர்களும் பிற்காலத்தில் தலபுராணங்களைப் பாடிய புலவர்களும் ஒவ்வொரு நாட்டிற்கும், ஏன் ஒவ்வொரு ஊருக்கும் ஆறு இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்தும் பொருட்டு ஆற்றுப்படலம் என்ற ஒரு பகுதியை முதலில் வைத்துப் பாடியுள்ளார்கள். 'ஆறு இல்லா ஊருக்கு அழகுபாழ்' என்ற கருத்துத் தோன்றியதும் இவ்வடிப் படையிலேயே ஆகும். நீர் வளத்தைப் பெருக்கிக்கொள்ள வழி வகைகள் செய்துகொள்ள வேண்டும் என்பதே இப் படலங்கள் குறிப்பிடும் உள்ளார்ந்த கருத்துக்களாகும்.

கோடையில் நீரைச் சுமந்து சென்ற மேகங்கள் பருவம் தொடங்கியதும் மழையைக் கொட்டுகின்றன. மலையின் மீது பெய்தமழை மாநிலத்தில் தரையை நோக்கி ஓடி வருகின்றது. மண் குளிர்ந்து ஆறு நிறைந்து, ஏரி, குளங்கள் கிணறுகள் நிறைந்து எங்கும் நீர்வளம் பெருகுகின்றது.

பருவமழை

வேளாண்மைக்குப் பருவமழை மிகவும் இன்றியமையாதது. அம்மழை வேளாண்மைத் தொழிலுக்குப் பெரிதும் உதவுவதால் அதனைத்‘தொழில் மழை’ என்றே அறிஞர்கள் பெரிதும் போற்றினர். பருவந்தவறாத மழையும் அதனால் பெருக்கெடுத்து ஓடும் ஆறுகளும் நாட்டைச் செழிப்பாக்கு கின்றன. தூவும் மழைத் துளிகள் மண்ணை நனைத்துக்குளிர் வித்து பசுமையை உண்டாக்குகின்றன. பெருமழைகள் ஆற்றையும் ஏரியையும் குளத்தையும் கிணற்றையும் நிரப்பு கின்றன. அந்நாட்டில் பெய்த நன்மழையை,

‘உள்ளி உள்ளவெல்லாம் உவந்து ஈயும்
வள்ளி யோரின் வழங்கின மேகமே’

எனக் குறிப்பிடுகின்றார் கம்பர். வள்ளல்கள் தம்மை மறந்து உள்ள பொருள்களை எல்லாம் கொடுத்து, அதனைப் பெற்றவர் கள் அடையும் மகிழ்ச்சியைக் கண்டு, பெருமகிழ்ச்சி அடைவார்கள். அவர்களைப்போல் மேகமும் தன்னிடமுள்ள நீரை எல்லாம் வாரி வழங்கி மாநிலத்தைச் செழிப்பாக்கித் தன் வருவாய்க்கும் வள்ளல் தன்மைக்கும் வழி கோலிக் கொண்டது.

ஆற்றுநீர்

பெருகிய மழைநீர் எங்கும் பரந்தது. செல்லும் வழியில் பல்வேறு பொருள்களை அடித்துக்கொண்டு சென்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலங்களிலும் பெய்த மழையால் பெருக்கெடுத்து ஓடிய வெள்ளம் ஆங்காங்குள்ள பொருள்களையும் அடித்துச் சென்றது. அதனால் முல்லை குறிஞ்சியாகவும் மருதம் முல்லையாகவும, நெய்தல் மருத மாகவும் காணப்பட்டது. ஒருநிலத்தின் பொருள் ஆற்றுநீரால் வேறு நிலத்திற்கு அடித்து வரப்பட்டது என்பதை-இயல்பாக நிகழக்கூடியதை மிக அழகுபட விளக்கி உள்ளார் கம்பர்.

முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருத மாக்கி
எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடு மாறு நீரால்
செல்லுறு கதியில் செல்லும் வினையெனச் சென்ற தன்றே

நீர் நிர்வாகம்

பெருகிவரும் ஆற்றின் நீரை அப்படியே பாயவிட்டால்

பயிரும் பாழாகும்; நீரும் வீணாகும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. உழவுத்தொழிலில் வல்லமை பெற்ற உழவர்கள் நிறைந்த நாட்டில், நீர் வீணாக்காமல் பயன் படுத்தப்படுவது கண்கூடு. உழவர்கள் ஆற்று நீரைக் கால்வாய்களில் பிரித்துச் செலுத்தி, அதிலிருந்து சிறு வாய்க்கால்கள் வழியே வயல்களுக்கு நீரைப் பாய்ச்சினார்கள் என்பதை,

'கோத்தகால் ஒன்றில் ஒன்று பிரிந்து சென்றது'

என்பதால் அறியலாம். இதனால் நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்தினார்கள் என்பதோடு, நீரை நிருவகிக்கும் முறையிலும் தெளிவினைப் பெற்றிருந்தார்கள் என்பதும் உறுதியாகிறது.

இவ்வாறு பாய்ச்சிய நீர் தவிர எஞ்சிய நீர் கடலில் கலக்க விரைந்து செல்கின்றது. அதுகடலில் கலக்குமுன் ஆறுகள் ஏரிகள்' குளங்கள், கிணறுகள் ஆகியவற்றை நிறைத்துச்செல் கின்றது. வேளாண்மை செய்த நிலங்கள் தவிர, எஞ்சிய நிலங்களைப் பயன்தரும் வகையில் பூஞ்சோலைகள். மரக்காடுகள், வனங்கள் வைத்துப் போற்றினர் மக்கள். ஆறு இச்சோலைகள் வழியேயும் பாய்ந்து சென்றதால் நாட்டில் மரங்கள் அடர்ந்து விளங்கின.அவை மழைவளத்திற்கு அடிப்படையாகவும்இருந்தன. உடம்புக்கு உயிர்போல உலகுக்குநீர் என்பதை விளக்குகிறார் கம்பர்.

தாதுகு சோலை தோறும், சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கைதோறும், புதுமணல் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக வனந்தொறும், வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே

நிலவளம்

நீர்வளம் முதன்மையானது என்றாலும் நிலமும் வளமாக இருந்தாலன்றி வேளாண்மை சிறக்காது நீர்வளமும் நிலவளமும் ஒருங்கு இயைந்து நாடு சிறப்புற்று விளங்கிய வகையை. நாட்டின் செழிப்பைப் பாடல் ஒன்று அழகுபட வரிசைப்படுத்தி உரைக்கின்றது. அந்நாட்டின் மண்ணும் மணம் கமழ்கிறது என்பதை அப்பாடல் மூலம் நன்கு அறியலாம்.

நெல் சிறப்பாக விளைந்து வரப்போரங்களில் முத்துக்கள் போல் சிதறிக் கிடக்கின்றன (முத்துப் பிறக்கின்ற இருபது இடங்களில் நெல்லும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது). நீர் மடைகளில் சங்குகள் ஊர்ந்து செல்கின்றன. வாய்க்காலின் கரைகளில்

ஆறு அடித்து வந்த செம்பொன் துகள்கள் கிடக்கின்றன. எருமை சிறு நீர்நிலைகளில் கழுநீர்ப் பூக்களை மேய்ந்து இன்புறுகின்றன. நெல் வயல்களில் அன்னக் கூட்டங்கள் மேய்கின்றன. கரும்பில் தேனீக்கள் செந்தேன் அடைகள் கட்டி இருக்கின்றன. சோலைகளில் வண்டினங்கள் மகிழ்ந்து ஒலி செய்து கொண்டுள்ளன. இவ்வாறு இயற்கை மணம் எங்கும் கமழ்வதை,

வரம்புஎலாம் முத்தம், தத்தும் மடையெலாம் பணிலம்,
மாநீர்
குரம்புஎலாம் செம்பொன், மேதிக் குழியெலாம்
கழுநீர்க் கொள்ளை
பரம்புஎலாம் பவளம், சாலிப் பரப்பெலாம் அன்னம்,
பாங்கர்க்
கரும்புஎலாம் செந்தேன், சந்தக் காவெலாம்
களிவண் டீட்டம்

உழவும் விளைவும்

கம்பர் வாழ்ந்த நாடு சோழ நாடு ஆதலின் நன்செய் உழவே குறிப்பிடப் படுகின்றது. நெல் அறுவடைக்குப் பின் வயலை உழுகின்றனர், அவ்வயல்களில் நீர் மிகுதியால் தாமரை மலர்கள் பூத்துள்ளன. மீன்கள் துள்ளித் திரிகின்றன. ஆமைகளும் குடி இருக்கின்றன. சங்குகள் முதிர்ந்ததால் முத்துக்களும் கிடக்கின்றன. உழுபடையாகிய கலப்பை உழுது இவற்றையெல்லாம் தள்ளுகின்றது. அதனால் தாமரைத் தண்டுகள் ஒடிகின்றன. மீன்கள் அறுப்பட்டுத் துடிக்கின்றன. ஆமைகள் ஒடுங்கி ஓடுகின்றன. முத்துக்கள் சேற்றில் ஆழ்கின்றன. சங்குகள் ஒதுக்கப்பட்டு வயலின் ஓரத்திற்கு ஒதுங்குகின்றன. இவ்வாறு உழுது பயிரிடப்படுகின்றது. வளம்சான்ற நிலமாதலின் நெய்தல், குவளை, தாமரை முதலிய மலர்களே களைகளாக வளர்ந்தன. அவற்றைக் களைந்தனர் விளைஞர்.

களைகளைந்து நட்டவற்றைப் பேணி வளர்க்கின்றனர். நெல்மணிகள் நன்கு விளைந்தன. அறுவடை நடந்தது. வயலில் அரிந்த நெல்தாளைக் கட்டாகக்கட்டி எடுத்துச் சென்று களத்தில் அடுக்கினர். காளைகளைப் பூட்டித் துவைப்பித்து உதிரும் நெல்மணிகளைக் குவித்தனர். வறியவர்க்குக் கொடுத்தது போக எஞ்சியதை வண்டியில் ஏற்றி வீடு சேர்த்தனர்.

மருதநிலப் பயிர்கள்

கம்பர் குறிப்பிடும் நாடு, வளம்கொழிக்கும் மருதநிலமாத-

லின் நெல்லொடு கரும்பும் நிறைய விளைந்தன. கரும்பாலைகளின் ஒலி மருத நிலம் முழுவதும் ஒலித்துக் கொண்டு இருந்தது என்பதால் கரும்பு பயிரிட்ட அளவையும் அவற்றை வெல்லமாக்கிப் பயன் கொண்டதையும் அறியலாம்.

இவைகளேயன்றிக் கழனிகளில் விளைந்த பல்வேறு வகையான தானியங்களும், சோலையில் வளர்ந்த பயன் மரங்களின் கனிகளும் கொல்லையில் விளைந்த பயறு வகைகளும், செடிகொடிகளில் விளைந்த காய்கனிகளும், நிலத்தடியில் விளையும் கிழங்கு வகைகளும் போற்றப்பட்டன. மலர்களை நாடித் தேனை உண்ணும் வண்டுகள் என உழவர்கள் நிலமறிந்து பயிரிட்டு பயன் பெற்றனர் என்பதைக் கவி நயம் தோன்ற விளக்குகின்றார் கம்பர்.

> கதிர்படு வயலில் உள்ள, கடிகமழ் பொழிலின் உள்ள
> முதிர்பயன் மரத்தின் உள்ள, முதிரைகள் புறவி னுள்ள
> பதிபடு கொடியி னுள்ள, படிவளர் குழியி னுள்ள
> மதுவளம் மலரின் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்

திணை மயக்கம்-வேளாண்மை வளர்ச்சி

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய அந்தந்த நிலத்திற்குரிய பயிர்வகைகள், மரஞ்செடிகொடிகள் முதலியவற்றை அவ்வந் நிலத்தில் பயிரிடுவது இயல்பான ஒன்றாகும். மாறாக ஒரு நிலத்தில் வளரும் பயிரை வேறு தன்மையுடைய நிலங்களில் வைத்து வளர்க்க முயல்வது வேளாண்மை வளர்ச்சியைக் காட்டுவதாகும். மருதநிலப் பெண்கள் பாக்கினைக் கொழித்துப் பக்குவப்படுத்தும்பொழுது நெய்தல் நில முத்துக்கள் கலந்திருந்தன என்று குறிப்பிடுவதும், குறிஞ்சிநில மக்கள் வள்ளிக்கிழங்கு தோண்டும்பொழுது கிடைத்த மணிகளை எறிய அது மருத நில மரங்களில் பட்டது என்பதும், பிறவும் நானிலங்களின் தாவரங்களும் ஒன்று மற்றொன்றில் பயிராகியது என்பதை அறிவிக்கின்றன. இக்கருத்துக்கள் காவியச் சுவை தருவன என்று கொள்வதை விட நாட்டிற்கு வளம் சேர்க்கும் நல்ல சிந்தனைப் போக்கு என்று கொள்வதே பொருத்தமானதாகும்.

வேளாண் விளைபொருட்கள்

மருதநில மக்களுக்கு அந்நிலத்து விளை பொருள்களேயன்றிப் பிற நிலத்து விளை பொருள்களும் தேவையாதலின் நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் பொருள்களைக் கொணர்ந்த

னர். அதேபோல் மருதநிலப் பகுதியில் விளைந்து எஞ்சிய பொருள்களையும் பிற நிலத்திற்கு எடுத்துச் சென்று விற்றனர். விளை பொருள்களை ஏற்றிய வண்டிகள் வருவதும் போவதுமாக இருந்ததையும் அவற்றில் எள்ளும், தினையும், இறுங்கும் (சோளம்), சாமையும், கொள்ளும் முதலாய குறிஞ்சி முல்லை நில விளைபொருள்களும் நெய்தல் நிலத்து உப்பும் வந்து சேர்ந்ததையும் கம்பர் சுவைபடக் குறிப்பிடுகின்றார்.

எள்ளும் ஏனலும் இறுக்கும் சாமையும்
கொள்ளும் கொள்ளையில் கொணரும் பண்டியும்
அள்ளல் ஓங்கு அளத்து அமுதின் பண்டியும்
தள்ளும் நீர்மையின் தலைமயங்குமே.

(ஏனல்-தினை. இறுங்கு-சோளம், பண்டி-வண்டி, அள்ளல்-சேறு அளம்-உப்பளம், அமுது-உப்பு)

ஒரு நாட்டில் வறுமை இல்லாத நிலையை உருவாக்கவும், பொருளாதாரத்தை வெளிப்படுத்தவும் வேளாண்மையே இன்றியமையாதது என்பதை விளை பொருள்களின் பெயர்களைக் குறிப்பிடுவதன்மூலம் வெளிப்படுத்துகிறார். இக்கருத்து இன்றைய பொருளியல் அறிஞர்களும் போற்றக் கூடிய கருத்தாகும்.

கால்நடைகள்

பயிர் விளைவிப்பதற்கு அடுத்த நிலையில் உழவர்தம் வருவாய்க்குக் கால்நடைகளைப் போற்றி வளர்ப்பதையே பெருந்தொழிலாகக் கொண்டிருந்தனர். எருமையின் கிடாய் (கன்று)களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதும், சேவல்களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதும் உழவ இளைஞர்களின் விருப்பமான செயல்களாகும். இவை கால்நடை வளர்ப்பிற்கு ஊக்கந்தரும் வகையில் பண்டையோர் அமைத்துக் கொண்ட முறை என்பதே கருத்தாகும். ஆட்டுக்கிடாய்ச் சண்டையும் ஏறுதழுவல் முறையும் (மஞ்சுவிரட்டு) குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில் அவை இரண்டும் சிறப்பிடம் பெறவில்லை என்பதைக் காட்டுகின்றது. அக்காலத்தில் உழவுக்கு எருதுகளைக்காட்டிலும் எருமைகளே பயன்படுத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மருதநிலம் நீர்வளம் நிறைந்ததாகலின் குறிப்பாக எருமைகள் வைத்துப் பால்வளம் பெருக்க ஏற்றதாக இருந்தது. கால்நடைகளுக்கென மேய்ச்சல் தரைகள் விடப்பட்டிருந்தன,

அவற்றில் மேய்ந்த கால்நடைகள் நிழலிடை உறங்கின. எருமை கள் கருமேகமெனப் பருத்து வளமாக இருந்தன; குளங்களில் படிந்து குளிர்ந்தன. கன்றுள்ளி வீட்டளவும் பால் சொரியும் வளமுடையனவாக விளங்கின. பெண்கள் கறவைகளைப்பேணி வெண்தயிரைக் கடைந்து பயன் கொண்டனர்.

மனையியல்

தமிழர்தம் பண்பாட்டில் சிறப்பிடம் பெறுவது விருந்தோம்பும் பண்பாகும். 'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என்பது வள்ளுவம். மனைக்கு விளக்கமாக விளங்கும் மகளிர் கல்வியும் செல்வமும் பெற்றுச் சிறந்து விளங்கினர். வறியவர்க்கு ஈவதை யும் விருந்தோம்புவதையும் தம் தலையாய கடமைகளாகக் கொண்டு இல்லற வழிநின்று இனிய தொண்டாற்றினர் என்பதை,

'பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்துமன்றி விளைவன யாவையே'

எனும் பாடலால் அழகுற விளக்குகின்றார் கம்பர்.

உழவர்தம் உணவில் பல்வேறு பொருள்களும் கலந்திருந்தன. அவை சுவைமிக்க கலப்புனவாய் இயல்பாய் அமைந்திருந்தன. 'முந்துமுக் கனியின் நானா முதிரையின் முழுத்த நெய்யின் செந்தயிர்க் கண்டம் இடைஇடை செறிந்த சோறு' என்பதால் முக்கனிகளும், பருப்புவகைகளும் நெய்யும் தயிரும் கலந்த நல்லுணவை மேற்கொண்டார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

சமுதாயவியல்

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறைவனாக விளங்குவது இயற்கை. அவனது நாடு நலம் திகழும் நாடாக விளங்கத் 'தள்ளாத விளையும் தக்காரும், தாழ்விலாச் செல்வரும்' நிறைந்து இருத்தல் வேண்டும். அவ்வாறு நிறையுமானால் 'உறு பசியும் ஓவாப்பிணியும்' இன்றி நாட்டு மக்கள் நலமுடன் வாழ்வர்.

மக்களின் அடிப்படைத் தேவைகளாகிய உணவும் உடையும், உறையுளும் தடையின்றிக் கிடைக்கச் செய்யும்

தலைவனே சிறந்த தலைவனாவான். கம்பர் காலம் முடியாட்சிக் காலம் ஆதலின் அவர் காட்டும் மன்னனும் (தயரதன்) முடிமன்னனே ஆவான். சிறிதளவு நிலம் வைத்துக் கொண்டுள்ள சிறு உழவன் பருவமழையும் பட்டமும் பார்த்துப் பயிரிட்டு, நாள்தோறும் அப்பயிர்களைக் கண்ணுங்கருத்துமாகப் பேணிக் காப்பது போலத் தயரதன் என்னும் உழவன் குடிமக்கள் ஆகிய பயிர்களைப் பேணிக் காத்தான் என்று கம்பர் குறிப்பிடு கின்றார்.

'வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காத்து
இனிது அரசு செய்கிறான்' என்பது பாடலின் அடி.

கம்பர் வாழ்ந்த சமுதாயத்தில் நிலக்கிழார்களும் அவர்களிடம் உழவுப் பணி செய்த உழவர்களும் இருந்ததை வரலாறு அறிவித்தாலும் அவர் காண விரும்பிய சமுதாயத்தில் உழவு செய்வோர் எல்லாரும் உழவர்களாகவே இருந்தனர். நிலத்தில் இறங்கித் தொழில் செய்பவர்களாகவே இருந்தனர். நாடு வளம் பெற அனைவரும் உழைக்க வேண்டும் என்பதும், அவ்வுழைப்பின் பயன் பரவலாக அனைவரையும் சென்று அடைய நாட்டுத் தலைவன் பாடுபட வேண்டும் என்பதும் அவரது கருத்தாகக் கொள்ளலாம், மக்களாகிய உயிர்கள் எல்லாம் வாழ்வதற்கு இடமாக மன்னன் உடம்பாக இருந்தான் என்பதை உயிரெல்லாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்' என்று குறிப்பிடுகின்றார். உழுதொழிலையும் அதனைச் செய்யும் உழவர்களையும் போற்றிட வேண்டும் என்பதும் அவரது உட்கருத்தாக ஒளிர்கின்றது.

ஆதலின் கொள்வாரும் கொடுப்பாரும் இல்லாத சமநிலைச் சமுதாயம் உருவாகப் 'பொருள் வளம்' பெருக்கல் வேண்டும், அதற்கு வேளாண்மையே உறுதுணையான தொழில் என்பதும் அத்தொழில் செம்மையுற நீர் வளம் மிகவும் இன்றியமையாதது என்பதும் முதன்மைக்காரணிகளாகக் கொள்ளப்படுகின்றன. உழவர்கள் உழவுத் தொழில் ஒழிந்த எஞ்சிய நேரங்களில் கால்நடை வளர்ப்போ பிறவோ செய்து வளம் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடப் படுகின்றது.

இத்தகு நுட்பங்கள் போற்றப்படுமானால் ஒரு நாடு வறுமையில்லாத, பகையில்லாத, பொய்யில்லாத, அறியாமை இல்லாத நாடாக அறிவும், திருவும் நிறைந்த நாடாகத் திகழும் என்பது திண்ணம்.

7. முக்கூடற் பள்ளு

சமுதாய வளர்ச்சியில் காலத்திற்குக் காலம் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயல்பே. பழையன கழித்தலும் புதியன புகுத்தலும் கூட சில காலக் கட்டங்களில் தேவைப்படுவதை சமுதாயம் உணர்ந்து வருகின்றது. அத்தகு சமுதாய உணர்வுகளின் வெளிப்பாடுகள் பல வடிவங்களைப் பெறுகின்றன, அவற்றுள் ஒன்று இலக்கியம்.

இலக்கியங்களும் காலத்திற்குக் காலம் புதிய புதிய கருத்துக்களைத் தாங்கி வருகின்றன. காதலையும் வீரத்தையும் கருவாகக் கொண்ட இலக்கிய வரிசையில் தொழிலையும் கருவாகக் கொண்டு இலக்கியங்கள் தோன்றலாயின. அவற்றுள் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய முதல் இலக்கியம் 'ஏர் எழுபது' ஆகும். அதற்கு அடுத்தபடியாக வேளாண் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய இலக்கியங்கள் 'பள்ளு' இலக்கியங்களே ஆகும்.

பள்ளு-இலக்கியம்

பள்ளு இலக்கியங்கள் உழவுத்தொழில் செய்யும் பள்ளர்களின் வாழ்க்கை முறையை நாடகப் போக்கில் கூறுவன. இறைவனையும் அரசனையும் தலைமக்களையும் தலைவர்களாகக் கொண்டு நூல்கள் தோன்றிய காலத்தில் உழவுத்தொழில் செய்யும் ஒருவனைத் தலைவனாகக் கொண்டு எழுந்ததே இலக்கிய உலகில் ஒரு புரட்சி எனலாம். பள்ளனும் அவனது இரு மனைவியருமே நாடகத்தில் வரும் பாத்திரங்கள். நூல்கள் தோன்றிய அந்தந்தப் பகுதிகளில் ஓடும் ஆறும் ஊரும் பிற இயற்கை வளங்களும் வேளாண்மைச் செய்முறைகளும் நூலின் பாடுபொருளாக அமையும், இவை பள்ளு நூல்களின் பொதுவியல்பாகும்.

பள்ளு நூல்கள்

பள்ளு நூல்கள் விரிந்த பரப்பை உடையன. ஊரின் பெயராலும் மனிதர்களின் பெயராலும் அவை இயற்றப்பட்டுள்ளன. சில அச்சேறியும் பல இன்னும் அச்சிடப்படாமலும் உள்ளன. 'முக்கூடற்பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, குருகூர்ப் பள்ளு, திரு-மலைப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, வைசியப் பள்ளு, வடகரைப் பள்ளு, உரிமைநகர்ப் பள்ளு, சீர்காழிப் பள்ளு, கதிரை மலைப் பள்ளு, பருளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, சேற்றூர்ப் பள்ளு, திருவிடை மருதூர்ப் பள்ளு, மாந்தைப் பள்ளு, கூடற் பள்ளு, தஞ்சைப் பள்ளு, தென்காசிப் பள்ளு, கொடு-மாளூர்ப் பள்ளு, இராசைப் பள்ளு, புதுவைப் பள்ளு, முக்கூடற் பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, சண்பகராமன் பள்ளு, வையாபுரிப் பள்ளு, திருச்செந்தில் பள்ளு, செங்கோட்டுப் பள்ளு, சேமூர்ப் பள்ளு என பள்ளு நூல் ஏராளமாக உள்ளன. 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்ற உண்மையை இந்நூல்களின் எண்ணிக்கையிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

முக்கூடல் பள்ளு

பள்ளு நூல்களுள் சிறப்பிடம் பெறுவது முக்கூடல் பள்ளு நூலாகும். முக்கூடல் என்பது திருநெல்வெலி மாவட்டத்தில் பொருநை, சிற்றாறு, கோதண்டராமநதி ஆகிய மூன்று ஆறுகள் கூடுமிடத்தில் உள்ள ஓர் ஊராகும். பள்ளர் என்னும் பெயர் உழவுத் தொழில் செய்யும் ஓர் இனத்தைக் குறிக்கும் பெயர். முக்கூடலில் உள்ள பள்ளர் தம் வாழ்வை நாடகப் போக்கில் விளக்கும் நூலாதலின் இந்நூல் முக்கூடற் பள்ளு எனப்பட்டது.

17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய முக்கூடற் பள்ளு ஒரு சுவை மிகுந்த நாடக நூலாகும். இந்நூலின் வாயிலாக, சமுதாயத்தில் உழவர்கள் பெற்ற இடம், அவர்தம் அகவாழ்வு, புறவாழ்வு, பயிர்த் தொழிலின் உயர்வு, அத்தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை அறிந்துகொள்ளலாம். இந்நூலை வேளாண்மைக் கண்ணோட்டத்தில் நோக்குவதால், காலந்தோறும் வேளாண்மையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றை அறிந்துகொள்வதுடன் அம்மக்களின் பண்பாட்டையும் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வகையில் முக்கூடற்பள்ளு ஓர் காலக்கண்ணாடியாக விளங்குகின்றது.

உழவர் சமுதாயம்

இன்றைக்குச்சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர், இவ்விலக்கியம் தோன்றிய காலத்தில் நிலத்திற்கு உரிமையுடையோர் ஒரு சிலராகவும் அதில் உழுது வாழ்வோர் பலராகவும் இருந்தனர். நிலத்துக்கு உரிமையுடையோர் நிலக்கிழார் எனப்பட்டனர், அவர்கள் தங்கள் பண்ணையத்தைக் கவனிக்க மேலாட்களை அமர்த்தியிருந்தனர். அம்மேலாட்கள் பண்ணையார் எனப்பட்டனர். இப்பண்ணையார்கள் பல ஆட்களை வைத்துக் கொண்டு வேளாண்மை செய்தனர். அவ்வாட்களே உழவர்கள் ஆவார்கள். அவர்கள் சமுதாயத்தில் மிகவும் பின் தள்ளப்பட்டு கடையினராகக் கருதப்பட்டனர், உழைப்பதும், உண்பதும், அவ்வப்போது ஏற்படும் உணர்வுகளை நிறைவு செய்து கொள்வதுமே அவர்களின் வாழ்க்கை நிலையாக இருந்தது. அவர்கட்கு உயர்ந்த குறிக்கோளோ, சிறந்த வாழ்க்கை முறையோ, எதிர்காலத் திட்டமோ இருந்ததாகச் சிறியகுறிப்பேனும் காணப்படவில்லை.இத்தனைக்கும் மேலாக அவர்கள் சமுதாயத்தில் தீண்டப்படாதவர்களாகவே கருதப்பட்டனர். அவர்கள் உழுது விளைத்த நெல்லை உலகம் உண்டு வாழ்ந்தபோதிலும், அவர்கள் அருகில் வருவதும் அவர்களைத் தொடுவதும் இழிவு என்று கருதினர். அதனை

‘பக்கமே தூரப்போயும்
தக்கசோறு என்வெள்ளாண்மை
பள்ளா பள்ளா என்பர்
மெய் கொள்ளாதவர்

முக்கூடற்பள்ளு-15

என முக்கூடல் பள்ளு எடுத்து இயம்புகிறது.

இவ்வுழவர்கள் தாம் செய்யும் தொழிலில் தெளிந்த அறிவும் அனுபவமும் பெற்றிருந்தனர். பருவ மழையை எதிர்நோக்கியும் ஆற்றுநீர், குளத்து நீரைப் பயன்படுத்தியும் பயிரிட்டனர். பருவம் வர மழை வேண்டிக் கடவுளை வணங்குவதும். மழைபெய்து வெள்ளம் பெருகி வயல்களில் பாய்வதும், பயிரிடுவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். நாற்றுவிட்டதும் வயல்களை நடவுக்கு அணியமாக்குவர். ஆட்டெரு செயற்கை உரம்போல பயிர்கட்கு உடனடியாகப் பயன்படும் என்ற உண்மையை நன்முக உணர்ந்திருந்த அவர்கள் வயல்களுக்கு ஆட்டுக்கிடை வைத்தனர்.

உழவுமுறை

பெரும் கட்டிகள் சிறுசிறு கட்டிகளாகும் வரை உழுதால் எருவும் இடவேண்டுவதில்லை என்ற வள்ளுவத்தின் வாய் மொழிற்கேற்ப

'முந்தித் தரிசை அடித்து மறித்து முச்சாலடித்து உழவு'
நாலும் உழுதும் உழவும் திருந்தப் பரம்பு மூன்றும் உதவி,

என தரிசு உழவு, மீண்டும் மூன்று உழவு, பின்னர் நாலு உழவு' பின்னர் பரம்படித்தல் எனப் பலமுறை உழுது வயல்களை நிரவினர், வயல்களில் சேறு நிறைந்திருப்பின் தண்ணீர் விரைவில் வற்றாமல் நிற்கும் என்ற வேளாண்மை நுட்பத்தை நன்கு உணர்ந்து உழவு செய்தனர். இதனையே செங்கோட்டுப் பள்ளு என்னும் நூல் மேலும் சற்று விரிவாக விளக்குகின்றது.

'முந்தித்தரிசடித்து, முச்சாரியாய் மறித்து
நைந்திடவே சேறுகலக்கி, நயமாக நாலுழவு
பிந்தஉழுது, கட்டிபேர்த்து, மிதித்து அழுத்திப்
பந்தியாக வரப்புபடுத்தி, கொத்தித் திருத்தி

திரைகொண்டு அங்கங்கு தண்ணீர்தேங்க வடித்துவிட
நிறைநிறையாய் மடைகள் நீக்கிப் பரம்படித்து
குறைவில்லாமல் குண்டினில் கொளுஞ்சிபோட்டு மிதித்து
விரைநெல்லின் கோட்டை எடுத்து வந்து'

விதைத்து நாற்றுவிட்ட செய்தியை நயம்பட உரைக்கின்றது, இன்று இம்முறைகளைக் 'கட்டுக் கோப்புச் சாகுபடி முறைகள்' என்று புதிய பெயரிட்டு அழைக்கின்றோம். நாற்று நடுபவர்கள் வரிசையாக நின்று பாடலோடு பயிர் நட்டனர். நெருக்கி நட்டு நெல்லைப் பெருக்கு என்னும் புதுமொழி அவர்கட்குப் பழமொழியாகும். ஏனெனில் 'தென்னைக்குத் தேரோட, வாழைக்கு வண்டியோட, நெல்லுக்கு நண்டோட' இடைவெளி விட்டு நடவேண்டும் என்பது அவர்கள் வழிவந்த பழமொழி-யாகும். பயிர்கள் நடவேறித் தழைத்து, புடைவிட்டு, அன்னம் பிடித்து, கதிர் சாய்ந்து, பழுத்து நிற்கின்றன, அறுத்து, கட்டடித்துக் கடாவிட்டு, வைக்கோலைப் பிரித்தெடுத்துப் பொலி தூற்றுவார்கள். அளந்து அளவு கூறுவான் உழுதவன், மூட்டைகளை வண்டியிலேற்றி வீட்டிற்கு எடுத்துச் செல்வார் பண்ணையார். விளைந்த நெல்லின் ஒரு பகுதியைக் கோயில் பணிக்காகக் கொடுப்பதும் பெருவழக்கமாக இருந்து வந்துள்ளது.

நெல்லின் பெயர்கள்

முக்கூடற் பள்ளில் ஏராளமான நெல்லின் பெயர்கள் காணப்படுகின்றன. முத்துச்சம்பா, பூஞ்சாலி, பூம்பாளை, மச்சு-முறித்தான், சொறிக் குரும்பை, வெள்ளச்சம்பா, மறுவல்லிச்-சம்பா, நீலச்சம்பா, வில்லுன்றிச்சம்பா, கடுக்கன்சம்பா, இராசவாணன், கதலிவாழை, சித்திரக்காலி, வாலான், சிறை மீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச்சம்பா, முத்துச்சம்பா, மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், மூங்கிற்சம்பா, கத்தூரிச்சம்பா, வாணன்நெல், காடைக் கழுத்-தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, வெள்ளைச்சம்பா, புத்தநெல், கருங்குறுவை, புனுகுச்சம்பா, செந்தாழை, பெரு வெள்ளை, முத்தவெள்ளை, பச்சை, மூவன், இட்டமலை, முண்டன் என்பன அவற்றுள் சில.

சம்பாவில் 32 வகை

பொன்னுச் செல்லையன் என்பவரால் 1850-ம் ஆண்டில் இயற்றப் பெற்ற செங்கோட்டும் பள்ளு எனும் நூல் 1967 ஆம் ஆண்டில் ஏட்டுச் சுவடியிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. அந்-நூலுள் சம்பா நெல்லில் மட்டும் 32 நெற்பெயர்கள் காணப்படு கின்றன. சன்னச்சம்பா, சம்பங்கிப்பூச்சம்பா, மல்லிகைப்பூச் சம்பா, அல்லிப்பூச்சம்பா, குங்குமச்சம்பா, மங்கலச்சம்பா, முத்-துச்சம்பா, முல்லைச்சம்பா, பெங்களூர்ச்சம்பா, ஈர்க்குச்சம்பா, தோட்டச்சம்பா, வெள்ளைச்சம்பா, கல்லுண்டைச் சம்பா, அன்னச்சம்பா, அழகுச்சம்பா, புழுகுப்பக்கிரிச் சம்பா, கொக்குச்சம்பா, தெக்கலூர்ச்சம்பா, கோடைச்சம்பா, சூரியச்சம்பா, அடுக்குச்சம்பா, புன்னைப்பூச்சம்பா, கம்மஞ்சம்பா, மகிழம்பூச்சம்பா, வனசச்சம்பா, மிளகுச்சம்பா, சீரகச்சம்பா, கார்த்திகைச் சம்பா, இலுப்பைப்பூச்சம்பா, தேவன் சம்பா இவை களே அன்றி சீராமபாணம், மங்கலப்பிச்சை, முள்ளுக்குறுவை, மட்டக்காரு, அழகியமணவாளன், ராமலட்சுமணன் முதலான பெயர்களும் காணப்படுகின்றன.

பெயர்க் காரணம்

இந்நெற்பெயர்களில் பெரும்பாலானவை நெல்லின் தன்-மையை ஒட்டி அமைந்த பெயர்களாக உள்ளன. மிகுந்த நீர்ப் பெருக்கிலும், வெள்ளத்திலும் விளைவது வெள்ளச்சம்பா, காதில் அணியும் கடுக்கன் போல் இருப்பது கடுக்கன் சம்பா, காடையின்

கழுத்து நிறம் போன்று இருப்பது காடைக்கழுத்தன், ஊசி போன்று இருப்பது வாலான், சீரகம் போல் இருப்பது சீரகச் சம்பா, மூக்கு நீண்ட நெல் மூக்கன், வாழைக்குலைபோல் மணி கள் நிறைந்திருப்பது குலைவாழை என்ற விளக்கம் அவ்வப் பெயர்களிலேயே அமைந்திருப்பதைக் காணலாம். இப்பெயர் கள் கொண்டு அம்மக்கள் நெற்பயிரிடுவதில் பெற்றிருந்த அறிவின் நுட்பத்தை அறியலாம்.

கால்நடை வளம்

இன்றுபோல் எந்திரக் கலப்பை இல்லாத காலமாதலின் அன்று உழவுக்கு எருதுகள் இன்றியமையாதவையாய் இருந்தன. நெல்லிற்குப் பெயரிட்டது போலவே இவ்வெருதுகட்கும் அவற்றின் தரம், அவை வாங்கப்பட்ட இடம், அவற்றின் இனம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு பெயரிட்டிருந்தனர். குடை போன்று வளைந்த கொம்புள்ளது குடைக்கொம்பன், செம்புள்ளி களையுடையது செம்மறையன், வளர்ந்த குளம்புகளையுடையது குளத்துக்குளம்பன், குற்றாலத்தில் வாங்கியது குற்றாலன், மங்க லான நிறமுடையது மடப்புல்லை, கருந்தோல்மேல் வெண்ணிறம் கொண்டது மயிலை, கொம்பில்லாதது மோழை, கழற்சிக்காய் போன்ற கண்ணுடையது கழற்சிக்கண்ணன், ஒருகொம்புடையது ஒற்றைக்கொம்பன் என்பன எருதுகட்கிடப்பட்டிருந்த பெயர் களுள் சிலவாகும். ஒரு பண்ணையத்திலுள்ள எருதுகள் ஒவ்வொன்றிற்கும் இவ்வாறு பெயர் வைத்திருப்பது, அவர்கள் அவற்றைத் தனிக்கவனம் செலுத்திப் பேணிக் காத்தமையைப் புலனாக்குகின்றது. ஏனெனில் கால்நடைகள் உழவர்க்குப் பெருஞ்செல்வமன்றோ!

கால்நடைப் பருவங்கள்

கால்நடைகளின் பருவங்களையும் பாகுபடுத்திப் பிரித்து அறிந்துள்ள சிறப்பு போற்றுதற்குரியதாகும். ஐந்து வயதுவரைக் கன்று என்றும் ஐந்து முதல் பத்து வயதுவரைக் காளை என்றும் பத்து முதல் பதினைந்து வயது வரை எருது என்றும் அதற்குமேல் உயிரோடு இருக்கும்வரைக் கிழடு என்றும் பருவ வரையறை கொண்டது குறிப்பிடத் தகுந்ததாகும்.

அன்றியும் எல்லாப் பற்களும் முளைத்திருக்குமானால் அதற்கு ஐந்து வயது ஆகிவிட்டது என்றும் அதற்குப் பிறகு, கொம்பில் விழும் ஒவ்வொரு கோட்டிற்கும் ஒவ்வொரு ஆண்டைக்

கூட்டி வயதைக் கணக்கிடலாம் என்றும் கண்ட கால்நடை அறிவியல் நுட்பம் போற்றுதற்குரியதாகும். அறிவியல் அறிஞர்களும் வியக்கும் கருத்துக்கள் கொண்ட கீழ்க்கண்ட பாடல் வேளாளர் புராணத்தில் உள்ளது.

கன்றுஐந்து, காளை ஐந்து, கதிளருது ஐந்து, திண்மை
மென்றிடும் கிழம் ஐந்தாகும், மிகுந்ததும் கிழத்தில்சேர்க்க
சென்றிடும் பல்லில் ஐந்தும், செறிமருப்பு ஓங்குதோறும்
துன்றிடும் வடிக்கு ஒன்றாய்த் தூக்கிநீ ஆண்டுகொள்ளே

வேளாளர் புராணம்-ஏர்ப்படலம்-36

உழவுக் கருவிகள்

அன்றைய உழவுக் கருவிகளின் பெயர்களும் நூலுள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. பெரும் பண்ணையங்களில் கருவிகள் ஒவ்வொன்றிலும் எண்ணிக்கை மிகுந்தவை இருந்தன. கலப்பைகள், மேழிகள், நிலத்திற்குத் தகுந்தாற்போல் உழவு செய்யச் சிறியதும் பெரியதுமாக கொழுக்கள், எருதின் கழுத்தில் பூட்டும் நுகங்கள், கலப்பையையும் நுகத்தையும் இணைக்கும் வடக்கயிறு, கலப்பை சேறு நிறைந்துவிடின் அதைக் குத்தி உழுத சேற்றை நிரவப் பரம்புகள், பரம்பையும் நுகத்தையும் இணைக்கும் நீண்ட மரமாகிய வள்ளக்கை முதலியன சில உழுகருவிகளாகும். இவை அக்கால மக்களால் சீர்திருத்தி அமைக்கப்பட்ட வேளாண் கருவிகள். இக்கருவிகள் தனிமனித உழைப்பிற்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

அழகிய கற்பனை

நூலில் வரும் அழகிய கற்பனைகள் எண்ணுந்தோறும் இன்பம் பயக்கின்றனவாக உள்ளன, முக்கூடற்பள்ளின் காவியத் தலைவனுடைய இரண்டு மனைவியரும் ஆசூரின் வடகரையிலும் தென் கரையிலும் பிறந்து வளர்ந்தவர்கள். தங்கள் நாட்டுப் பெருமையை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் கூறிக்கொள்கின்றனர். வடகரைப் பகுதியில் மரங்கள் மிக்கிருந்தன. தென்னையின் குலைகளைப் பாக்குமரங்கள் தாங்கி நிற்கின்றன. பாக்குமரக் குலைகளை மா மரங்கள் தாங்கின. மாங்கனிகளைப் பலா மரங்கள் தாங்கின. பலாப் பழங்களை வாழை மரங்கள் தாங்கமுடியாமல் தாங்கி வளைந்து விட்டன. அவ்வாழை மரங்களை மாதுளைக் கொம்புகள் தாங்கி நின்றன.

''மீது உயர்ந்திடும் தெங்கிள நீரை
மிடைந்த பூகம் சுமந்துதன் காயை
சூதம் ஒன்றிச் சுமக்கக் கொடுக்கும்
சூதம் தன்கனி தூங்கும் பலாவின்
ஓதும் அந்தப் பலாக்கனி வாழை
உளுக்கவே சுமந்து ஒண்குலை சாய்க்கும்
மாதுளங்கொம்பு வாழையைத் தாக்கும்
வளமை ஆசூர் வடகரை நாடே (25)

(பூகம்-பாக்குமரம், மிடைந்த-நெருங்கிய, சூதம்-மாமரம்)

தென்கரைப் பகுதியில் செடிகொடிகள் அதிகம். தாமரை தன் இலைகளை நீட்டி இஞ்சியைத் தொட்டது. இஞ்சியோ மஞ்சள் இலைகளைத் தொட்டிழுத்தது. மஞ்சள் நெல் அளவிற்கு வளர்ந்து நெல்லோடு அளவளாவியது. நெல் கரும்பென வளர்ந்து கரும்போடு இணைந்து நின்றது.

பங்கயந்தலை நீட்டிக் குரம்பினில்
பச்சை இஞ்சியின் பார்சடை தீண்டும்
தங்கும் இஞ்சியும் மஞ்சள் கழுத்தைத்
தடவி மெள்ளத் தொடும் அந்த மஞ்சள்
அங்கசைந்திடும் காய்கதிர்ச் செந்நெல்
அளாவி நிற்கும் அச் செந்நெலும் அப்பால்
செங்கரும்புக்குக் கைதரும் போல்வளர்
சீவலமங்கைத் தென்கரை நாடே (26)

(பங்கயம்-தாமரை, குரம்பு-வயல், பார்சடை-நீண்ட இலை)

நாட்டின் வளம் மிகுதி என்பதையும், மரங்கள் ஒன்றை ஒன்று தாங்குவது போல மக்கள் ஒருவரை ஒருவர் தாங்கிக்கொள்கிறார்கள் என்பதையும் இவ்வழகிய கற்பனை காட்டுகிறது என்பதைக் காட்டிலும், பொருள் வளத்தால் வளர்ந்தவர்கள் வளராதவர்களை அழுத்திக்கொண்டே இருந்திருக்கின்றார்கள் என்பதை இக் கற்பனை எண்ணத் தூண்டுகிறது என்றுங் கூறலாம். அதேபோல் இஞ்சியும் மஞ்சளும் பிறவும் ஒன்றோடொன்று அளாவுவதுபோல மக்கள் ஒருவரோடுஒருவர் இணைந்து வாழுகிறார்கள் என்பதைக் காட்டிலும் சமுதாயத்தில் அழுந்திக் கிடக்கும் மக்கள் வளர்ந்தவர்களுக்கு இணையாக நாமும் வளர வேண்டும் என்ற துடிப்போடு எட்டிப் பிடிக்க முயலுகிறார்கள் என்ற குறிப்பு உள்ளதாகவும் கருதலாம்.

உடைமையும் உரிமையும்

17-ஆம் நூற்றாண்டில் உழுபவர்கள் வாழ்க்கை சீர்பட்ட நிலையில் அமையவில்லை. நிலம் உடையவர்களுக்கும் நிலத்தை உழுபவர்களுக்கும் பெரியதோர் இடைவெளி இருந்து வந்துள்ளது. உடையவர்கள் அவ்வாறு இருப்பது தங்கள் உரிமை என்றும், உழைப்பவர்கள் காலமெல்லாம் உழைக்க வேண்டியது அவர்கள் கடமை யென்றும் கருதினார்கள். நிலக்கிழாருக்கும் உழுபவர்க்கும் இடையே திரையாகப் பண்ணையார்கள் இருந்து வந்துள்ளனர். அவர்கள் நிலக்கிழாரின் அன்பையும் உதவியையும் பெற உழவர்களை உயரவிடாமல் வைத்திருந்தனர். அவர்கள் இவ்விருவருக்கும் இடையே நிரந்தரமானதொரு இடைவெளியை ஏற்படுத்திவிட்டனர் அவ்விடைவெளியைப் போக்கும் ஆற்றல் உழைப்போர்க்கு இல்லை. இடைவெளியே வேண்டாம் என்ற எண்ணம் உயர்ந்தோர்க்கும் எழவில்லை. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட சங்ககாலத்திலும் கம்பர் வாழ்ந்த 12-ஆம் நூற்றாண்டிலும் உழவுத்தொழில் போற்றப்பட்ட அளவிற்கு பிற்காலத்தில் போற்றப்பட வில்லை. இன்று நிலை மாறிவிட்டது என்றாலும் முற்காலம்போல உழைப்பைப் போற்றும் காலம் இன்னும் வரவில்லை என்பது மிகையன்று. உழைப்பைப் போற்றுங் காலமே உயரிய பண்பாடு நிலவும் காலமாகும்.

8. ஆந்திச்நூடி

தொலைநோக்கு இயல் (Futurology) என்ற வருங்காலத்தைப்பற்றி ஆராயும் அறிவு இன்று வெகு விரைவாக வளர்ந்து வருகின்றது. இன்னும் ஐம்பது ஆண்டுகளில் இந்நாடு என்னவாகும்? இன்னும் நூறு ஆண்டுகளில் உலகம் என்னவாகும்? மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகள் எத்தகைய மாறுதல்களைப் பெறும்? என்றெல்லாம் அறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். இத்தகைய ஆராய்ச்சி, பல்துறை அறிஞர்களையும் பெரிதும் கவர்ந்து வருகின்றது, மக்கள் சமுதாயம் நலம் பெற இத்தகைய தொலைநோக்குப்பார்வையும் தேவையானதுதான். 'வருமுன் காவாதவன் வாழ்க்கை நெருப்புக்கும் அருகில் உள்ள வைக்கோல்போர் போல அழிந்துவிடும்' என்ற கருத்தும் வருங்காலம் பற்றிச்சிந்தித்ததன் விளைவேயாகும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் - குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய கணிப்பு பண்டைக் காலந்தொட்டே இருந்து வந்துள்ளது என்பதற்கு 2000 ஆண்டுகட்கும் முற்பட்ட பழைய இலக்கியங்களே சான்று பகர்கின்றன.

பழந்தமிழ் நாட்டில்

வெள்ளி என்னும் கோள் தென்புலம் படரின் வருகின்ற சில ஆண்டுகட்கு மழை பெய்யாது என்றும் அதனால் நாட்டில் வறுமை நிலவும் என்றும் கண்டனர், சில கோள்கள் இடம்விட்டு இடம் மாறினால் நாட்டு மன்னன் இன்னலுக்கு ஆளாவான் என்று கண்டனர். மக்கள் இப்படியே சோம்பி இருப்பார்களானால் பிற்காலத்தில் இழிந்த நிலைக்கு ஆளாவார்கள் என்றும் கருதினர் இவ்வாறு நாட்டைப்பற்றியும், சோதிடம் என்ற பெயரில் தனி மனிதனைப் பற்றியும் ஆராய்ந்து தங்கள் வருங்காலத்தைக்

கணித்துக் கொண்டனர். அதன் சூள்நிலைக்கு ஏற்பத் தங்கள் நடைமுறையை மாற்றி அமைத்துக் கொண்டு தீமைகளைத் தவிர்த்தும் வாழ்ந்தனர். இத்தகைய போக்கு பன்னெடுங்கால மாக, ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கும் மேலாகத் தொடர்ந்து நடந்துவந்துள்ளது.

ஔவையாரின் புரட்சி

பதினாறு அல்லது பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய ஔவையார் தமிழ் உலகில் ஒரு பெரும் புரட்சியைச் செய்தார். வருங்காலம் செம்மையாக அமையவேண்டுமாயின் இளைஞர்கள் மட்டுமல்ல சிறுவர்கள் உள்ளத்திலும் சீரிய கருத்துக்களை விதைப்பதுதான் முதன்மையான செயல் என்று கண்டார். அதனால் அதுவரைத் தமிழ் உலகில் இல்லாத புதிய இலக்கியம் படைத்தார்; சிறுவர்க்கெனத் தனி இலக்கியம் உருவாகியது. அது ஆத்திச்சூடியாக மலர்ந்தது. அதைத் தொடர்ந்து கொன்றை வேந்தன் உலக நீதி, வெற்றிவேற்கை முதலாய சிறுவர் இலக்கியங்கள் தோன்றலாயின. கல்வி முறையிலும் சமுதாயம் பற்றிய சிந்தனையிலும் வருங்கால நோக்கில் எண்ணிப் பார்த்தவர்களுள் ஔவையார் முதலிடம் பெறுகிறார் என்பது தெளிவாகின்றது.

ஔவையாரின் கருத்து

இளம் உள்ளங்கள் எளிதில் எற்றுக்கொள்ளும் வண்ணமும் என்றும் நிலைத்திருக்கும் இன்றியமையாத கருத்துக்கள் இடம் பெறும் வண்ணமும் அரிய கருத்துக்களைச் சிறிய நூலாக வடித்-தார். நூற்று எட்டு வரிகளே அடங்கிய ஆத்திச்சூடியில் அன்பு, அறம், அருள் முதலாய பண்புகள் பற்றியும் உலகியல் ஒழுகலாறுகள் பற்றியும் சுருங்கக் கூறியுள்ளார். இளம் உள்ளங்கள் எளிதாக நினைவில் கொள்ளும் வண்ணம் அகர வரிசையில் தொடங்கினார். பின்னர் மெய்யெழுத்துக்கள் வரிசையிலும் இன்றியமையாக் கருத்துக்களைக் கூறி அந்நூலை முடித்துள்ளார்.

வேளாண்மை

அறவழியில் வாழவேண்டும் என்ற உணர்வை ஊட்டும் பொழுதே அவ்வறவழி செழிக்கவும் நிலைக்கவும் வேளாண்மை இன்றியமையாதது என்பதை வற்புறுத்தியதே அவர் செய்த புதுமையும் புரட்சியும் ஆகும். வருங்கால உலகில் மக்கள் இந்த நிலையை அடைவார்கள் என்ற உணர்வில் எழுந்த கருத்துக்களே அவை. அவற்றுள்ளும் என்றைக்கும் நிலையாக உள்ள மூன்று கருத்துக்களை மிக நுட்பமாக ஆராய்ந்துள்ளார்.

பூமி திருத்தி உண்

நமது நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் - எழுபத்தைந்து விழுக்காட்டிற்கும் மேலாக-உழவுத் தொழிலையே இன்றும் மேற்கொண்டு உள்ளனர். நாட்டில் விளைபொருள்கள் பெருகவேண்டும் என்ற நோக்கிலும் ஒவ்வொருவரும் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்ற அடிப்படையிலும் 'பூமி திருத்தி உண்' என்ற கருத்தாகிய விதையை இளம் உள்ளங்களாகிய வயலில் விதைத்துள்ளார், எந்தத் தொழிலைச் செய்யவேண்டும் என்ற சலனத்திற்கே இடம் இல்லாமல் முதலில் ஒரு எண்ணத்தை உருவாக்கிவிட்டால் பிறகு அது செயலாக மலர்ந்துவிடும் என்ற நோக்கில் இத்தகைய கருத்தினைப் பொதுப்படையாகக் கூறியுள்ளார் என்று எண்ணுவது பொருந்தும். உழுது உண்ண வேண்டும் அல்லது உழைத்து உண்ண வேண்டும் என்பதைப் பொதுமை அறமாகக் கருதினார்.

நெற்பயிர் விளை

'பூமி திருத்தி உண்' கின்றவர்கள் தங்கட்கு மட்டுமன்றி பிறர்க்கும் பயன்படும் வகையில் உணவு பயிரிட வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தும் வகையில் 'நெற்பயிர் விளை' என்று கட்டளையிடுகின்றார். பிற்காலத்தில் பணப்பயிர்களில்தான் (Commercial Crop) வருவாய் அதிகம் கிடைக்கிறது என்பதை அறிந்து, மக்கள் உணவுப் பயிர்களைப் பயிரிடுவதை விட்டுவிடுவார்கள்; அதனால் வேளாண்மை செழித்தாலும் வறுமை நீங்காது; ஆதலின் ஒவ்வொருவரும் பயிர்த் தொழிலில் முதன்மையாகச் செய்ய வேண்டுவது உணவுப் பொருள் உற்பத்தியே; மற்றவையெல்லாம் அடுத்த நிலையில் தான் என்பதை இரண்டு சொற்களால் தெளிவு படுத்தியுள்ளார். உணவுப்பொருள்கள் விளைவிப்பதே ஓர் அறமாகவும் கொள்ளப்பட்டது.

அஃகம் சுருக்கேல்

பொருள்களைப் பணமாக்கி வங்கியில் போட்டு வருங்காலத்திற்குப் பயன்படுத்தலாம் என்ற நிலை ஏற்பட்டவுடன் பணத்தைச்சேர்க்கும் நோக்கமே எங்கும் வளர்ந்து வருகின்றது. குறைந்த பொருளைக் கொடுத்து நிறைந்த அளவு பொருள் சேர்க்கும் நிலையே எங்கும் பெருகியுள்ளது. தானியத்தை விற்பதிலும் அந்நிலை உருவாகுமானால் ஏழை எளியவர்களால் வாங்கி உண்ணமுடியாது என்பதை எண்ணி 'அஃகம்(தானி-

யத்தை) சுருக்கேல்' (அளவைக் குறைத்து விலையைக் கூட்டி விற்காதே) என்று குறிப்பிட்டுள்ளார். கொள்வதிலும் கொடுப்பதிலும் குறை நேரக்கூடாது என்பதும் ஓர் அறமாகும்.

வேண்டுகோள்-சட்டமாயின

இந்த மூன்று கருத்துக்களும் இன்று சட்டமாக உருப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருவரும் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பது பொதுவான விதி என்றாலும் பூமி வைத்திருப்பவர்கள்-பூமிக்கு உரிமையுடையவர்கள். அதனைத் தரிசாகப் போட்டிருக்க முடியாது தாங்களாக உழுது பயிர்செய்ய இயலாதவர்கள் தங்களால் உழக்கூடிய அளவிற்கு நிலம் வைத்துக்கொண்டு எஞ்சியதை அரசுக்கு விட்டுவிட வேண்டும் என்பது இன்றைய சட்டமாகும். உழாதவர்களுக்கு நிலமில்லை, உழுபவர்க்கே நிலம் சொந்தம் என்ற நிலை இன்று வளர்ந்துள்ளது. அன்று ஔவையார் அதனையே ஓர் அறவழியாகக் கூறினார்.

பயிர்கள் விளைவிப்பதிலும், தானியப் பயிர்கள் விளைவிப்போர்க்கு இன்று வரிவிலக்கு அளிக்கப்படுகின்றது, எஞ்சிய பணப் பயிர்களாகிய புகையிலை, கரும்பு, பருத்தி போன்றவற்றிற்கு ஓர் அளவிற்குமேல் பயிரிட்டால் கூடுதல் வரியும் விதிக்கப் படுகிறது.

இதுபோலவே உணவுப் பொருள்கள் விற்பனையிலும் நெல் போன்றவற்றிற்கு விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். அரசு ஒரு குறிப்பிட்ட அளவு விலைக்கு வாங்கி மக்களுக்கு விற்பதும் இன்றைய நடைமுறையில் உள்ளதாகும்.

இவ்வகையில் மக்கள் நலங்கருதி ஔவையார் வருங்காலம் பற்றிய தொலைநோக்குப் பார்வையில் கருத்துச் செலுத்தினார் என்பதும்,குறிப்பாக வேளாண்மையில் அடிப்படைக் கூறுகளாகிய முதலீடு(Inputs), உற்பத்தி (Production), விற்பனை(Marketing) ஆகிய மூன்றிலும் தெளிவான சிந்தனை வேண்டும் என்பதிலும் கருத்துக்கொண்டவர் என்பதும் தெளிவாகிறது. இம்முறையில், இன்றைய அறிஞர்களின் சிந்தனை ஓட்டம் செல்லுமாயின் நிகழ் காலத்திற்கு நலம் பயப்பதோடு வருங்காலத்திற்கும் வளம் சேர்க்க இயலும் என்பது திண்ணம்.

கொன்றை வேந்தன்

ஔவையார் அருளிய நூல்களுள் கொன்றை வேந்தனும் ஒன்று, ஆத்திசூடி இரண்டு சீர்களால் ஆகியது; கொன்றை வேந்தன் நான்கு சீர்களால் ஆகியது; தொண்ணூற்று ஒரு பாடல் களை உடைய இந்நூலும் வாழ்வியல் உண்மைகளைக் கூறுவ-தோடு, வேளாண்மைச் சிறப்பையும் வற்புறுத்தி உரைக்கின்றது. வளர்ந்துவரும் சமுதாயத்திற்கு வழிகாட்டியான கருத்துக்களை எடுத்தியம்புகின்றது.

அஃகமும் காசும்

மனித வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது உணவு. அடுத்து வேண்டுவது இந்த உலக வாழ்வினை நடாத்திச் செல்-வதற்குரிய பொருள். இவ்விரண்டில் ஒன்று குறைந்தாலும் நிறை வான வாழ்வு வாழ முடியாது ஆதலின் ஒவ்வொருவரும் இவ்-விரண்டினையும் தேடிக்கொள்ள வேண்டும் என்பதை 'அஃகமும் காசும் சிக்கெனத் தேடு' என்ற தொடரால் குறிக்கின்றார் ஔவை யார். எந்தக் காலத்திலும் இவ்விரண்டின் தேவையும் என்றும் குறையாது என்பதை உணர்ந்து கூறியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

மேழிச் செல்வம்

இவ்விரண்டினையும் தேடும் வழியையும் உரைக்கின்றார் ஔவையார், குறைபாடற்ற செல்வத்தைத் தரும் தொழில் உழவுத்தொழில். உழவுத்தொழிலை மேற்கொண்டவர்கள் என்றும் இழிவடைவது இல்லை; மாறாக என்றும் பெருமையே பெறுகின்-றார்கள். அன்றியும் பிறரைத்தொழுது உண்டு வாழ்வதைக் காட்டிலும் தன்னிச்சையாக உழுது, தொழில்செய்து வாழ்வதே சிறப்புடையதும் ஆகும். ஆதலின்,

மேழிச்செல்வம் கோழைபடாது
சீரைத்தேடின் ஏரைத்தேடு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது

என வளர்ந்து வரும் இளந் தலைமுறையினருக்கு அறிவுரை வழங்குகின்றார். எதைச்செய்ய வேண்டும்? அதை ஏன் செய்ய வேண்டும்? என்ற சிந்தனைக்கு இடம் தந்து ஏற்றதைச் செய்ய முறைப்படுத்துகின்றார்.

இவ்வாறு, உழவுத் தொழிலின் இன்றியமையாமை ஐந்து வயதிலும் ஆறுவயதிலும் அறிவுறுத்தப்பட்டதால், அவற்றைக் கற்றவர்களும், கற்க வாய்ப்பில்லாது அவற்றைக் கேட்டவர்களும் கூட மிக நுட்பமான முறையில் வேளாண்மையில் ஈடுபட்டு ஆராய்ச்சி மனப்பான்மையோடு உழவுத்தொழில் செய்தார்கள் என்பதை அறியமுடிகின்றது.

ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் பழமொழிகள் போல் சிறிய தொடர்களைக் கொண்டமையால் இவற்றின் கருத்துக்கள் கற்றோர் பேச்சின்மூலம் எளிதில் பாமரரைக்கவர்ந்திருக்க வேண்டும். அதன் மூலம் கல்லாரும் அனுபவ ஆய்வில் ஈடுபட்டிருக்க வேண்டும். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆராய்ச்சியையும் இத்துடன் காண்பது நலம் பயக்கும்.

ஆராய்ச்சி என்ற சொல்லுக்குப் புதியன படைத்தல், உண்மை தெளிதல், உயர்ந்ததைக் காணல் என்பன போன்ற பல பொருள்கள் உண்டு (Re-Search என்ற ஆங்கிலச் சொல்லுக்கு மீண்டும் தேடுதல் என்பது பொருள்). ஆனால் இன்று ஆராய்ச்சி என்ற சொல், படித்தவர்கள் மட்டுமே ஆளும் ஒரு சொல்லாகக் கருதப்பட்டு வருகின்றது; உண்மைநிலை அது அல்ல. ஆராய்ச்சி என்பது படித்தவர்களால் மட்டுமே நடத்தப்படுவது அன்று; படிக்காதவர்களும் நடத்தலாம். சோதனைச் சாலைக்குள் மட்டுமே நடத்தப் பெறுவது அன்று; சோதனைச்சாலையைக் கடந்தும் நடத்தலாம். ஒன்றில் ஆழ்ந்த பயிற்சியும், அனுபவ அறிவும், தெளிந்த உணர்வும் உள்ளவர்கள் எல்லாரும் ஆராய்ச்சி நடத்தலாம். இரண்டு பொருள்களை ஒப்பிட்டு, இரண்டில்ஒன்று சிறந்தது என்று கூறுவதும் ஆராய்ச்சிதான்.

எருவில் ஆராய்ச்சி

அம்முறையில் உழவர் பெருமகன் ஒருவன் ஆட்டு எருவில் ஓர் ஆராய்ச்சியை மேற்கொண்டான். எருவில் சிறந்தது ஆட்டு எரு என்பது பண்டையோர் கருத்து. அவ்வெரு இட்ட உடனே அந்தப்போகத்திற்கே பயன் தரக்கூடியது. ஆட்டெருவால் பயிர் செழித்து வளரும். கார்ப்பயிருக்கு ஆட்டெருவே சிறந்தது என்பனபோன்ற கருத்துக்கள் பழமொழி வழியாக நாம் அறிவனவாகும். இவைகள் பன்னெடுங்காலமாக ஆய்ந்து ஆய்ந்து கண்ட முடிவுகளேயாகும். அதனால் ஆடுகள் வளர்த்துப் பட்டிபோடுவது உழவுக்குரிய கடமைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. அவ்வாறு செய்யாவிடின் ஆண்மகன் இல்லாத வீடுபோல உழவு

செய்தும் பயன்மிக விளையாது என்பதையும் பழமொழிகள் வற்புறுத்துகின்றன.

'ஆடே படைப்பு ஆரியமே வெள்ளாமை'
'ஆட்டெரு அவ்வருடம் மாட்டெரு மறுவருடம்'
'ஆட்டுரம் ஓராண்டு நிற்கும்; மாட்டுரம் ஆறாண்டுநிற்கும்
'ஆடு பயிர் காட்டும்; ஆவரை நெல் காட்டும்'
'கார் ஆடு; பிசானம் குழை' (சம்பாவுக்குத்தழை),
'ஆடு வடாடாக் காடு விளையாது!'
'ஆடு மறித்தவன் செய் விளையுமா?
அங்கலாய்த்தவன் செய் விளையுமா?''
'ஆடு மிதியாக் கொல்லையும் ஆளனில்லாப் பெண்ணும் வீண்'

இக்கருத்துக்களை எல்லாம் ஊன்றிக் கவனித்த உழவன் ஒருவனுக்கு ஆட்டெரு மாட்டெரு இரண்டில் எந்த எருவைப் போட்டால் அதிக விளைச்சல் பெறலாம் என்பதைப்பற்றி பழமொழி ஒன்றும் குறிப்பிடவில்லையே என்றும் ஐயம் ஏற்பட்டது. தானே அதைக்கண்டு அறிய வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. ஆராய்ச்சியை மேற்கொண்டான். அவ்வுழவர் பெருமகன் அதிகம் படித்தறியாதவன், ஆராய்ச்சி முறைகளும் (Methodology) புள்ளி விவரங்களைச் சேகரித்தலும் (Statistics), அவற்றை ஆய்ந்து பார்த்தலும் அறியாதவன். ஆத்திசூடியும் கொன்றை வேந்தனுமே அவன் கற்ற உயர்படிப்புக்கள். இருப்பினும் பன்முறை பயிரிட்ட அனுபவமும் பயிர்த்தொழிலில் தெளிந்த அறிவும் உடையவனாக இருந்தமையால், அவன் செய்த ஆய்வும் அதன் முறைகளும் ஆராய்ச்சி முறைக்குப் பொருந்தினும் பொருந்தாவிடினும் அறிவுக்குப் பொருத்தமானதாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வயல்தேர்வு

வயல் ஒன்று தேர்ந்து எடுக்கப்பட்டது. சில தோட்டங்களில் வயல்களுக்கே பெயர்கள் உண்டு. இந்த வயல், இவ்வளவு விளையும் என்பதை பயிரிட்ட உடனே கணக்குச் சொல்லுவார்கள் உழவர்கள். அதனால் அவ் வயல்கள் அவர்தம் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுப் பெயரும் பெற்றுவிடுகின்றன. தொழிலில் அத்தகைய தெளிவும் தேர்ச்சியும் உழவர்களுக்கு உண்டு. 'கலுங்கு' என்ற நாற்புறமும் சதுரமான வயலை இரு பாதியாக்கி ஒன்றில் ஆட்டுப் பட்டியும், மற்றொன்றில் மாட்டுப் பட்டியும்

போடப்பட்டது. நூறு ஆடுகளுக்கு ஏழு மாடுகள் சமம் என்பது எருவைக் கொண்டு அளவிட்ட பண்டையக் கணக்கு என்பதும் குறிப்பிட வேண்டிய ஒன்று. அவ்வடிப்படையில் இரண்டு பட்டிகளும் ஒரேமாதிரி, சில நாட்கள் போடப்பட்டன. அளவுக்கு அதிகம் எரு போட்டால் பயிர்கள் வளர்ந்து மணிகள் பிடிக்காமல் சாவியாகிவிடும் என்பதும் உழவர்கள் அறிந்த ஒன்றே. அதனால் அளவாக (பயிருக்கு ஏற்ற அளவாக) சில நாட்கள் பட்டிகள் போடப்பட்டன.

'கலுங்கு' என்ற ஒரு சிறிய நாற்சதுர குட்டையைக்
காண இரு பாதி ஆக்கிக்
கடுகவே ஒருபாதி ஆட்டுநற் பட்டியும்
கண்ட மறுபாதி தன்னில்
சார்கின்ற மாட்டினப் பட்டியும் போட்டதில்
சரியான எருவான.

பட்டிபோட்டு முடிந்த பிறகு வயலை உழுவதற்காகச் சேடைநீர் பாய்ச்சப்பட்டது மண் பொல பொல என்று ஆகுமட்டும் இரண்டு பகுதிகளிலும் சமமாக உழவடிக்கப்பட்டது. போடப்பட்ட பாத்தியின் அளவுகள் கூட இரண்டு வயல்களிலும் ஒரே மாதிரியாக, ஒரே அளவினதாக அமைக்கப்பட்டன.

கேழ்வரகு நடவு

நல்ல இரகக் கேழ்வரகு நாற்றுக்களை வேர் அறாமல் இருப்பதாகப் பார்த்துத் தேர்வு செய்து, ஒரே மாதிரி நடவும் போடப்பட்டது. நட்டபிறகு சிறிது ஈரம் காய்ந்தபின் விடுகின்ற சளுவு நீர் (உயிர்த்தண்ணீர்) பாய்ச்சினார்கள். நடவு தழைத்த பின களை எடுப்பும நடந்தது. களையெடுத்து மேல் ஈரம் காய்ந்தபின், ஒரே அளவாக நீரைத்தேக்காமல் பாய்ச்சினார்கள். நோய் வராமலும், ஆடுமாடு கடிக்காமலும் இரண்டு பகுதிகளும் பாதுகாக்கப்பட்டன.

தேர்கின்ற சிறுகாய்வு வந்தபின் சளுவு நீர்
தேங்காது நன்கு பாய்ச்சித்
தேறி அது தழைவு கண்டானபின் களையதும்
திறமாகவே எடுத்துத்
தெற்றெனக் காய்ந்தபின் மேல் நீர் அடிக்கடி
தியங்காது விட்டு வந்து
தீங்குநோய் வாராமல் மாடாடு பூதாமல்
தினையளவும் வாடி விடாமல்' காத்தனர்.

வயலின் இருபங்கிலும் உள்ள பயிர்கள் நன்றாகத் தூர்கட்டி கருகருவென வளர்ந்தது. கதிர்கள் பந்துபோல் திரண்டன. அவை நன்றாகச் சிவந்து, முற்றி விட்டதை அறிவித்தன. இரண்டு பங்கிலும் உள்ள ஆரியத்தாள்கள் கதிர்களுடன் அறுக்கப்பட்டன. அவை அவிந்து போகாதபடி காற்றோட்டமாக குத்தாகப் பிடித்துக் (குத்தாரி பிடித்தல் என்பது வழக்கு) கதிர்கள் நன்றாகக் காயும்படி சில நாட்கள் விடப்பட்டன.

ஆராய்ச்சி முடிவு

ஒரே களத்தில் தனித்தனியாக காய வைத்திருந்த இரண்டு பங்கு பூட்டைகளையும் சுற்றுத் தாம்பு விட்டு அடித்து. தூற்றி ஆரியத்தில் உள்ள பொட்டும் நீக்கப்பட்டு நல்ல இராசியான மணிகளை மட்டும் வல்லம் கொண்டு(சுமார் இன்றைய அளவில் 4லிட்டர்) அளந்து பார்த்ததில் 'மாட்டெருவு இரண்டு பொதி, ஆட்டெருவு மூன்று பொதி மனமாரவே பார்த்த பின்' அவ்வுழவர் பெருமகனின் ஐயம் தீர்ந்தது. மாட்டெருவில் இரண்டு பங்கு விளைந்ததால் அதுவே ஆட்டெருவால் மும்மடங்கு விளையும் என்பதை அறிந்தபின் 'மாட்டெருவு இரு மடங்கு ஆட்டெருவு மும்மடங்கு' என்ற கருத்து வெளிப்பட்டது. அவ்வேளாண் பெருமகன் இதுபோன்று தன் வாழ்நாளில், கல்வியால் அன்றி அனுபவத்தால் கண்டறிந்த சில உண்மைகளையும் வருங்கால மக்கட்கு உதவும் பொருட்டு விட்டுச் சென்றுள்ளார்.

அறிவுரை

உழவர்கள் தங்கள் நேரத்தை வீட்டிலேயே கழிப்பார்களாயின் அவர்களின் விளைச்சல் குறையும். உழவர்கள் ஆர்வம் மேலிட்டால் தங்களை மறந்து விடுதலும் உரிய நேரத்தில் உண்ணாமல் இருத்தலும் நோய்க்கு வழிவகுக்கும். ஆட்டெரு இடாத புன்செய் நிலம் விளைச்சல் குன்றும். பண்ணையத்தில் வேலை செய்வோர் அடிக்கடி வீடு சென்று வந்தால் சந்தேகத்திற்கு இடம் உண்டாகும். வாயில்லா உயிர்களாகிய கால்நடைகளின் வயிறு நிறையா அளவில் பண்ணையம் நடத்தினால் அவ்வுழவர் பரம்பரையே அழியும் என்றும் அவரது அனுபவங்கள் குறிப்பிடுகின்றன.

வீட்டதில் பகல் எல்லாம் வீணாய்க் கழிப்பவர்கள்
　　வேளாண்மை பகுதி குறையும்,
வேளைதவறாது உணவு நித்திரை செய்வோர் கள்பால்
　　வேதனைசெய் நோய்கள் குறையும்

ஆட்டெருக் காணாத புன்செயில் விளைதவசம்
  ஆகும்மிகு ராசி குறையும்
அடிமையான் அனுதினமும் வீடுபோய் வருவான்மேல்
  ஆகும் நம்பிக்கை குறையும்
மாடாடு வயிறு நிறைவு பாராத வேளாளர்
  வமிசமது முற்றும் அழியும்'

இவ்வாறு எழுதப்படாத அல்லது எவர்க்கும் தெரியாத ஆராய்ச்சி முடிவுகள் நாட்டில் பற்பல ஆங்காங்கு இருந்து வருகின்றன, அவற்றை உரிய முறைப்படி வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாமலேயே மங்கி மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன, அவற்றைத் தொகுத்து வெளிப்படுத்தும் பணியில் பலர் ஈடுபட வேண்டும்; அல்லது சிலரேனும் ஈடுபடுத்தப்பட வேண்டும். அந்நாள் வேளாண்மைக்கு வளம் சேர்க்கும் நன்னாளாகும்.

மேற்கோள் :

குறிப்பு : இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடல்கள் பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் பதிப்பித்த 'பழைய கோட்டைப் பட்டக்காரர் நாட்டுப் பாடலும் பூர்வ பட்டயமும்' என்ற நூலில் உள்ளன.

9. பாரதி-பாரதிதாசன்

பாரதி

'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராது இருத்தல்' எனத் தனது வாழ்க்கைப் பணிகளை வரையறுத்துக்கொண்டவர் பாரதி. அதற்குக் காரணமும் உண்டு. அவர் வாழ்ந்த காலத்தில் 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்ற' இந்தப்பாரத தேசத்தின் துயரம் மிகுந்த காட்சி பாரதியைப் பெரிதும் பாதித்தது. அதனால் தன் சொந்த துன்பங்களையும் மறந்து நாட்டின் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்று, நாடு விடுதலை பெறவும் நாட்டு மக்களின் அறியாமை நீங்கவும் கவிதைத்தொண்டாற்றினார்.

அவரது கவிதைகளில் உயிராக இழையோடிக் கொண்டிருப்பது விடுதலை உணர்வுதான் என்றாலும் மக்கள் வளம்பெற எல்லாத் துறைகளையும் பாடினார். அதனை எல்லோருக்கும் பயன்படும்படி பாடினார்

இயற்கை வளம்

நமது நாட்டின் இயற்கை வளங்களையும் பெருமைகளையும் பாடும் வகையில் முன்னர் நாடு திகழ்ந்த பெருமையையும் இன்று நாடு இருக்கின்ற நிலையையும் மக்களுக்கு உணர்த்தி, இனிச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் ஒவ்வொரு பாடலிலும் குறிப்புப் பொருளாக வைத்துப் பாடினார்.

இந்திய மண்ணின் மலை வளமும் ஆற்று வளமும் கால் நடை வளமும் அளவிடற்கரியன. அவ்வியற்கை வளங்களைக்

கொண்டு மக்கள் விளைவிக்கும் பயிர் வளமும் பிற காய் கனி வளமும் நிறைந்த செல்வத்தை (தேட்டம்) ஈட்டித்தரும் நாடு நம்நாடு என்பதை நினைவூட்டிப் பாடுகின்றார் பாரதி. இது பண்டைய பெருமைதான்.

ஆற்றினிலே சுனை ஊற்றினிலே—தென்றல்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பயன் ஈத்திடும் காலி
இனத்தினிலே உயர் நாடு
தோட்டத்திலே மரக்கூட்டத்திலே—கனி
ஈட்டத்திலே பயிர் ஊட்டத்திலே
தேட்டத்திலே அடங்காத நிதியின்
தெளிவினிலே உயர் நாடு

எனப் பழம் பெருமை பேசுவதால் பயன் என்ன? என்ற கேள்வி எழுவது இயல்பே.

இனி ஒரு விதி செய்வோம்

இத்தனை வளத்தை நாம் பெற்றிருந்தும் 'கஞ்சி குடிப்பதற்கிலார் – அதன் காரணங்கள் இவை எனும் அறிவுமிலார், பஞ்சமோ பஞ்சமென்றே, நிதம் பரிதவித்து உயிர் துடிதுடித்துத் துஞ்சி மடிகின்றாரே. இவர் துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே' என்று வேதனையுற்றுப் பாடுகின்றார். மக்கள் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் ஊமையராய் வாழ்கின்ற நிலைக்கு வருந்துகின்றார். அவர் வருத்தம் சீற்றமாகப் பொங்கி எழுகின்றது. ஆவேசமுற்றுப் பாடுகின்றார்.

இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்.

எனும் பாடல் உறங்கிய நெஞ்சங்களையும் விழிப்புற்று வீறு கொள்ளச் செய்கின்றது.

பல்வகைத் தொழில்கள்

எல்லாரும் எல்லா இடங்களிலும் உழவுத் தொழிலையே மேற்கொள்ள முடியாது. எனினும் இருக்கின்ற இயற்கை வளங்-

களைப் பயன்படுத்தி வளம் சேர்ப்பது நாட்டு மக்களின் கடமை என்பதை உணர்த்துகின்றார். கங்கைச் சமவெளியில் கோதுமை தான் விளையுமென்றால் கோதுமை விளையுங்கள் காவிரிக் கரையில் நெல்லும் கரும்பும் எனின் அதனைப் பயிரிடுங்கள். கடற்கரைப் பகுதிகளில் மீன் வளருங்கள். கால்நடைகளுக்கு ஏற்ற இடமெனில் பால் வளம் பெருக்குங்கள். யாருக்கு எது தேவையோ அவற்றைப் பண்டமாற்றாக ஏற்றுக்கொள்வோம் என உழைப்புக்கும் நாட்டின் ஒற்றுமைக்கும் வழிவகுக்கின்றார்.

'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைச்கு மாறு கொள்ளுவோம்
... .
உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்'

என எந்நாளும் எந்நாட்டு மக்களுக்கும் ஏற்றதொரு கருத்தை எடுத்து இயம்புகின்றார்.

மேழி போற்று

இக்கருத்துக்கள் இளம் உள்ளங்களிலும் ஊறவேண்டும் என்பதற்காக அவர் செய்த ஆத்திச்சூடியில் பல்வேறு கருத்துக்களோடு

பூமி இகழ்ந்திடேல்
மேழி போற்று
விதையினைத் தெரிந்திடு

என வேளாண்மையின் இன்றியமையாமையை வற்புறுத்தி உரைக்கின்றார். கால்நடைகளே நாட்டின் பெருஞ்செல்வம், அவைகளைப் பேண வேண்டும் என்பதை இளம் உள்ளங்களில் விளையாட்டாக விதைக்கின்றார்.

பாலைப் பொழிந்துதரும், பாப்பா—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
....
வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா

என்பது குழந்தையை நோக்கிப் பாடும் நலஞ்சான்ற பாடலாகும்

ஒரு நாடு வளம்பெற வேண்டுமானால் உழவையும் தொழி-லையும் இரு கண்களாகக் கருதி இரண்டின் வளர்ச்சியிலும் நாட்-டம் செலுத்தவேண்டும். இன்றேல் நாடு 'முழுமையான வளர்ச்சியினைப் பெறாது என்பதையும், வளர்ச்சி நோக்கிப் பாடுலதோடு தீமைகளை எதிர்த்துப் போராடி அதனைப் போக்குவதும் ஒரு வகையான வளர்ச்சிதான் என்பதையும் அவர் நமக்கு அறிவுறுத்-தத் தவறவில்லை.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித்து இருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்ப்பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்து உடலம் ஓயமாட்டோம்

என்பது அவரது வீரமொழிகளாகும்.

இத்தகைய கருத்துக்களின் சிறப்பை அறிஞர்கள் பகுத்து ஆய்ந்து கவிநயம் பாராட்டிக் கொண்டிருப்பதில் யாதொரு பயனுமில்லை. இந்நாட்டினை வழி நடத்திச் செல்கின்றவர்கள் இவற்றைச் செயலாக்குவதில் முனைய வேண்டும். 'இனி ஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம்' என்பதை இன்றைய நிலையில் 'இனி நல்ல செயல் செய்வோம். அதை எந்த நாளும் தொடர்ந்து செய்வோம்' என்ற நிலை வர வேண்-டும்; அந்நிலை வளரவும் வேண்டும்.

பாரதிதாசன்

கவிஞன் காலத்தையும் கடந்து நிற்பவன் அதைப்-போலவே அவன் காலத்தால் கட்டுண்டும் கிடப்பவன் என்பது உண்மை. பாரதியின் காலத்தில் நாடு அடிமைத் தளையில் பிணிப்புண்டு கிடந்தது. ஆதலின் அவரது பாடல்களில் விடுதலை உணர்வே விஞ்சி நின்றது. பின்னர் நாடு விடுதலை பெற்றது. ஆனால் சமுதாயத்தைப் பீடித்திருந்த பல்வகையான நோய்கள் விடுதலை பெறவில்லை. ஆதலின் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர் காலத்தில் மலிந்து கிடந்த சமுதாயக் குறைபாடுகளைச் சாடினார். மக்களின் அறியாமையைப் போக்க இயலாத கற்றவர்களை எல்லாம் தூக்கில் இட வேண்டும் என்பதை,

'கல்லாரைக் காணுங்கால், கல்வி நல்காக்
கசடறகுத் தூக்குமரம் அங்கே உண்டாம்'

என்று புரட்சி மணங் கமழப் பாடினார்.

செந்நெல் வயல்கள்

இத்தகு தீவிர மனங்கொண்ட கவிஞர் உழவர்கள் நிலையினை உணர்ந்து பாடி இருப்பது சிந்திக்கத்தக்கதாகும். மக்களின் அறியாமையும் மூடப்பழக்க வழக்கங்களும் நீங்கினாலன்றி, இயற்கை வளமும் செயற்கை நலமும் சிறந்திருந்தாலும் இந்நாடு நலம் பெறுவது என்பது பகற்கனவாகவே முடியும் எனப் பாடுகின்றார்.

நல்ல இமயம் நலங்கொழிக்கும் கங்கை நதி
வெல்லத் தமிழ் நாட்டின் மேன்மைப் பொதிகைமலை
செந்நெல் வயல்கள் செழுங்கரும்புத் தோட்டங்கள்
தின்னப் பழங்கள் தெவிட்டாத பயன் மரங்கள்
இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பது முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செய்யும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்!

என வேதனைக்குரல் ஒலிக்கப் பாடுகின்றார்.

உழவர்கள்

இந்த அறியாமைச் சேற்றில் அழுந்திக்கிடக்கும் மக்கள் சமுதாயத்தில் குறிப்பாக உழவர் சமுதாயம் புதைசேற்றில் சிக்கியதுபோல் மேலும் மேலும் அழிந்துகொண்டே போகின்றது.

'விடியுமுன் எருதின்வால் அடிபற்றிப் பகல்
முடிவினில் எருதின் முதுகில் சாய்ந்து
வருங் குடியானவன்'

நிலை பரிதாபத்துக்கு உரியதாகவே இன்றும் இருந்து வருகின்றது.

உழவன் நாள்தோறும் முழங்கால் சேற்றில் முழுகி முழுகி எழுகின்றான். பொழுது சாய்ந்ததும் உழைத்த உடலுக்கு ஓய்வு தர விரும்பித் தனது தனி மாளிகையாம் ஓலைக் குடிசையில் நீட்டிப் படுக்கவும் இடமின்றி வில்போல் வளைந்து சுருண்டு, கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழீஇக் கிடக்கின்றான். அந்தக்காட்சியை,

'ஏவாது படுக்கும் எண்சாண் உடம்பை
நாலுசாண் அகன்ற ஓலைக் குடிசையில்
முழங்கால் முட்டு முகம்வரச் சுருட்டி
வழங்கு தமிழரசி வளைந்த வில்லெனக்
கிடப்பவன் பகலெல்லாம் கடுக்க உழைப்பவன்
குடியானவன்'

என அவனது வாழ்க்கைத் தரத்தையும் படம்பிடித்துக் காட்டு கிறார் கவிஞர்.

அறுசுவை உணவு

இவ்வுழவன் உழைந்து உழைந்து நித்திய தரித்திரனாய் ஆனதும் இந்த நாட்டில்தான். அதற்குப் பிறகும் தொடர்ந்து உழைத்துக்கொண்டே இருக்க அவனது உழைப்பின் பயனைப் பிறர் கூசாமல் அனுபவிப்பதும் இந்த நாட்டில்தான். அழகிய நகரையும் அறுசுவை உண்டியையும் அவன் கண்டதில்லை. பிறகு உண்பதேது? ஆனால் அறுசுவை உணவுக்கான பொருள் களை எல்லாம் உற்பத்தி செய்து, அந்த அழகிய நகர்களுக்கு அனுப்பி வைப்பது மட்டும் அவனது தொன்று தொட்டு வரும் சடமையாக இருந்து வருகின்றது.

'அழகிய நகரை அவன் அறிந்ததில்லை
அறுசுவை உணவுக்கு அவன் வாழ்ந்ததில்லை
அழகிய நகருக்கு அறுசுவை உணவை
வழங்குதல் அவனது வழக்கம் அதனை
விழுங்குதல் மற்றவர் மேன்மை ஒழுக்கம்'.

வேரினில் நெற்றி வேர்வை

ஏன் இந்த நிலை? அவன் உழைப்பில் ஏதேனும் குறைபாடு உண்டா? உண்ணும்போது மட்டும் உணவின் சூட்டால் வியர்வை வரும் நிலையில் வாழ்பவர்கள் அவன் உழைப்பைக் கணக்கிட்டுப் போற்ற வேண்டாமா? அவன் சேற்றில் கால் வைக்காவிடில் இந்த நாட்டு மககள் சோற்றில் கை வைக்க முடியுமா, என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா? இந்த நாட்டுக்கு ஆணிவேராக இருப்பவர்களே உழவர்கள் தானே? ஏரிகளையும் குளங்களையும் உருவாக்கி இனிய நீர் நிலைகளை அமைத்தவர்கள் உழவர்கள் தானே.

'ஏரியிலே மண்ணெடுத்துக் கரை உயர்த்தும்
தோழர்களே! இப்பெரிய நாட்டின் ஆணி
வேரினிலே நெற்றி வேர்வை நீரைவிட்டு
வளர்த்திடுகின்ற நாட்டு மக்காள்!

என அவர்களை அழைக்கின்றார் கவிஞர். அவர்கள் உழைப்பு புறக்கணிக்கப்பட்டபோது அவர்களின் செயல்களை நினைவூட்டி அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்றார். கற்களும் முட்களும் நிறைந்து காடுமேடாகக்கிடந்த நிலங்களைப் பண்படுத்தி சித்திரச் சோலைகளாக தாமரைத் தடாகங்களாக மாற்றி அமைத்தவர்கள் யார்? இதை உணர்த்த

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெல்சேர உழுது உழுது பயன் விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்களெல்லாம்
எவரின் தோள்கள்?

என உலகை நோக்கி வினாக்களைத் தொடுக்கின்றார்.

மங்கையர்

உழவர்களே அன்றி அவர்தம் இல்லத்து மங்கையரும் குழந்தைகளும் கூட வயல்களில் பணியாற்றுகிறார்கள். இந்தச் சமுதாயத்தை நாடு போற்றவில்லையாயினும் இந்த நாட்டைப் போற்றிக் காப்பதில் இவ்வுழவர் சமுதாயம் என்றும் பின்னடைந்தது இல்லை. அரசு கட்டில் ஏறி ஆட்சி புரிவதுதான் தொண்டு என்பது இல்லை. கழனியில் இறங்கி களை எடுத்து விளைவைக் காப்பதும்கூட நாட்டுக்குச் செய்யும் நல்லதொண்டே ஆகும், என்று உணர்ந்து செயல்படுகின்றனர். அவ்வுழவர் பெருமக்களின் இல்லத்தரசிகள். 'உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோர்' ஆவர் என்பது பண்டையோர் வாக்கு அன்றோ? உயிர்களைக் காப்பதைவிட சிறந்த தொண்டு வேறு எதுவாக இருக்க முடியும்?

'செந்நெல் காப்பது பொதுப்பணி செய்யல் ஆம்
என்ற நினைவினால் என்னருந் தையல்
மின்னுடல் வளைய வளையல்கள் பாட
விரைவில் செங்காந்தள் விரல்வாடக்'

களை எடுக்கின்றாள்.

இவ்வாறு கடினமாக உழைத்தும் அவர்தம் வாழ்க்கைத் தரம் உயர்ந்த பாடில்லை. பொருளாதார வளம் இன்மையால் ஏழை உழவர்களின் குடும்பத்துப் பெண்களில் பெரும்பான்மையோர் மழைக்கும் பள்ளியில் ஒதுங்கும் நிலை வாய்ப்பதில்லை. இப்படியே நிலைமை தொடருமானால் இவர்கள் வாழ்வு வீணாவதன்றி இவர்தம் வருங்காலச் சந்ததியும் அல்லவா வீணாகும். கல்வி அறிவே இல்லாத பெண்கள் பெற்று வளர்க்கும் குழந்தைகளும் அறியாமையிலேயே வளருவார்கள், எப்படியோ வாழ்வார்கள். களர் நிலத்தில் பயிர் செய்தால் என்ன விளைவைப் பெற முடியும்?

'புலனற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய்தால்
நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே'

என களை எடுக்கும் பெண்மணிகளும் கல்விபெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

கடவுள் ஆணை

இவர்கள் இந்த நிலைக்கு ஆளாவதற்குரிய காரணந்தான் யாது? உழைக்காமல் வாழும் மனிதர்கள் பெருகிவிட்டதோடு உழைப்பவர்களை அடக்கி ஆளும் சமுதாய அமைப்புமுறை இருப்பதும்தான் முதன்மையான காரணமாகும். அன்றியும் இவை பற்றியெல்லாம் சிந்திக்கும் திறனும் உழவர்களுக்கு வாய்ப்பதில்லை. மாறாக இதுவே நமது தலைவிதி என்று அறியாமை நிரம்பியவர்களாகவே வாழ்கின்றார்கள். அப்படி வாழ்க்கையை நடத்துவதற்கே அறிவுலகம் அவர்களைப்பழக்கிவைத்திருக்கிறது

'நடவு செய்த தோழர்கூலி நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பு இலாத செல்வர் உலகை ஆண்டு உலாவலும்
கடவுள் ஆணை'

என்ற மூட நம்பிக்கையே வேர்விட்டுப் படர்ந்து இருக்கின்றது. அந்த வேரை ஆழமாகத் தோண்டி அடியோடு வெட்டி எடுப்பதை விட்டு, அந்த வேர் கருகிப் போகாமல் இருப்பதற்காகக் காலந்தோறும் பல்வேறு வடிவங்களில் நீர் பாய்ச்சப்படுகின்றது.

அழகின் இருப்பிடம்

மலர் அழகானதுதான். மலரால் தொடுத்த மாலையும் அழகானதுதான், ஆனால் மலரைத் தொடுக்கின்ற தொழில்?

ஆம், புரட்சிக் கவிஞருக்கு நாரை எடுத்து நறுமலரை வைத்துத் தொடுக்கும் விரலசைவும் அழகுடையதாகக் காட்சி அளிக்-கின்றது. மலர்களைக்கண்டு மகிழ்ந்திருந்தால் மட்டும் போதாது, அவற்றை மாலையாக்கி மக்கட்குப் பயன்படச் செய்யும் வகையில்தான் அழகு இருக்கிறது என்பதைக் குறிப்பால் உணர்த்தும் வகையில்,

'நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின்
விரல் வளைவில் (அழகுத் தெய்வம்) நாடகத்தைச்
செய்கின்றாள்'

என்று பாடுகின்றார்,

இக்காட்சியில் மலரும், மலரை மாலையாக்கும் மங்கையும் இருப்பதால் அழகுக்குப் பெரிதும் இடமுண்டு. ஆனால், அடுத்துவரும் காட்சியோ உழவன் ஒருவன், காலைவேளையில் கலப்பையைத் தோளில் சுமந்துகொண்டு கழனியை நோக்கிச் செல்லும் காட்சியில் என்ன அழகு இருத்தல் கூடும். ஆனால், அங்கேதான் கவிஞர் உணர்ச்சி மேலிட அந்த உழவன் செல்லும் புதுநடையில் பூரித்துப்போகிறார், எத்தொழிலுக்கும் இதயமாக விளங்குவது உழவுத்தொழில் அன்றோ? ஆதலின் உழவனையும் அவனது விளைவுதரும் நன்செய் நிலத்தையும் நினைவு கூர்ந்து பாராட்டும் வகையில், அத்தொழிலில் அழகைக் காணுங்கள் என்று மக்கட்கு அறிவுறுத்துகின்றார். உழவனின் புது நடையில் கண்ட அழகைவிட, அவன் விளைவித்த நன்செய் நிலங்களைக் கண்டதும் அக்காட்சியை விட்டுக் கண்கள் அகல வில்லை. அக்காட்சியில் வெறும் கதிர்கள் மட்டும் தெரியவில்லை. விளைந்த நெற்கதிர்களால் தன் நாட்டு மக்கள் மகிழ்ந்து வயிறார உண்பது போலவும், உண்ட மகிழ்ச்சியால் முகம் மலர்வது போலவும், மனம் கற்பனையில் கண்டு மகிழ்வதால் கதிர்களைக் கண்ட அழகில் தன்னை மறந்து ஈடுபடுகின்றார் கவிஞர். இத்தகைய இடங்களில்தான் நான் அழகைக் காணுகின்றேன். அங்கே காணும் அழகே என நெஞ்சத்தில் குடியேறி பெரு மகிழ்ச்சியைச் செய்து வருகின்றது என்பதை,

'அடடே! செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிலத்தினிலே என் விழியை நிறுத்தினாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்'

என்று அழகுபடப் பாடுகின்றார்.

இத்தகைய நல்ல அழகைக்காணும் உள்ளங்கள் நாட்டில் பெருகுமானால் துன்பமில்லை என்பது கவிஞர் கருத்தாகும். இத்தகு அழகை நல்கும் அழகியோர் வாழும் இடமே சிற்றூர் களாகும். அங்குள்ள காட்சிகளைப் படம் பிடித்து நம்முன் காட்டி அந்த அழகினை நல்குவோர் நிலையை உணர வைக்கின்றார் கவிஞர்.

உழவர் சமுதாயத்தின் அரண்மனையும் ஆட்சிப்பீடமும் சிற்றூரில் தான் உள்ளது, நெடுஞ்சாலைகளைக் காணாத ஒற்றையடிப் பாதையைத் தனது உரிமையாகக் கொண்ட சிற்றூருக்குள் நுழையும்முன், ஊருக்கு வழிகேட்டுச் செல்கின்றார் கவிஞர். ஆலமர நிழலில், மாடுகள்மேய்க்கும் சிறுவன் ஒருவன் உட்கார்ந்து உள்ளான்; அவன் பள்ளிக்கூடம் கண்டறியான். என்றோ ஒருநாள் கும்பிடப்போகும் ஒரு கோயிலாகத் தான் அது இருந்தது. அவனை ஊரார் இடையன் என்ற பெயரால் அழைத்தனர்.

'சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பிள்ளைப் பருவம முதல் சொல்லிக் கொடுத்தாலும் இனப் பாகுபாடுகள் இன்னும் ஒழியவில்லை, என்பதையே அச்சிறுவனுடைய பெயர் புலப்படுத்தியது. சிற்றூர்களிர்களில் இந்நிலை ஆழமாக வேர் ஊன்றியுள்ளது என்பதும் கண்கூடு. அன்றியும், இளமையில் கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாமையால் அவர்கள் கற்காமல் ஆடு மேய்க்கும் நிலைக்குச் செல்லவேண்டி இருக்கிறது என்பதையும் மிக நாக ரிகமாக உணர்த்தகிறார். சமுதாயத்தின் இத்தகைய நிலைக்குக் கற்றவர்களே காரணமாவர் என்று கற்றவர்களைச் சாடு-கின்றார் கவிஞர். எல்லார்க்கும் கல்வி என்ற நிலையை உருவாக்க வேண்டியவர் கற்றவர்களே. அவர்கள் செய்யத் தவறியதால் இந்நிலை உருவாகியுள்ளது. ஆதலால்தான் முன்னர்க் கூறியவாறு கற்றவர்க்குக் கொடிய தண்டனையும் வழங்குகின்றார். இதனால் இளைஞர்கள் கல்வி கற்கும் வாய்ப்பை சமுதாயமே ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதையும் இளமை-யிலேயே வயிற்றுப் பிழைப்புக்காக அடிப்படைக் கல்விகூட கற்காமல் உழைக்க வேண்டிய நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்பதையும் மிக நாகரிகமாக,

'நானோர் ஒற்றை
அடிப்பாதை கண்டேன், அங்கோர்
ஆலின் கீழ்க் காலிமேய்க்கும்
இடைப் பையன் இருந்தான்'

என்று குறிப்பிடுகின்றார்.

மேய்ச்சல் நிலத்தில் கறவைகள் மேய்ந்தன. அவை அங்கொன்றும் இங்கொன்றுமாக நெடுந்தொலைவில் பிரிந்துபோய் விடாமல், கூட்டமாகப் புல்லை மேய்ந்து கொண்டிருந்தன, எனக்கு என்றும் உனக்கு என்றும் முட்டி மோதிக் கொள்ளாமல் அமைதியாக மேய்ந்து கொண்டிருத்தன. பரபரப்பு மிகுந்த இவ்வுலகில் 'எனக்கு எனக்கு' என்று அலையும் மனிதன், ஒவ்வொன்றிலும் வேறுபாடு கருதுகின்றான். தான் மட்டும் உயர்ந்ததைப் பெற வேண்டும், பிறர் இதனினும் தாழ்ந்ததைப் பெற வேண்டும், என்ற எண்ணங் கொண்டுள்ளான். எல்லோரும் சமமாக வாழவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு எப்போதும் இயல்பக இல்லை. எதிலும் உயர்வு தாழ்வு கற்பிப்பமே அவனது வழக்கமாக இருந்துள்ளது. இக்கறவைகள் வாழ்வில் தனக்கு ஒன்று மற்றவைகளுக்கு ஒன்று என்ற பாகுபாடும் இல்லை. இத்தகு நல்ல பண்பாட்டை மனிதன் இப் பசுக்களிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப்போல்,

'பசும்புற்கள் அடர்நிலத்தில்
தனித்தனி அகலா வண்ணம்
சாய்ந்திட்ட பசுக்கள் எல்லாம்
தனக்கொன்று பிறர்க்கொன்று என்னாத்
தன்மையால் புல்லைமேயும்'

என்று கறவைகள் மேயும் காட்சியினை விளக்குகின்றார். இதேபோல் புறாக்களைப் பற்றிக் குறிப்பிடும்போதும், அவை இரைகண்டுமேயுந் தோற்றத்தை,

'இட்டதோர் தாமரைப்பூ இதழ்விரிந்து இருத்கல்போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி இரையுண்ணும் அவற்றின்
வாழ்வில்
வெட்டில்லை; குத்துமில்லை; வேறுவேறு இருந்து
அருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும் கண்மூடி வழக்கமில்லை'

என்று குறிப்பிடுவதும் இவண் கருதத் தக்கது. மனிதன் 'மேல்கீழ்' என்ற வேறுபாட்டால் வெட்டுக்கும், குத்துக்கும் ஆளாகிறான். அப்பாகுபாடு தொலைவின் வெட்டும் குத்தும் சமுதாயத்தை விட்டு தொலைந்துவிடும் என்பதைப் புலப்படுத்துகிறார்

ஊரின் ஓர்புறம் நன்செய்யும், மற்றோர்புறம் புன்செய்யும் இருத்தல் இயல்பு. தமிழகத்தில் பெரும்பான்மையான சிற்றூர்கள் அப்படித்தான் உள்ளன. சோளக் கொல்லையும், வேலிக்குள் தழைத்திருக்கும் வெந்தயச் செடிகளும் வழியில் செல்வோரின் கண்ணையும் கருத்தையும் கவர்வன. விளைந்த பயிர்கள் ஒருவகையில் அவ்வூரின் செழிப்பைக் காட்டுவன.

வாழைத் தோட்டம் ஊரின் நீர்வளத்திற்கும் நிலவளத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டு. அறுவடை தருணம், வாழைகள் குலைகள் தள்ளியுள்ளன. வளங்குன்றி வறுமையடைந்துள்ள மக்களே! இங்கே வாருங்கள், என்னைப்பாருங்கள், என்னை வைத்து வளர்த்தேனும் உங்கள் வளத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள், என்று அழைக்கின்றன அவ்வாழை மரங்கள்.

'முற்றிய குலைப்பழத்தை
முதுகினில் சுமந்து நின்று
வற்றிய மக்கள் வாரீர்
என்றது வாழைத் தோட்டம்'

எல்லோரும் வாழை பயிரிட முடியுமா? நீர் வளத்தைப் பொறுத்தல்லவா பயிர்களைத் தேர்ந்து எடுத்துப்பயிரிட வேண்டும். நீர்வளம் குறைந்த உழவன் ஒருவன் அவன் நிலத்தில் பருத்தி பயிரிட்டுள்ளான். விளைவுக்கு வரும் நேரத்தில் இருந்த கொஞ்சம் தண்ணீரும் வறட்சியால் வற்றிப் போய்விட்டது. இருக்கின்ற நீரை எல்லாச் செடிகளுக்கும் பாய்ச்சவேண்டும் என்ற நோக்கில் சிறிய பானையில் கையால் மொண்டு மொண்டு செடிகள்தோறும் நீர் ஊற்றிக் காப்பாற்றுகின்றான். இருக்கின்ற நீரை ஏற்றவகையில் பயன்படுத்தும் நீர் நிர்வாக முறையும், உழைத்து வாழவேண்டும் என்ற விடா முயற்சியும் அவன் பள்ளியில் கற்காத பாடங்கள். ஆனால் அவன் வாழ்க்கை பலருக்கும் பாடமாய் அமைந்துள்ளது.

'சிற்றோடு கையில் ஏந்தி
ஒருகாணி பருத்தி தேற்ற
ஒற்றை ஆள் நீர் இறைத்தான்
உழைப்பு ஒன்றே செல்வம் என்பான்!

உழவர்கள் உழைப்பில் பெரிதும் பங்கு கொள்கின்றவர்கள் அவர்கள் இல்லத்தில் வாழும் பெண்களே. ஆண்கள் தோட்டத்தில் வேலை செய்தால், பெண்கள் அவர்கட்குத் துணையாகப் பணிபுரிவதோடு ஆடு, மாடு, கோழிகளை வளர்த்து அவர்கட்குத் துணைவியராக மட்டுமல்லாமல் துணையாகியும் வாழ்பவர்கள்.

அவ்வுழவர்தம் அன்றாட உணவு வகைகளோ வியப்பைத் தரும் வகையில் அமைந்துள்ளன. நன்செய்யிலே நாடெல்லாம் உழவுசெய்யும் உழவனுக்கு, அந்நன்செய் நிலம் சொந்தமில்லை; அவன் கூலிக்கே வேலை செய்கிறான். அதுவும் நிலையான வேலையல்ல. பருவகாலங்களில் பயிர்செய்ய ஆற்று நீரைப் பாய்ச்சி, நாள் முழுவதும் உழவுசெய்கின்றான். கதிரவன் மறைந்த பின் களைத்துச் சலித்து வீடு திரும்புகிறான். வீட்டிற்குச் சென்றதும் இன்று உன்பதற்கு என்ன செய்துள்ளாய் என்ற வழக்கமான கேள்வியைக் கேட்டுவைத்தான் அவ்வுழவர் பெருமகன். அம்மங்கை நல்லாளும் வழக்கமான பதிலையே கூறினாள். 'காலையில் ஆக்கிவைத்த சோற்றுக்கு முடக்கத்தான் துவையல்' என்றாள்.

'நன்செயைச் சுற்றும் வாய்க்கால்
நல்லாற்று நீரை வாங்கிப்
பொன் செயும் உழவு செய்வோன்,
பொழுதெல்லாம் உழவு செய்தேன்
என்செய்தாய், என்ற பாட்டை
எடுத்திட்டான்; எதிரில் வஞ்சி
முன்செய்த கூழுக்கு அத்தன்
முடக்கத்தான் துவையல், என்றாள்

என அவர்தம் வாழ்வைக் காவியமாக்கி விடுகின்றார் கவிஞர்.

அவர்தம் உணவும் உறையுளும் வறுமையுடையதாக இருப்பினும் அவர்களின் இல்லற வாழ்வு, இசையமைந்த இனிய பாட்டாக இருந்தது. வளமாக வாழ்பவர்க்குக் கிடைக்காத அவ் வின்பம் இவர்கட்கு வளமாகக்கிடைத்தது.

தென்னையும் மாவும் சூழ்ந்து, கோயிலும் தேரும் ஓட்டுக் கூறைகளும் நிறைந்து இருப்பதுதான் சிற்றூர். அவ்வூர் மக்கள் நிலை பரிதாபத்துக்கு உரியதாக இருந்தாலும் அவ்வூர் உயிர்களை வாழவைக்கும் உணவினை உற்பத்தி செய்யும் வற்றாத ஊற்றாகத் திகழ்கின்றது.

'ஊர் இது; நாட்டார்க்கெல்லாம்
உயிர் தரும் உணவின் ஊற்று'.

ஆனால் அவ்வூற்று இன்று வற்றிவிடும் நிலையில் உள்ளது என்பதை பெரும் பெரும் நகரங்களில் வாழும், பெரிய பெரிய மனிதர்கள் நினைந்து பார்க்க வேண்டாமோ?

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமானால் உழவர்கள் எழுச்சிபெற வேண்டும். அவர்கள் அறியாமையாகிய இருளிலிருந்து வெளிவரவேண்டும். உழைப்பதைப்போலவே தங்களுக்கு உள்ள உரிமையையும் அவர்கள் உணரவேண்டும்

'சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னை
தொகையாக எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்'

என அவனிடம் இலைமறைவுகாயாக மறைந்து கிடக்கும் ஆற்றலை நினைவூட்டுகின்றார்.

அவர்கள் மாடாக உழைப்பதற்கேற்ற ஊதியமும் பெற்று வாழ்க்கையை மகிழ்ச்சி உடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். உழவுத்தொழிலே முதன்மைவாய்ந்த தொழிலாக உள்ள நாட்டில் தான் வாழ்கிறோம் என்பதை முதலில் உழவர் பெருமக்கள் உணர வேண்டும். 'ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர் உதையப்பராகி விட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப்பா நீ' என்ற கவிதை வரிகளை உழவர் பெருமக்கள் உணர வேண்டும். வன்செயலில் ஈடுபட வேண்டும் என்பது இதற்குப் பொருள் அல்ல. மன வலிமையோடு சிந்தித்துச் செயல்பட வேண்டும்என்பதே இதற்குப்பொருள். இதனையே,

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்'

என்று மென்மையாகப் பாடினார் பாரதியார். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்யும் நாளே செந்நெல்லும் செழுங்கரும்பும் விளைந்து நாடு செழிக்கும் நாளாகும். நாடு செழித்து எல்லோரும் வாழ வேண்டும் என்பதே நல்லோர்கள்எண்ணமாகும். அவ்வெண்ணம் செயலாகும் நாள் என்று வரும்? என்றேனும் வரும்.

10. பழமொழிகள்

வாய்மொழி இலக்கியங்கள் விரிந்த எல்லையை உடை யன. அவற்றை நாட்டுப் பாடல்கள், நாடோடிக் கதைகள், தாலாட்டுப் பாடல்கள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடு- கதைகள் எனப் பலவாறாக வகைப்படுத்திக்கூறுவர். இவ் வாய் மொழி இலக்கியங்கள் அவ்வக்காலச் சமுதாயத்தின் உள்ளுணர் வுகளை வெளிப்படுத்தும் சிறந்த கருவிகளாக விளங்கிவருகின்றன.

பழமொழிகளின் தன்மை

வாய் மொழி இலக்கியங்களுள் சிறந்த ஓர் இடத்தைப்பெறு வன பழமொழிகள் ஆகும். செறிவு, சுருக்கம், தெளிவு, எளிமை ஆகிய தன்மைகளைக் கொண்டது பழமொழி அது மக்கள் மன தில் ஆழப்பதிந்து குறித்ததை முடிக்கத் தூண்டும் ஆற்றல் வாய்ந்தது என்பார் தொல்காப்பியர். 'மக்கள் பேச்சிலே கலந்து பழகி வரும் செறிவு மிக்க அறிவு வாக்கியமே பழமொழி' என்பார் ஆர்ச்சர் டெய்லர். வாழ்வை ஊன்றிக் கவனித்து உணர்ந்த உண் மைகளின் துணுக்குகளே பழமொழி என்று விளக்கம் கூறுகிறது ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி. பழமொழி சிறியதாகவும் பொதுவானதாகஅணி நயம்பட அமைந்ததாகவும் பழமையான தாகவும் உண்மை கூறுவதாகவும் அமைய வேண்டும் என்பர் இந்நாளைய பழமொழி ஆய்வாளர். இவ்விளக்கங்களை நோக்க தனிமனித அல்லது சமுதாய அனுபவத்தின் வெளிப்பாடே பழ மொழி என்பது புலனாகின்றது. பழமொழிகளின் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் நோக்கி இவற்றை ஒருவரி இலக்கியங்கள் என்று கூறினும் பொருந்தும்.

பழமொழிகளின் பொருள் பாகுபாடு

பழமொழிகளைப் பொருள் அடிப்படையில் ஆண் பெண் பற்றியவை, குடும்பம் பற்றியவை, பிற உயிர்கள் பற்றியவை எனப் பகுப்பர் பழமொழி ஆய்வாளர். இப்பகுப்பில் இன்னும் தெளிவும் வரையறையும் தோன்றவில்லை, எனினும் தொழில் அடிப்படையில் உள்ள பழமொழிகளைத் தொழில் பழமொழிகள் என்று கூறுவது அமைவுடையதாகும். பல்வேறு தொழில்கள் இருப்பினும் குறிப்பிடத் தகுந்த சிறப்பும், பழமொழியின் தாக்கத்திற்கு வெகுவாக உட்பட்டதுமான தொழில் வேளாண் தொழிலே யாகும்.

மரபு

தொல்காப்பியர் காலந்தொடங்கி இன்றைய காலம் வரை, வேளாண்மை வளர்ந்து வந்த வரலாற்றை இலக்கியங்கள் வாயிலாக அறிந்தோம். ஒரு காலத்தின் பழக்க முறைகள் அடுத்து வரும் காலங்களுக்கும் பொருந்தும் வகையிலும் மக்கள் அதனை ஏற்று போற்றும் வகையிலும் அமையுமானால் அதனை மரபு என்று கொள்கிறோம். அம்மரபுகளைப் பிரதிபலிக்கின்றவைகளில் முதன்மையாக விளங்குவது பாமர மக்களின் அன்றாட வாழ்வில் நடமாடும் பழமொழிகளேயாகும்.

தமிழ் மக்களால் வழங்கப்பட்டு வரும் பழமொழிகளில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுவன வேளாண்மைப் பழமொழிகள். இன்று கிடைத்துள்ள பன்னிரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பழமொழிகளுள் சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்டவை வேளாண்மை பற்றியவையாகும். அவை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வேளாண்மை பற்றி மக்கள் கொண்டிருந்த கருத்துக்களையும் அனுபவங்களையும் வெளியிடுகின்றன. அவை நிலத்தின் தன்மை, நிலத்தைத் தேர்ந்தெடுக்கும் முறை, வேலியிட்டு உழவு செய்யும் முறைகள், மழை பெய்வதைப் பற்றிய முன்னறிவிப்பு, எருவிடுதல், நீர்ப்பாசனம், களை எடுத்தல், அறுவடை முதலியவை பற்றிப் பொதுவாகவும், சில பயிர்களைப் பற்றி சிறப்பாகவும் குறிப்பிடுகின்றன.

இவைகளே அன்றி, கால்நடைகள் பற்றியும், வேளாண் பொருள்களை விற்றல், வாங்கல் பற்றியும் பழமொழிகள் உள்ளன. இப்பழமொழிகளுள் எவை என்று தோன்றியவை என்று அறுதியிட்டுக் கூறுதல் எளிதன்று; எனினும் அவை கருத்துள்ளவை. பன்னெடுங்காலமாக, தலைமுறை தலைமுறையாக

வழங்கி வருபவை என்பது தெளிவு. இம்மொழிகள் உழவர்களின் மனநிலை, வேளாண்மையில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு, அதனைச் செயலாற்றிய முறை, பழமையிலும் புதுமையை ஏற்றிப் போற்றும் ஆர்வம் ஆகியவற்றையும் பழமையிலிருந்து புதுமைக்கு வழிவகுக்கும் நுட்பம், எதனையும் விரிந்த நோக்கோடு அணுகும் முறை ஆகியவற்றையும் விளக்குகின்றன.

வேளாண்மையின் சிறப்பு

பண்டைக்கால முதலே பயிர்த் தொழில் மற்றைத் தொழில்களுக்கும் உயிர்த் தொழிலாக விளங்கி வந்துள்ளது-விளங்கி வருகிறது. உரிமைத்தொழில்களில் ஒன்றான இதனை அச்சாணி எனவும் புலவர் புகழ்ந்துள்ளனர். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' எனவும் போற்றப்பட்ட ஒப்பற்ற தொழில் இதுவாகும். ஆகவே 'மேழிச்செல்வம் கோழைபடாது' 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்று கொன்றைவேந்தன் கட்டளை இடுவதைக் காணலாம்.

அரசனுக்கு நிகராகக் குடியானவனை பலவாறு ஒப்பிட்டும், குடிமக்கள் உயர்வே முடிமக்கள் உயர்வுக்கு அடிப்படையானது என்றும் பழமொழிகள் கூறுகின்றன. 'குடியானவனோ முடியானவனோ' என்பது ஒப்பிட்டுச் சொல்வதாகும். 'குடி உயர முடி உயரும்' 'குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்' என்பன ஆட்சியின் உயர்வுக்கு அடித்தளமாக அமைந்தது உழவுத்தொழிலே என்பதை விளக்குவனவாகும்.

பிற தொழில்களுடன் ஒப்பிடும்போது உழவுத்தொழில் அத்தனை லாபகரமான தொழில் அல்ல என்பது உண்மைதான். என்றாலும் அதனை விட்டுவிட்டால் அதனைச் சார்ந்து நின்று செயல்படும் தொழில்கள் நடைபெற இயலாது போய்விடுமன்றோ? ஆகையால்தான் 'விதை முதல் அகப்பட்டாலும் வேள்ளாமையை விடாதே' என்கிறது பழமொழி. நட்டம் வந்த போதிலும் துன்பம் வந்தபோதிலும் அதனைத் தொடர்ந்து நடத்தியே தீரவேண்டும் என்பதனை 'அழுது கொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு' என்னும் பழமொழி வற்புறுத்துகிறது. ஏனென்றால் துன்பம் ஒரு தொடர்கதை அல்ல. இயற்கை அன்னையின் தயை வரும்போது உழவுத்தொழில் நிச்சயமாகக் கைதூக்கிவிடவும் செய்யும். அதனாலேயே 'உழுதவன் கெட்டதில்லை' என்று வாழ்க்கை அனுபவத்தை வரையறை செய்து கூறுகிறது பழமொழி.

மேலும் பயிர்த் தொழிலே ஒரு புண்ணியத் தொழில் என்பதாக்வும் 'பயிரை இட்டு பாவத்தைத் தொலை' என்ற பழமொழி எடுத்துக்காட்டுகின்றது.

நிலம்

உழவர்கள் தங்கட்குப் புதிதாக நிலம் வாங்கும்போது நன்செய் நிலத்தையே பெரிதும் விரும்பினார்கள். நீர் வளம் கொண்ட நன்செய் நிலம் உழைக்கின்ற அளவிற்கு முப்போகமும் பயன்தரும். புன்செய் என்றாலோ வானம் பார்த்த பூமியாக பருவ மழையை எதிர்பார்த்தே பயிர்செய்ய வேண்டும். அதுவும் ஒருபோகம் மட்டுமே கிடைக்கும். ஆதலின் 'நஞ்சை வரும்படியோ ராசவரும்படியோ' என்று போற்றப்பட்டது.

நன்செய் நிலமே இல்லாதவிடங்களில் புன்செய்ச் சாகு படியே மேற்கொள்ள இயலும். ஆகவே புன்செய்ச் சாகுபடியும் ஏற்றுச் செய்யத் தக்கதே. மேலும் பற்பல பயிர்கள் புன்செய்ப் பயிர்களாகவே உள்ளதும் குறிப்பிடத்தக்கது. நன்செய்க்கும் புன் செய்க்கும் ஏற்ற இடம் எது என்பதனை 'மலையடிப் புஞ்சை, மதகடி நஞ்சை' என்னும் பழமொழி குறிப்பிட்டுச் சொல்லுகிறது. நன்செய் மதகடியில் முதல்மடையில் இருப்பதனால் நீர் பாய்ச்சு வதற்கு எளிதாக இருக்கும். புன்செய் நிலம் மலையடியில் இருந் தால் இயல்பாக அடிக்கடி மழை பெய்யும் வாய்ப்பு மிகுதியாக இருக்கும். இத்தகைய நன்செய் புன்செய் நிலங்களிலும் பல ஆண்டுகள் பயிர்செய்யப்பட்டு பண்பட்டு உரமேறிய பழைய நன் செய் நிலங்களும், புதிதாக உள்ள புன்செய் நிலமும் சிறந்தவை என்பதைப் 'புஞ்சையில் புதிசு நஞ்சையில் பழசு' என்னும் பழ மொழி எடுத்துரைக்கிறது.

சிற்றூர்களில் நிலமும் கால்நடைகளுமே செல்வங்களாகக் கருதப்படும். உலகம் தோன்றிய நாள் முதல் உள்ள நிலமே இன்று வரை உள்ளது. இனி புதிதாக நிலம் தோன்றப் போவதில்லை என்பதை 'பொண்ணு பொறக்கலாம் பூமி பொறக்காது' என்கி-றது பழமொழி. இருக்கின்ற நிலத்தை உழவர்கள் ஒருக்காலும் விற்றுத் தின்னச் சம்மதிக்க மாட்டார்கள். 'மண்ணை வைத்துத் தின்னு, பொன்னை வித்துத் தின்னு' என்னும் அறிவுரை பொன்-னைவிட மண்ணை அவர்கள் உயர்ந்ததாகக் கருதியதைக் காட்டுகின்றது.

நிலத்தைத் தெரிந்தெடுக்கும்போது அது நீர்ப்பாசனத்துக்கு ஏற்றதாய் ஏரி, குளங்களின் மட்டத்தைவிடத் தாழ்ந்ததாய்

இருக்கிறதா என்றும் பார்த்துக் கொண்டனர். குளத்தின் மடைக்கு அருகாமையில் உள்ளதா என்பதும் கவனம் பெற்றுள்ளது. 'வெள்ளமே போனாலும் பள்ளமே விளையும்', 'மேனி மினிக்கியைக் கொண்டவன் கெட்டான்' என வரும் பழமொழிகள் பாசன நீர் வீணாகாமல் எளிதில் பாசனம் செய்வதற்கு ஏற்ற வகையில் நிலத்தைத் தெரிந்தெடுக்க எழுந்தன ஆகும்.

குளத்துப் பாசனம், ஆற்றுப் பாசனம் முதலிய எவ்வகைப் பாசனத்திலும் நிலம் மடையின் ஆரம்பத்தில் இருப்பது நல்லது. கடை மடைக்கு நீரைக் கொண்டு செல்வதற்குள் இடையே உள்ள எத்தனையோ வயல்களின் வாய்மடைகளைக் கடந்து செல்ல வேண்டியதிருக்கும். இதனாலேயே 'மலையடி கெட்டாலும் மதகடி கெடாது', 'கடைமடை பள்ளத்துக்கு முதல் மடை மேடு நலம்' என்றும் அறிவுரைகள் தோன்றலாயின.

'நல்ல குலத்திற் பிறந்தவர்களை அவர்கள் வாயில் இருந்துவரும் சொல் காட்டிவிடும்; அதுபோல நிலத்தின் இயல்பை அந்நிலத்தில் வளரும் செடிகள் காட்டிவிடும்' என்று சொல்வார் வள்ளுவர். நன்செய், புன்செய் நிலங்கள், கரிசல், செம்மண், மணல்கால் நிலங்கள் ஆகியவற்றை அவற்றில் வளரும் செடிகளைக் கொண்டே அறிந்து தெரிந்தெடுக்கும் அனுபவத்தைத் தமிழ்மக்கள் பெற்றிருந்ததனைப் பழமொழிகள் காட்டுகின்றன. 'ஆரை பற்றிய நஞ்சையும் அருகு பற்றிய புஞ்சையும் நலம்,' 'நன்னிலம் கரந்தை நடுநிலம் கொளுஞ்சி' 'ஆரை பற்றிய நஞ்சை. அருகுபற்றிய செவ்வல், கோரை பற்றிய கரிசல்' எனவரும் பழமொழிகளிலிருந்து ஆரைக்கீரை, அருகம்புல், கரந்தைச்செடி, கோரை ஆகியவை முளைத்து வரும் நிலங்கள் இயல்பாகவே வளம் மிகுந்தவை எனக் காட்ட வல்லன என அறிகிறோம்.

கரிசல் நிலத்துக்குத் தனித்திறன் உண்டு. தன்னுள் கொண்ட ஈரத்தை நீண்ட நாட்கள் வைத்திருக்கும் வல்லமையே அது. 'கரிசல் நிலத்தில் காக்கும் ஈரம்' என்பதாக இவ்வுண்மை நாட்டப்படுகிறது. ஆகவே புன்செய் நிலங்களில் கரிசலே சிறந்தது என்னும் கருத்தைக் கொண்டிருந்த மக்கள் 'காணி தேடினும் கரிசல் தேடு' என்று மற்றவருக்கும் அறிவுரை கூறலாயினர்.

வாங்கத் தகாத நிலம் மணற்கால் நிலமே. இத்தகைய நிலங்களில் சாகுபடி செய்வது மிகவும் கடினம். நெற்பயிர், பிற நன்செய்ப் பயிர்இங்கு உறுதியாகப் பயிரிட இயலாது. ஏனெனில்

நீர் தேங்காதுபிற பயிர்கள் பயிரிட்டாலும் ஈரம் சீக்கிரம் காய்ந்து விடும். அடிக்கடி நீர்ப்பாசனம் அளிக்க வேண்டும். தவறினால் பயிர் காய்ந்து விடும். இவற்றையெல்லாம் அனுபவத்தில் கண்ட மக்கள் தம் சந்ததியினர்க்கும் எடுத்துரைக்க விரும்பி 'மணல் உழுது வாழ்ந்தவனுமில்லை மண்ணுழுது கெட்டவனுமில்லை' அளர் உழுதவன் ஆண்டான் மணல் உழுதவன் மாண்டான்' என்று அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

களர் நிலம்

பல்வேறு மண்வகைகளில் களரும் ஒன்று. களர் மண் நிலம் சாகுபடிக்கு ஏற்றதல்ல. உவர் நிலமும் அத்தகையதே. அத்தகைய நிலத்தைப் பயிர் செய்யாமலே இருப்பது நல்லது. அறிவுடைமையுமாகும். அவ்வாறு செய்யாமல் களர் உவர் நிலத்தைப் பயிர் செய்யத் துணிந்தால் என்னவாகும் என்பதை உவமையுடன் காட்டுகிறது பழமொழி. களர் நிலத்தை உழாதே கடும்படையில் போகாதே' உவர் நிலத்தில் இட்ட விதையும் சமரிடத்தில் சென்ற சேனையும் இரண்டாம் பட்சம்' என்பவற்றால் களர் உவர் நிலத்தில் இட்ட விதைகள் முளைப்பதும் விளைச்சல் தருவதும் எதிர்பார்க்க இயலாதவை எனத் திட்டவட்டமாக அறிந்து வைத்திருந்தனர் நம் முன்னோர் என அறியலாம்.

நல்ல நிலமும் நாளா வட்டத்தில் பாசன நீரின் தன்மையால் களர் நிலமாக உவர் நிலமாக மாறுதல் இயல்பு. அவ்வாறு ஒருவரது நிலம் அமைந்துவிட்டால் எவ்வழியில் அதனைத் திருத்துவது? அதனை மாற்றியமைக்க பலவழிகளையும் கையாண்டு அவற்றிலிருந்து கண்டறிந்த தெளிந்த முடிபாக பிரண்டையையோ, வேப்பந்தழையையோ, வேப்பம் பிண்ணாக்கையோ இடலாம் என்று கூறுகிறது பழமொழி, 'களர் கெட பிரண்டை புதை,' 'களர் முறிக்க வேப்பம் தழை 'உவட்டை மாற்றிட வேப்பம்புண்ணாக்கிட' என்னும் பழமொழிகள் அத்தகையவை.

ஒருவருக்கு உரிமை உடைய நிலம் ஒரே இடத்தில் ஒரு சேர அமைந்திருக்க வேண்டும். பல்வேறு இடங்களில் துண்டு துண்டாக இருக்குமானால் பயிர்த்தொழிலுக்குப் பலவகையான இடையூறுகள் ஏற்படலாம். வேலி அடைத்தல், பயிர்ப்பாது காப்புச் செய்தல், பாசனம் செய்தல், மேலாண்மை செய்தல் ஆகிய பலவற்றைச் சிறப்பாக அளித்தல் இயலாது. நிலம் ஒரே

இடத்தில் இருப்பதையே விரும்பிய தமிழ்மக்கள் 'கச்ச நில மானாலும் கைசேர்க்கை' என்று கூறி வருகின்றனர். புஞ்சை நிலத்துக்கும் பயன்படாத நிலத்துக்கும்கூட இக்கருத்து பொருந் தும் என்பதைப் 'புஞ்சையானாலும் பலம் சேர,' 'புறணியா-னாலும் பொருள் சேகரம் பலம்,' 'உழ்வும் தரிசும் ஒருவிடத்தில்' எனப் பல்வேறு விதத்தில் பழமொழிகள் பகருகின்றன.

விளைச்சல் நிலம் ஊர் அருகில் இருக்குமானால் பல வழிகளிலும் அழிவு அதிகமாக இருக்கும். ஆதலால் அழிவு நேராமல் இருக்க ஊருக்குச் சற்றுத் தொலைவில் உள்ளதாக நிலம் இருப்பதையே விரும்பினார்கள். 'ஊரோரத்தில் கொல்லை உழுதவனுக்குப் பயிர் இல்லை' என்று இதனைப் பழமொழி கூறுகிறது. ஊர் ஓரத்தில் வயல் இருந்தால் அழிவு மட்டுமல்ல பலரின் கண்பார்வையும் பட்டு கண்ணேறு காரணமாக விளைச் சல் குறையவும் கூடும் என்பதை 'ஊரோரம் கழனி உம்மலுக்குத் தந்தேன்' என்னும் பழமொழி தெளிவுறுத்துகின்றது. ஊர் அருகில் மட்டுமல்லாது ஆட்கள் நடந்து செல்லும் வழி அரு கினிலும் வயல் இருத்தல் அவ்வளவு நல்லதல்ல. அவ் வழியே செல்பவர்கள் அவ்வயலில் தோன்றும் கதிரை அவ்வப்போது பிடுங்கிச் சென்று விடுவார்கள். வயலில் நெற்பயிர் செய்திருந்-தால் வழி ஓரமாக வெகு தூரம் வரை கதிரில்லாத பயிர்-களையே காண நேரிடும். இந்த உண்மை 'வழியோரம் கழனி வைக்கலுக்குத் தந்தேன்' என்று உணர்த்தப்படுகின்றது,

உள்ளூரில் இருக்கின்ற நிலத்தை நேரடி மேற்பார்வையில் பயிர் செய்து மிகுதியான விளைச்சலைப் பெறலாம். ஆனால் வேற்றூரில் நிலம் இருக்குமானால் அது இயலாது. ஆகவே வேற் றூரில் நிலம் இருப்பதை உழவர்கள் விரும்பவில்லை, உள்ளூர்ப் பெண்ணும் அயலூர் மண்ணும் ஆகாது' என்று ஒப்பிட்டுச் சொல்லிச் சென்றனர். உள்ளூரிலே பெண்ணைக் கொண்டால் சிறிது கோபித்தாலும் உடனே தாய்வீடு சென்றுவிடுவாள். அயலூர் மண் என்றால் ஒரு நாள் போகவில்லை என்றாலும் எதிர்பார்த்த விளைச்சலைத் தராது.

பருவம்

பயிர் செய்வதற்குப் பருவம் இன்றியமையாதது. 'பருவத்தே பயிர்செய்,' ஆடிப்பட்டம் தேடிவிதை,' பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு' என்பன பருவத்தில் பயிர்

செய்ய வேண்டியதை வற்புறுத்திக் கூறுகின்றன. பட்டம் தவற விட்டால் என்னவாகும்? நட்டமே உண்டாகும் என்பதை 'பட்டம் தப்பினால் நட்டம்' என்னும் பழமொழி அடித்துச் சொல்கிறது. உழவுத் தொழிலில் உடலை வருத்தி உழைக்க வேண்டிய தேவை மிகுதியாதலால் சோம்பலால் பட்டம் தவற விட்டுவிடுதல் நல்லதல்ல என்பதனை இவை விளக்குகின்றன. தமிழ்நாடு நெற்பயிர் மிகுதியாகப் பயிரிடப்படும் நாடாதலின் தலையாய அப் பயிர்க்கு விதைக்க வேண்டிய பருவம், நட வேண்டிய பருவம் முதலியனவும் பழமொழிகளால் இடம் பெறு கின்றன. 'ஆடி ஐந்தில் விரைக்கிற விரையும், புரட்டாசி பதி-னைந்தில் நட்ட நடவும் அறுநான்கில் பெற்ற பிள்ளையும். பெரியோர்கள் தேடிய தனம்' என்பது அக்கருத்தைக் கூறும் மொழியாகும். மேலும் எந்தக்கிழமையில் விதைக்க வேண்டும். நடவேண்டும் என்பதையும் பழமொழிகள் காட்டுகின்றன 'வெள்ளி விரைபடி வியாழன் கதிர்பிடி' 'வெள்ளியில் விரைபிடி சனியில் கதிர்பிடி', 'சிங்கத்தில் சிதறினால் கும்பத்தில் குவிக்க லாம்' என வருபவை அத்தகைய பழமொழிகள்.

நாற்றங்காலில் நாற்று விதைப்பதற்கு உரிய நேரம் மாலை நேரமே என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். சில வகை விதை களை நீரில் சிறிது ஊறவைத்து அல்லது 'முளைகட்டி விதைக்-கும் பழக்கமும் உண்டு. இத்தகைய விதைகளை அதிகாலையில் விதைப்பதைவிட மாலையில் விதைப்பதே நல்லது. காலை விதைப்பின் பின்னர் ஏறத்தாழ பன்னிரண்டு மணி நேரம் அவ்-விதைகள் சூரியனுடைய வெப்பத்தை நேரடியாகவோ மறைமுக மாகவோ ஏற்கின்றன. ஆனால் மாலையில் விதைத்தால் அடுத்த பன்னிரண்டு மணி நேரம் இரவின் தண்மை அவற்றுக்கு உதவுகிறது. இதனால் காலை விதைப்பதைவிட மாலை விதைப் பில் அதிக விதைகள் பழுதின்றி நாற்றாக வளரும் வாய்ப்பு ஏற் படுகிறது. இதனை 'அத்தத்தில் நாத்து விடு' என்கிறது பழ மொழி. அத்தம் என்பது சூரிய அஸ்தமன நேரம். அதாவது மறையும் நேரமாகும்.

உழவு

நிலமும் நீரும் இருந்தால் மட்டும் போதாது. நன்றாக உழவும் வேண்டும். 'ஏழுழவு உழுதால் எருப்போட வேண்டாம்' என்பதும் உழாமல் எருப்போட்டால் அதனால் பயன் ஒன்றும் விளையாது என்பதை 'உழவிலும் பகை எருவிலும் தீராது'

என்பதும், நிலத்தை உழுது ஆறப்போடுவது மிகவும் இன்றியமையாதது என்பதை 'காலப் புழுதி இல்லாதவன் கைமுதல் இழப்பான்' என்ற கருத்தும் விளக்குவதால் அறியலாம்.

இவ்வுழவும் பயிருக்கு ஏற்ற வகையில் அமைய வேண்டும் என்ற மரபைக் கொண்டிருந்தார்கள் 'கம்புக்குக் கால் உழவு; கொள்ளுக்கு ஒருழவு', 'எள்ளுக்கு ஏழுழவு' என்பன அக்கருத்தை வலியுறுத்துகின்றன.

எரு

உழவு செய்தல் இன்றியமையாதது எனினும் தொடர்ந்து பயிர் செய்யும் நிலத்திற்கு எரு இடுதல் தேவையானதாகும். நல்ல வளமான நிலமாக இருந்தாலும் எரு இடவேண்டும் என்பதை 'எரு செய்வதை எமை செய்யாது', 'எரு செய்வது இனவன் செய்யான்', 'உரம் உதவுவது ஊரார் உதவமாட்டார்' எனும் பழமொழிகள் உணர்த்துகின்றன. 'குப்பை இல்லாத வேளாண்மை சப்பை' ஆதலின் 'எருது குழை இன்றி ஏர் பிடியாதே' எனவும் உறுதியாகக் கட்டளை இடுகிறது.

உடனடியாகப் பலன் தேவையானால் ஆட்டெரு இடவேண்டும். இதனை 'ஆட்டெரு அவ்வருடம் மாட்டெரு மறுவருடம்', 'ஆடு அப்பூ ஆவிரை முப்பூ' என்னும் பழமொழிகள் காட்டுகின்றன. ஆவிரையும் மற்ற தழையுரங்களும் நல்ல மணிகளை உருவாக்கும் என்பதை 'ஆடு பயிர் காட்டும் ஆவரை நெல் காட்டும்' என்னும் பழமொழி குறிப்பிடுகிறது. உரத்தைப் பயிரின் பல்வேறு வளர்ச்சிப் பருவத்திலும் பகிர்ந்து அளிக்க வேண்டும், அதுவும் குறிப்பாக கதிர்விடும் வரை உரமிடவேண்டும் என்பதை 'ஈயும் தனையும் எரு வை', 'அடுத்து உரம் எடுத்துப்போடு' எனக் கூறுகின்றன. அடுத்து உரம் என்பதை மேலுரம் எனக் கொள்ள வேண்டும்.

உரம் இடும்போது குறிப்பாக இரசாயன உரம் இடும்போது நிலத்தில் ஈரம் இருக்கவேண்டும், அதே சமயம் நெல்லுக்குத் தண்ணீர் வெள்ளம்போல் தேங்கி நிற்கவும் கூடாது இவ்வுண்மையை 'ஈரம் போகாமல் எருவை', 'பாயும் ஜலம் முழுதும் வத்து பழைய எருவை எடுத்துப்போடு' எனும் உழவர்தம் அனுபவ மொழிகள் காட்டுகின்றன. மணல்கால் நிலங்களுக்கு வண்டல் மண் இடுவதே அதுவும் ஆற்று வண்டல் இடுவதே சிறந்த உரமாகவும் இருந்ததை 'ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்',

'ஆற்று வண்டல் தேற்றும் பயிரை' என்னும் பழமொழிகள் சுட்டுகின்றன.

களை எடுத்தல்

பண்டைநாளில் பூச்சி பூசணங்களைவிட களைகளைக் கண்டே உழவர்கள் அஞ்சினார்கள். 'கோரை குடியைக் கெடுக்கும்' 'கவடிருந்த நெஞ்சும் களை இருந்த பயிரும் கடைத்தேறாது', 'தாசி இருந்த வீடும் தாதனா முளைத்த காடும் பாழ்' என அவ்வெண்ணம் பழமொழி வடிவம் கண்டது, ஆகவே கிளைக்கிறபோதே களையைக் கிள்ளு' எனும் ஏவல் பிறந்தது. 'களை எடாதவன் கபோதி' என்று ஏளனம் செய்தனர். ஏனெனில் 'களை எடாதவன் விளைவெடான்' என்பது உறுதி ஆயிற்று. களை பிடுங்காப்பயிர் குறைந்த விளைச்சல் தரும் என்பதை 'களைபிடுங்காப்பயிர் கால் பயிர்' என்று பழமொழி கூறுகிறது. 'களையெடுத்தால் விளைச்சல் கூடுவது திண்ணம்' ஆதலால் 'வெட்டிக் களை எடுத்தால் கட்டுக்கலம் காணும்' என்னும் மொழி உண்டாயிற்று.

அறுவடை செய்த பின்பும் நிலத்தில் களை இருத்தல் ஆகாது. அண்மைக்கால ஆய்வுப்படி இக்களைகள் பல்வேறு பயிர் நோய்ப் பூச்சிகளுக்கு இடைக்காலப் பயிராக (Hosts) உதவுவதால் 'கதிர் களைந்தும் களையைப் பிடுங்கு' என்ற கருத்தும் உழவர்களிடையே நிலைபெற்று வியப்பளிக்கிறது.

நடவு

நெற் சாகுபடிக்கு விதைப்பைவிட நடவே மேல் என்பது உழவர்கள் கண்டறிந்த உண்மை. இதனை,

'நடவுக்குத் தூவல் நாலத்தொரு பங்கு,
'கை விதைப்பைவிடக் கலந்த நடுகைமேல்'
'விதைத்துப் போட்டு உற்றுப் பார்ப்பதைவிட, நட்டுப் போட்டு சுற்றிப் பார்'

என பல பழமொழிகள் குறிப்பிடுகின்றன. நெல்லின் நடவு 'நண்டு நுழையாத நடவு' ஆக இருக்கவேண்டும். நடவின் இடைவெளி கூடுதலாக இருந்தால் கதிர்கள் பெரியவையாக இருக்கும். அளவோடு இருந்தால் போதிய விளைச்சல் கிடைக்கும். 'நெருக்க நட்டு நெல்லைப்பார் கலக்க நட்டு கதிரைப்பார்' என இக்கருத்து உணர்த்தப்படுகிறது.

விதைப்புக்கும் நடவுக்கும் ஏற்ற பருவத்தையும் பழமொழிகள் குறிக்கின்றன. 'ஆடி விரைப்பு ஆவணி நடவு' 'புரட்டாசி பதினைந்தில் நடவே நடவு' 'புரட்டாசி நடுகை திரட்சியான படுகை' என வருபவை அத்தகைய பழமொழிகள். ஐப்பசி, கார்த்திகையில் நடவு செய்யலாகாது என்பதை 'அற்பிசி நடுகை அவலுக்கு நெற் காணாது' கார்த்திகை பிறந்தால் கை நாற்றை எறிந்துவிடு' என்னும் பழமொழிகள் எடுத்துக் கூறுகின்றன.

கார்ப் பருவத்தில் குறைந்த வயதுடைய பயிர் பயிர்செய்யப்படுகிறது. பிசானத்தில் நீண்ட வயதுடைய நெல் பயிரிடப் படுகிறது. எனவே காரில் குத்துக்கு வைக்கும் நாற்றின் எண்ணிக்கை கூடும் இடைவெளியும் குறையும். பிசானத்தில் நாற்று எண்ணிக்கை குறைந்தாலும் இடைவெளி கூடினாலும் நல்லதே. இக்கருத்தை 'கார்ப்பயிர் கலந்து கெட்டது, பிசானம் நெருங்கிக் கெட்டது' 'அள்ளிய காரும் கிள்ளிய பிசானமும்' எனப் பழமொழிகள் புலப்படுத்துகின்றன.

விதை

நல்ல விதை இடுமுதல்களுள் தலைசிறந்தது. இதனை அதிக ஈரப்பதத்துடன் சேமித்து வைத்தால் புழுப்பூச்சிகள் அரித்–துக் கெட்டுவிடும். போதுமான அளவு காய வைத்தல் வேண்டும். காய்ந்த வித்துக்குப் பழுதில்லை' என்று பழமொழி கூறுகிறது. விதைவிதைத்த பின் பாய்ச்சும் இரண்டாவது தண்ணீர் உயிர்ப்புத் தண்ணீர் எனப்படும். இதனை விதைவிதைத்த நாலாம்நாள் பாய்ச்சுதல் தவிர்க்கப்பட வேண்டும். 'நாலாங் கொம்புத் தண்ணீர் நஞ்சுக்குச் சமம்' என்று பழமொழி அறிவுறுத்துகிறது.

பயிர்க் காப்பு

பயிர்களுக்கு வரும் அழிவுகள் இருவகை. ஒன்று நோயால் வருபவை. மற்றொன்று பூச்சிகளால் வருபவை. எந்தெந்தச் சமயத்தில் காற்று வீசினால், மழை பெய்தால் பூச்சிகள் தாக்கும் என்பதைப் பின்வரும் பழமொழிகள் காட்டுகின்றன.

'மூலக் காற்று புழு விழும்'
'அற்பிசி மாதம் அழுகைத் தூத்தல் அவ்வளவும் பூச்சி'
'ஆவணி மாதத்தில் நெல் விதைத்தால் ஆனைக்கொம்பு விழும்'
'அற்பிசி நடவு நட்டால் ஆனைக்கொம்பு விழும்'
'விசாகத்தில் மழை பெய்தால் பயிர்களுக்குப் புழு உண்டாகும்

இவ்வுண்மையை உணர்ந்து பயிர்க்காப்பு செய்தல் அறிவுடைமை யாகும் எனலாம்.

சாகுபடிக் குறிப்புகள்

பயிர்களைத் தகுந்த இடைவெளி விட்டுப் பயிர் செய்ய வேண்டும் என்பதையும் சில பழமொழிகள் உணர்த்துகின்றன. 'எட்டடி வாழை கமுகு, ஈரடி கரும்பு கத்தரி, இருபதடி பிள்ளை' என்பது அவ்வகையைச் சார்ந்தது. எத்தனைமுறை வயலில் களை கொத்த வேண்டும், நீர்பாய்ச்ச வேண்டும் என்பதை 'ஆறு கொத்து நூறு தண்ணீர் வாழை, ஏழு கொத்து எழுபது தண்ணீர் மஞ்சள்' என்னும் பழமொழி எடுத்துரைக்கின்றது.

நிலத்தில் அடிக்கடி கடலை இனப் பயிர்கள் பயிர்செய்வது நல்லதாகும். அவற்றின் வேர்முடிச்சுக்களில் உள்ள நுண்ணுயிர்கள் காற்றில் உள்ள காலகத்தில் இருந்து தழைச்சத்தை உருவாக்கி நிலத்தில் நிலைப்படுத்தும். அதனால் நிலவளம் பெருகி அடுத்துப் பயிரிடும் பயிருக்கு உதவும் இதனை 'கடலை விதைத்தால் கடுத்த உரம்' என்று பழமொழி கூறுகிறது.

பயிருக்கேற்ற நிலம்

பயிருக்கேற்ற நிலம் தேர்ந்தெடுக்கும் முறையும் பழமொழி களில் இடம் பெறுகின்றது. 'வெள்ளைக் களரில் விளையும் நெற் பயிர்' 'கரம்பு உழுது கம்பு விதை', 'எள்ளு விதைக்க எறங்காடு (கரிசல்)' 'கொள்ளு விதைக்க கல்லாங்காடு', 'களர் நிலத்தில் கரும்புவை', 'களர் உழுது கடலை விதை', 'பயறுக்குப் பஞ்ச பூமி', 'மஞ்சள் விதைப்பது மதவை நிலத்தில்', 'புகையிலைக்குப் புழுதிக் கொல்லை' என்பன அத்தகைய கருத்துக்கள் அடங்கி-யனவாகும்.

பாசனம்

நீரைத் தகுந்த முறையில் தகுந்த அளவில் பாய்ச்சுவது இன்றியமையாதது. நீரைச் சிந்துவது சீரைச் சிந்துவதற்குச் சமம். புன்செய்ப் பயிர்களுக்கு 'பாய்ச்சலும் வேணும் காய்ச்ச லும் வேணும்' என்பது அனுபவ மொழி. நெல்லுக்கு நீர் தேக்கி-னாலும் அளவை விஞ்சலாகாது. பெருகிய நீர் நெல்லுக்குப் பகை யாம்', 'நீர் பெருத்தால் நெல் சிறுக்கும்' என்பவை குறிப்பிட்ட-றிய வேண்டியவை ஆகும்.

பாசனத்துக்கு மிகவும் இன்றியமையாதன நீர் நிலைகள் ஏரிகள் கிணறுகள். ஏரிகள் நிறைந்தால் பிற நிலத்தடி நீர்நிலைகளான கிணறுகளும் வளம் பெறும் என்பதை 'ஏரி பெருகில் எங்கும் பெருக்கு', 'பாலி நிறையச் சாலி விளையும்' என்ற பழமொழிகள் காட்டுகின்றன.

'கிணத்தைக் காத்தால் வயித்தைக் காக்கும்', 'இறைத்த கிணறு ஊறும் இறையாத கிணறு நாறும்' என்பன போன்ற பழமொழிகள் கிணற்றுப் பாசனத்தின் சிறப்பறிந்து எழுந்தவை எனலாம்.

மழை

மழை பற்றி எண்ணிலடங்காத பழமொழிகள் உள்ளன. எந்தத் திசையில் மின்னுதல், எத்திசையில் இருந்து காற்றடித்தல், இடி இடித்தல், பூச்சிகளின் நடவடிக்கைகள், ஆகியவை மழை காட்டும் அறிகுறிகளாக அமைந்தன.

'மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை', 'வேனலுக்குக் கன மழை', 'குழறியடிக்கும் காற்றுக்கு கைமேல் மழை', 'தட்டான் தாழப் பறந்தால் கிட்டமழை' ஆகிய பழமொழிகள் அத்தகையவை. 'புரட்டாசி பெருமழை', 'ஐப்பசி அடைமழை', 'கார்த்திகை கனமழை' என்று மாதத் தொடர்புடனும் மழை குறிக்கப் படுகிறது. 'பங்குனி மழை பத்துக்கும் நட்டம்', 'சித்திரைமழை சின்னப்படுத்தும்' என கெடுதல் உண்டாக்கும் மழைகளும் பழமொழிகளால் உணர்த்தப்படுகின்றன.

சமுதாயம்

பிற தொழில்களில் கூட்டு முயற்சியுடன் செய்வதுபோல உழவுத் தொழிலில் பங்குதாரர்களைக் கொள்ளுதல் தகாது என்பதை 'இனக்கூட்டானாலும் நிலக்கூட்டாகாது' என்று பழமொழி கூறுகிறது. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும்/ உழவு கோலும் மிஞ்சாது' ஆகையால் 'எண்ணிச் செய்வது செட்டு எண்ணாமல் செய்வது வெள்ளாமை' என்னும் பழமொழியும் எழுந்தது.

உழவர்களில் பெரும்பாலோர் கடனை வாங்கிக்கொண்டு அதற்காக வட்டி நெல் அளப்பதும், சொந்த நிலம் இல்லாமல் வாரத்திற்கு நிலம் (குத்தகைக்கு) எடுத்துப் பயிர் செய்து நெல்லை அளப்பதும் உண்டு. இத்தகையோர் முன்னேறவே முடியாது என்பதை உழவர்கள் நேரில் கண்டவர்கள். அவ்வுண்மை

'கொண்டு வாரம் கொடுத்தவனும் கெட்டான்
உழுது வாரம் கொடுத்தவனும் கெட்டான்'
'கடன் வாங்கிப் பயிரிட்டவனும் மரம் ஏறி
கை விட்டவனும் ஒன்று'

என்னும் பழமொழிகளில் எதிரொலிக்கிறது.

நில உடைமையாளன் கூலியைக் குறைத்தால் வேலையாட்கள் ஒழுங்காகப் பணியாற்ற மாட்டார்கள். 'பண்ணாடி படியில் ஏய்த்தான், உழவன் நடையில் ஏய்த்தான்', 'ஆண்டை கூலியைக் குறைத்தால் சாம்பான் வேலையைக் குறைப்பான்' என்று அச்கருத்து எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வாறு தமிழகத்தில் வழங்கும் வேளாண்மைப் பழமொழிகள் வேளாண்மையின் பல்வேறு கூறுகளையும் அனுபவ உண்மைகளைக் கொண்டனவாய் செறிவும் தெளிவும் உடையனவாய் எடுத்துரைக்கின்றன. வேளாண்மை அறிஞர்களும் உழவர்பெருமக்களும் இவற்றை அறிந்து பேணுதல் நாடு நலம்பெறச் சிறந்த வழியாகும் என்பது திண்ணம்.

11. நாட்டுப்புறப் பாடல்கள்

'வரப்பே தலகாணி—செல்லனுக்கு
வைக்கோலே பஞ்சுமெத்தை
....
இந்த நடை நடந்து—செல்லா நாம்
எப்ப கரை சேருவதோ'

பாமர மக்களிடையே எழுதப்படாத, வாய்மொழி இலக்கியங்களாக வழக்கத்தில் இருத்து வருபவை நாட்டுப்புறப் பாடல்கள். இவை இன்ன காலத்தில் இன்னாரால் பாடப்பட்டன என்று அறுதியிட்டுக் கூற இயலாதவை. பழந்தமிழர் வாழ்வில் எத்தகைய சிறப்பு நிகழ்ச்சியும் படலும் ஆடலும் கலந்தே நடைபெற்றது. ஆதலின் இத்தகைய பாடல்கள் அவர்தம் வாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுவிட்டன.

நாட்டுப்புறப் பாடல்கள்

இப்பாடல்கள் தலைமுறை தலைமுறையாக செவிவழியாகவே கற்கப்பட்டும் கற்பிக்கப்பட்டும் வருபவை, ஆதலால் ஒரே பாடல் இடத்துக்கு இடம் சிறிது மாற்றம் பெறுவது தவிர்க்க இயலாததாகிவிடுகின்றது. கிராம மக்களின் இயற்கையான ஒழிவு மறைவு இல்லாத எண்ண ஓட்டங்களைப் படம் பிடித்துக்காட்டும் இவை அவர்களின் உணர்ச்சிப் பெருக்கு ஊற்றெடுத்துப் பாயும் இயற்கை நீரோடையாக, வற்றாத சீவநதியாக விளங்குகின்றன. ஒழுங்குபட்ட ஓசை, வளமான எளிய சொல்லாட்சி, தங்குதடையற்ற கருத்தோட்டம் இவை இப்பாடல்களின் தனிச் சிறப்புகள் எனலாம்.

இப்பாடல்களைப் பாடி மகிழ்பவர்கள் பாமர மக்கள். பல வகைத் தொழில்களையும் செய்பவர்கள்; வாழ்க்கையில் பெற்று அனுபவிக்க வேண்டிய அடிப்படை வசதிகளைக் கூடப் பெறாத வர்கள் என்றாலும் கிடைத்ததைக் கொண்டு மனநிறைவுடன் வாழும் பண்புடையவர்கள் அப்பாமர மக்கள் செய்யும் வேலை களின் பழுவை மறப்பதற்கும், களைப்பைப் போக்குவதற்கும், புது ஊக்கத்தையும் தெம்பையும் ஊட்டுவதற்குப் இப்பாடல்கள் பயன்படுகின்றன. எனவே பல்வேறு தொழில்களைச் செய்பவர் களும் இதனைப்பாடி மகிழ்கின்றனர். ஏற்றம் இறைப்போர், நாற்று நடுவோர், கழனி உழுவோர், களை பறிப்போர், அறு- வடை செய்வோர், கதிரடிப்போர், பாரம் சுமப்போர், படகு ஓட்டுவோர் என அனைவருக்கும் மகிழ்ச்சி ஊட்டுகின்ற இனிமை யும் எளிமையும் நிறைந்த இப்பாடல்கள் பெரும் புலவர்களையும் தம் வசப்படுத்தியுள்ளன. அவற்றின் ஆற்றலில் கட்டுண்ட அவர்கள் தங்கள் நூல்களிலும் நாட்டுப்புறப் பாடலின் சாயல் கொண்ட பாடல் வகைகளைப் புகுத்தியுள்ளதே இதற்குச் சான்றாகும்.

வகைகள்

நாட்டுப்புறப் பாடல்களைப் பல்வேறு வகைகளாகப் பிரிக் கலாம். குழந்தை பிறந்தது முதல் வயது முதிர்ந்து மரணத்தை ஏற்றுக் கொள்வது வரை இப்பாடல்கள் வாழ்க்கையில் இடம் பெறுகின்றன. தாய் தன் மழலையைப் பாலூட்டி சீராட்டித் தொட்டிலில் இட்டுத் தூங்கவைக்கும்போது பாடுகின்ற தாலாட் டுப் பாடல்கள், அக்குழந்தைகள் வளரும்போது தம் வயதொத்த பிற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுங்கால் பாடுகின்ற விளையாட்டுப் பாடல்கள், வாலிப பருவத்தில் ஒருவனும் ஒருத்தி யுமாய் உள்ளம் இணைந்து பாடுகின்ற காதற் பாடல்கள், குடும்ப வாழ்வில் பல்வேறு சூழல்களில் நிகழுகின்ற வழிபாட்டுப் பாடல் கள், விழாப்பாடல்கள், தொழில் செய்யும்போது பாடப்படும் தொழிற்பாடல்கள், அன்புக்குரிய ஒருவரை இழந்தபோத பாடு கின்ற ஒப்பாரிப்பாடல்கள் இவை அனைத்தும் இதன் பிரிவுக ளாகும்.

வேளாண்மையின் இடம்

இப்பாமரர் பாடல்கள் பெரும்பாலும் கிராமப்புற மக்கள் மத்தியிலேயே நிலவி வருகின்றன. அம்மக்களில் மிகுதியானவர் கள் வேளாண்மைத் தொழிலுடன் தொடர்பு கொண்டிருப்பவர்

கள். இப்பாமரர் பாடல்களில் வேளாண்மைச் செய்தியே முழு-மையான இடத்தைப் பெற்று விளங்குகிறது. குழந்தையைத் தூங்கவைக்க விரும்பும் தாய்

தங்கக் கலப்பை கொண்டு
தடம்பதியா மாடுகொண்டு
வெள்ளி விதையெடுத்து
விதைவிதைக்கப் பிறந்த கண்ணோ?
....
வாழை பழுக்குமின்னு
வனக்கிளிகள் வந்துகொய்ய
கிலுக்குப் பிரம்பெடுத்து
கிளிவிரட்ட வந்தகண்ணோ?

என, தன் தாலாட்டில்கூட பயிர்க்காப்பையே பாடலாகப் பாடி மகிழ்கின்றாள்.

பூச்செடிகள் சாகுபடி செய்வோர் பூக்களைப் பறிப்பதற்குச் சிறுமியர்களையும் சிறுவர்களையும் அமர்த்துவர். இச்சிறுவர் சிறுமியர் தமது விளையாட்டு நேரங்களில் தங்கள் தொழிலைப் பற்றியே பின்வருமாறு பாடி ஆடி மகிழ்கின்றனர்.

எட்டிப்பறி பூவை
விட்டுவிடு அரும்பை
தாவிப்பறி பூவை
தள்ளிவிடு அரும்பை

நடவைப் பற்றிப் பாடுவதுபோல ஓர் இளைஞன் தன் காதலை தனது உள்ளம் கொள்ளை கொண்டவளிடம் வெளிப்-படுத்துகின்றான்.

நாலுமூலை வயலுக்குள்ளே
நாத்துநடும் கட்டப்புள்ளே
நாத்துநடும் கையாலே—என்னையும்
சேத்துநட்டாலாகாதா?

என்பது அவனது வேண்டுகோள். பலரும் நட்டுக் கொண்டிருக்-கின்ற வயலில் அனைவருக்கும் கேட்கும்படியாகப் பாடும் அவன் 'என்னையும்' என்ற சொல்லை மட்டும் பிறர் காதில் படாமல் அவளது காதில் மட்டும் படும்படிப் பாடுவான். இவ்வாறே தொழில் பாடல்கள், விழாப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்களிலும் கூட வேளாண்மைச் செய்திகளே முழு இடம் பெறுவதை அப்-பாடல்களைப் படிப்போர் தெள்ளிதின் உணரலாம்.

பிள்ளைப் பருவத்திலே

'குலவிச்சை கல்லாமலே பாகம் படும்' என்பது பண்டையோர் கருத்து. பரம்பரைத் தொழிலான வேளாண்மை பற்றிய ஆர்வம் இயல்பாகவே இருந்தாலும் பிள்ளைப் பருவத்திபலயே அதைத்தூண்டி வளர்க்கும் பொறுப்பு பெற்றோரையே சாருகிறது. அதனால்தான் தாலாட்டுகின்ற தாய்

பட்டுக்குடை பிடித்து
பயிர்பார்த்து வரவேணும்
முத்துக்குடை பிடித்து
முளைபார்த்து வரவேணும்

எனப்பாடுகின்றாள். எண்களைப்பற்றிய விளையாட்டுப் பாடலைக் கற்பிக்கின்றபோதே வேளாண் தொழிலையும் இணைத்துக் கொள்ளுகின்றனர்.

'ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரு பூ பூத்ததாம்
ரெண்டு குடம் தண்ணி ஊத்தி ரெண்டு பூ பூத்ததாம்'

என்று பாடும்போது ஒன்று, இரண்டு, மூன்று என எண்களை மட்டுமா இப்பாடல் கற்றுத்தருகிறது. பூஞ்செடிகளுகுத் தண்ணீர் ஊற்றவும் குழந்தைகளை மறைமுகமாகத் தூண்டுகிறதல்லவா?

கழனி திருத்தம்

பண்டை மனிதன் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு அலைந்து திரிந்து காடுகளில் இயற்கையாகக் கிடைத்த காயும், கனியும், கிழங்கும் உண்டுவாழ்ந்த நிலைமை மாறி மருதநிலத்தில் ஆற்றுச் சமவெளிகளில் பயிர்த்தொழிலை மேற்கொண்டபோது நிலையான வாழ்க்கை துவங்கியது. பயிர்த் தொழிலுக்காக நிலங்களை வயல்களாகத் திருத்த முற்பட்டான். காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கிய செயலை பண்டை இலக்கியங்களும் பகருகின்றன. இதனையே

'காடுகொன்று நாடாக்கி கற்களெல்லாம் உள்ளமுத்தி
நாடு பெற்று வாரார்கள் இராசமுடி அய்யாக்கள்'

என்று பாமரர் பாடல் எடுத்துரைக்கின்றது. முல்லை நிலத்திலும் குறிஞ்சி நிலத்திலும் நிலத்திருத்தம் செய்யும்போது உதவாத மரஞ்செடி கொடிகளை அவ்விடத்திலேயே எரித்துவிடுவதுண்டு.

காடுவெட்டி தீக் கொளுத்தி
மேடுபள்ளம் செப்பனிட்டு
தின்னத் தினை விதைத்து—வள்ளித்
தேமொழியைக் காவல் வைத்தார்

அதன் பின்னர் வரப்புகள் அமைத்து வயல்களாகப் பிரிக்கின்றனர். இவ்வாறு காட்டைத் திருத்தி கழனியாக மாற்றும் செயல் அச்சடித்தல் என்று வழங்குகின்றது.

அச்சடிக்கப் பொன் விளையும்
ஆதிச்சார் உன்னாடு

என்பதாக இச்செயல் குறிப்பிடப்படுகின்றது.

நிலத்திருத்தம் செய்யும்போது அந்த நிலத்தில் எவ்வகைப் பயிரைச் செய்யலாம் என்பதையும் கிராம மக்கள் தங்கள் அனுபவத்தால் அறிந்து வைத்திருந்தனர்.

நாணல் மேட்டைக் கொத்தி
நந்தவனம் வைத்தார்
புற்றுமேட்டைக் கொத்தி
பூஞ்செடிகள் வைத்தார்
கொல்லைமேட்டைக் கொத்தி
குடமல்லிகை வைத்தார்

என வரும் பாடல் மலர்ச் செடிகள் பயிரிட ஏற்ற நிலத்தை அம் மக்கள் தெரிவு செய்ததைச் சுட்டிக்காட்டுகிறது.

உழவு

வயல் அமைக்கப்பட்ட பின் மேற்கொள்ளப்படும் முதல் செயல் முறை உழவே ஆகும். பண்டு முதல் இன்று வரை தமிழ் நாட்டில் மாடுகளைக் கட்டி ஏர் பூட்டி உழவு செய்யும் முறையே பழக்கத்தில் இருந்துவருகிறது. ஏர்பூட்டச் செல்கின்றவர்கள் அதி காலையிலேயே மாடோட்டிச் சென்று தங்கள் வேலையைத் தொடங்கி விடுவார்கள். வெப்ப மண்டலத்தில் உள்ள தமிழகத்தில் சற்று பிந்திச்செல்வார்களானால் வெயிலேறி விடவும், மாடு களும் மனிதர்களும் அதனால் களைப்படைந்திடவும் ஏதுவாகும். சொக்கர் தரிசுழிகச் செல்வதை

வெள்ளிக் கலப்பை கொண்டு—சொக்கர்
விடிகாலம் ஏர்பூட்டி
தங்கக் கலப்பை கொண்டு—சொக்கர்
தரிகழுகப் போனாராம்

என்று கூறுகிறது பாடல்.

உழவினில் சேற்று உழவைக் காட்டிலும் தரிசு உழவில் கண்டு கொள்ள வேண்டிய தொழில் நுணுக்கம் ஒன்றை உழவர்கள் அறிந்து வைத்திருந்தனர். தரிசு உழவில் பதம் பார்த்து உழவு செய்ய வேண்டும். மிகவும் உடல் பருமன் கொண்ட கனத்த மாடுகளைப் பூட்டுவதைத் தவிர்க்க வேண்டும். ஏரை இழுத்து நடக்கின்ற மாடுகளின் தடம்-கால்சுவடுகள்-வயலில் பதியக் கூடாது என்பது அவர்கள் கொள்கை. அவ்வாறு பதிந்தால் அவ்விடத்தில் மண் இறுடவிட வாய்ப்பு ஏற்படும். தங்கக் கலப்பை கொண்டு தடம்பதியா மாடுகொண்டு' தரிசுழவு நடைபெற்ற உண்மை அறியலாம்.

தரிசு உழவுக்குப் புழுதி உழவு என்றும் சேற்று உழவுக்குத் தொளி உழவு என்றும் வேறு பெயர்கள் உள்ளன. புழுதி உழவில் பெரிய கட்டிகளை உடைப்பதற்கும் சேற்று உழவில் வயலின் மேற்பரப்பைச் சமப்படுத்தவும் 'பரம்படித்தல்' மேற்கொள்ளப் படும். இப்பரம்பு என்னும் கருவி மரத்தால் செய்யப்பட்டிருப்பதால் அது 'மரம்' என்றும் அழைக்கப்படுகிறது. இதனை

காக்காய் கதிரறுக்க
 கட்டெறும்பு சூடடிக்க
மாமன் பொலிதூற்ற
 மைத்துணமார் கோட்டைகட்ட
....
உள்ளான் உழவடிக்க
 ஊர்க்குருவி நாத்தரிக்க
நாரை மரமடிக்க
 நட்டுவாடி குட்டப்புள்ளே
....
சந்தனப் பரம்பை
 சாடுதாம் எருது

என தரும் பாடல் பகுதிகளால் அறியலாம்.

உழும் வயல்களின் வரப்பு ஓரங்களிலும் நான்கு மூலைகளிலும் ஏர் சென்று உழ முடியாது. எனவே அவ்விடங்களிலே ஆட்களே மண்வெட்டியால் வெட்டிக் கொத்திவிட வேண்டும். நெல் பயிரிடும் வயலில் இப்படிக் கொத்தும்போது வரப்பின் விளிம்பையும் சீவி எடுத்துவிட்டுப்பின் சேற்றை மண்வெட்டியில் எடுத்து வைத்துப் பூசிவிடுவர். இதனால் நீர்வடிதல் தடுக்கப்படும், இவ்வாறு வரப்பு வெட்டும் செயலும் அவர்தம் பாடல்களில் இடம் பெறுகின்றது.

மஞ்சனம் பூசியல்லோ
　　மதுரைப் பாதைபோற புள்ளே—உன்
மஞ்சனம் வாடைதட்டி
　　வரப்புவெட்டக் கூடலையே

உரமிடுதல்

நிலத்தில் இடப்படும் பயிர் தகுந்த விளைச்சலைத் தர வேண்டுமானால் அதற்கு உரம் இடவேண்டும். 'உரம் செய்வதை ஊரார் செய்யமாட்டார்' என்பது பழமொழி. தற்காலத்தில் அறிவியல் வளர்ச்சியின் காரணத்தால் இரசாயன உரங்கள் பெரிதும் பயன்பாட்டில் உள்ளன. எனினும் இயற்கை உரங்களான கால்நடைகளின் கழிவுப்பொருட்களும் தாவரங்களிலிருந்து கிடைக்கும் தழை உரமும் அன்று முதல் இன்று வரை பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இவை அங்கக உரங்கள் எனப் பெயர் பெறுபவை. இவற்றைப் பற்றிய குறிப்புக்களும் பாமரப் பாடல்களில் கிடைக்கப் பெறுகின்றன

ஆட்டான் தொழுத் திறந்து
　　ஆட்டெருவைக் கொண்டுவந்து
மாட்டான் தொழுத்திறந்து
　　மாட்டெருவைக் கொண்டுவந்து

பயன்படுத்தினர் கிராமத்து மக்கள். இத் தொழு உரங்கள் சேற்றுப்பயிர்களுக்கும் பயன்படுபவை.

சேற்று நடவுப் பயிர்களுக்குப் பெரிதும் பயன்படுபவை பசுந்தாளுரங்களாகும். காடுகளில் இயல்பாக வளரும் ஆவிரை, கொழுஞ்சி, மரங்களின் தழைகள் ஆகியவை இவ்வாறு பயன்படுத்தப்படுபவையாகும். இவற்றுள் கொழுஞ்சி பயறு வகையைச் சார்ந்தது எனவே வேர்முடிச்சுகள் கொண்டதாய், தழைச்சத்து மிக்கதாய், நன்மை தரும் நுண்ணுயிர்கள் பெற்றதாய்ச் சிறந்து விளங்குகிறது. ஒருபோக நெல் வயல்களில் இதன் விதையை அறுவடையின்போது விதைத்து விடுதல் உண்டு. இது அந்த ஈரத்திலேயே வளர்ந்துவர அதன் வேர்முடிச்சுகளில் உள்ள நுண்ணுயிர்கள் காற்றிலுள்ள காலகத்தை எடுத்துத் தழையுரமாக நிலத்தில் நிலைப்படுத்துகின்றன,

இவ்வறிவியல் உண்மை பாமரர்களுக்குத் தெரியாத போதிலும் அனுபவத்தால் கொழுஞ்சியைத் தேடிப்பிடித்து உரமாக இடுகின்றார்கள்.

கொழுஞ்சிக் குழை புடுங்கி
கொழுத்த வண்டிப் பாரமேத்தி
கொழுஞ்சிக் குழை வாடினாலும்
கொழுந்தன் முகம் வாடிராதோ

என வரும் பாடல் அவ்வுண்மையை உரைக்கக் காணலாம்.

விதையும் விதைப்பும்

பயிர்த் தொழிலில் விதையே முதன்மையான இடுமுதல். நல்ல முளைப்புத்திறன் உள்ள, கலப்பற்ற, நோய்த் தாக்குதல் இல்லாத, தரமான கன்றுகள் அல்லது நாற்றுக்கள் தரவல்ல விதையே நல்ல விதை எனலாம். விதைக்காகப் பொறுக்கி எடுக்கப்படும் விதையைப் பொறுக்கு விதை என்பார்கள் பண்டைய மக்கள். இருக்கின்ற தானியங்களில் பருமனான, பொறுக்கி எடுக்கப்பட்ட விதைகளையே பயன்படுத்தினர் என்பதை

'முத்து விதை பாவி
பவளச்சம்பா நாற்று நட்டு'

என்ற பாடலால் அறியலாம். இங்கு முத்துவிதை எனப்படுவது முத்துப்போன்ற பொறுக்கு விதை என்பது கருத்து.

சில பயிர்கள் நாற்றுவிட்டு நடப்படும். வேறு சில பயிர்கள் நேரடி விதைப்பாகப் பயிரிடப்படும். நேரடி விதைப்பில் விதை சீராக விழ, எள், கீரை முதலானவற்றை விதைக்கும்போது மணலைக் கலந்து விதைப்பதை இன்றும் காணலாம். சிறந்த விதைப்பு முறையை

'பிடித்து விதை பாவி
பெருங் கடலின் தீர்த்தம் வந்து
எங்கும் விதை பாவி
ஏழு கடல் தீர்த்தம் வந்து'

என்பதாக ஒரு பாடற் பகுதி குறிப்பிடுகிறது.

நடவு

பயிர்களுக்கு ஏற்ப உரிய இடைவெளியைத் தவறாமல் கடைப்பிடிப்பது உயர் விளைச்சல் காண்பதற்கு மிகவும் இன்றியமையாததாகும். கற்றறிந்த அறிஞர்கள் சென்டிமீட்டர், மீட்டர் என்று இடைவெளி பற்றிக் கூறினாலும் பாமரர்கள் விறற்கிடை, பிடி, சாண், முழம், பாகம் என்றே பெரும்பாலும்

பேசிவருகின்றனர். நடவுப் பெண் ஒருத்தி தான் நெல்நாற்றை நட்டு வைத்த இடைவெளியை அவளே கூறுகின்றாள்:

ஒரு சாணுக்கு ஒரு நாத்தா
ஓடி ஓடி நட்டோமையா
முழங்கால் வலி எடுக்க
மூன்று குழி முடித்தோமையா

என்பது அவளது வாய்மொழி. ஒரு சாண் என்பது ஏறத்தாழ எட்டு அங்குலம் இடைவெளி இதனுடன் ஓரளவு பொருந்தி வரு- வது குறிப்பிடத்தக்கது.

நடவு முதல் 'அலகு' என்று நாட்டுப்புறப் பாடல்களில் குறிக்கப்படுகின்றது.

'நிறுத்தின திரு அலகு நின்று பயிர் ஏற வேணும்
சாத்தின திரு அலகு சாய்ந்து பயிர் ஏற வேணும்'

என வரும் பகுதி அதற்குச் சான்றாகும். நடவு கலந்து–அதிக இடைவெளியில்-நடப்பட்டால் விளைச்சல் தேறாது. எனவே உழவர்கள் நடவு வேளையில் மிகக் கவனமாக இருந்து அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இதனை,

நாலுமூலை வயலுக்குள்ளே
நாத்துநடும் குட்டப் பொண்ணே
நானும் கொஞ்சம் ஏழையடி
நடவக் கொஞ்சம் செறுத்துப்போடு

என்ற பாடல் குறிப்பிடுகின்றது. 'செறுத்துப் போடு' என்பது நெருக்கி நடு என்று பொருள்படும். சரியான இடைவெளி விட்டு நடவு செய்வதற்கு 'வகையான நடவு' என்ற தொடரும் வழங்கு கின்றது.

களைபறித்தலும் பயிர்க்காப்பும்

பயிர்களில் முளைத்துவரும் களைகளை வளரவிட்டால் விளைச்சல் குறைகின்றது. பொருள் இழப்பும் நேருகின்றது. ஆத- லின் முளைக்கின்ற போதே களையைக் களைந்து விடுதல் விரும்- பத்தக்க செயலாகும். நெற்கழனியில் எப்போது களைகளைப் பிடுங்க வேண்டும் என்பதை

மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையும் கடைசியர்கள்

என்ற பாடலால் அறியலாம்.

சேற்றில் நட்ட நாற்று-நடுமுதல்-நன்கு வேர்பிடித்த பின்-னரே வயலில் கால்வைத்துக் களைகளைப் பிடுங்கமுடியும். அதற்கு முன்பே வயலில் இறங்குவது நல்லதல்ல. நடுமுதலின் தாள் ஒன்றிரண்டு சிறிதாக வந்து பின்னர் வருபவை அகன்று விரிந்து வரும் காலமே களைபிடுங்கத் தொடங்கவேண்டிய காலமாகும். பருத்தி பயிர் செய்த கரிசல் காட்டிலும் கத்தரித் தோட்டத்திலும் களைக்கொத்துக் கொண்டு களை வெட்டிய செய்திகளும் இடம் பெறுகின்றன. ஏன், தென்னை மரங்களை நட்டவர்கள் கூட 'இடைக்கிடையே களை எடுத்து இடைவிடாமல் பார்ப்பார்-களாம்.

பயிர்களை ஆடுமாடுகள் பறவை இனங்கள் பூச்சி இனங்-கள் ஆகியவற்றிடமிருந்து காப்பது இன்றியமையாதது. இப்-பயிர்க்காப்பை

குருவிகளும் சிறுவிட்டியும்
    கதிருமேலே கண்ணுவைக்கும்
காட்டெலியும் வீட்டெலியும்
    கதிரைப் பொந்தில் கொண்டு சேர்க்கும்
பச்சைக்கிளியும் வெட்டுக்கிளியும்
    பச்சைநெல்லைப் பதமாத்தின்னும்

என ஒரு பாடல் கூறுகிறது. அன்றைய மக்களிடையே பயிர்க்-காப்பில் ஏற்பட்டிருந்த ஆர்வம்தான் தற்காலத்தில் பூச்சி மருந்-துகள் தெளிக்கும் முறையைப் பின்பற்றத் தூண்டுகோலாயிற்று எனலாம்.

அறுவடையும் கதிரடிப்பும்

தமிழகத்தில் அன்றும் இன்றும் கருக்கரிவாளால் அறு வடை செய்து கட்டுக்கட்டாகச் சுமந்து கொண்டு வந்து களத்து மேட்டில் சேர்ப்பார்கள். அக்கதிரை அரி அரியாக எடுத்து அடிப்பாகத்தைக் கயிற்றின் துணையால் இறுகப் பிடித்துக்-கொண்டு சுழற்றி அடிப்பார்கள். அப்போது நெல்மணிகள் தரையில் உதிரும். இவ்வாறு அடித்த கதிரை உடனேயே பிணையல் கட்டி மேலும் துவைப்பதுண்டு. பிணையல் கட்ட தீவிர அறுவடை சமயத்தில் மாடுகள் கிடைப்பது அரிது. ஆகையால்

களத்துக்குள்ளே காலைவைத்து
    கிழட்டுமாடு மிதிக்குதையா
பால்கொடுக்கிற பசுவுங்கூட
    பையப்பைய மிதிக்குதையா

பல்லுப்போடாத காளைக்கன்றும்
பால்மறந்த கிடாரிக்கன்றும்
பறந்துபறந்து மிதிக்குதையா
பாய்ந்துபாய்ந்து மிதிக்குதையா

இவ்வாறு பிணையலடிக்கப்பட்டதை 'வட்டம் உதறவந்தார் உன் மாமன்' என்று பெருமை பேசுகிறாள் ஒரு தாய். தமிழ் நாட்டின் வளத்தையும் போரடிக்கும் அழகையும்

ஆனைகட்டும் தாளும்
வானைமுட்டும் போரும்
மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல் என்று
ஆனைகட்டிப் போரடிக்கும்
அழகான தென்மதுரை

எனவரும் பாடல் பகுதி படம்பிடித்துக் காட்டுகிறது.

கால்நடை

உழவுத்தொழில் செய்வோர்க்கு உறுதுணையாய் விளங்குவன கால்நடைகள். கிராமங்களில் ஆடுமாடுகள் வளர்க்கப்படாத உழவர் வீடுகளையே காண்பது அரிது. குடும்பத்தில் உள்ள ஒருபெண்ணைத் திருமணம் செய்துகொடுத்தால் அவளுக்குச் சீதனமாக பசுவையும் ஆடுகளையும் கொடுக்கும் வழக்கம் இன்றும் சில இனத்தாரிடையே வழக்கத்தில் உள்ளது.

'பட்டி நிறைஞ்சிருக்கும்
பால்மாடு சீதனம்
ஏரி நிறைஞ்சிருக்கும்
எருமைகள் சீதனம்
குட்டை நிறைஞ்சிருக்கும்
குலியாடு சீதனம்'

பெற்றதால் கால்நடைகளை எவ்வளவு சிறந்த செல்வமாக மக்கள் கருதி வந்தனர் என்பதை அறிய வைக்கிறது.

இக்கால்நடைகளுக்கு நல்ல சத்துணவாகிய பசும்புல்லும் பருத்தி விதையும் கொடுத்து வந்தால்தான் அதிக அளவில் பால் வளம் சுரக்கும் என்பதை அறிந்து மக்கள் பருத்தி விதையை நன்கு ஊற வைத்து ஆட்டுக்கல்லில் இட்டு அரைத்துக் கொடுத்தனர். 'நாடன் பருத்திக்கொட்டை நானாட்ட முடியலையே' என வருந்துகிறாள் ஒரு மருமகப் பெண்.

பளபளப்பா வளரும் புல்லு- கண்ணே நம்ம
பசுமாடெல்லாம் தின்னும் புல்லு
கருகருன்னு வளரும் புல்லு- கண்ணே நம்ம
காளைமாடு தின்னும் புல்லு

என தங்கள் வீட்டுக் கால்நடைகள் மேயும் மேய்ச்சல் நிலம் புல்லின் பெருமையைப் பாடுகிறாள் ஒரு தாய். இவ்வாறு சத்துள்ள உணவைப் பசுக்களுக்கு இட்டு வந்தால் அவை எந்த அளவில் பால் அளிக்கும் என்பதைக்

'குடம் கொண்டு பால்கறக்கும் கொற்றவனார் பேரனோ
தவலை கொண்டு பால்கறக்கும் தருமருட பேரனோ'

என்னும் பாடல் பகுதி உணர்த்துகின்றது.

சிற்றூர்களில் கால்நடைகளை வளர்த்து பால் பொருட்களை அருகிலுள்ள பட்டணங்களுக்கு எடுத்துச் சென்று விற்று வரும் தொழிலும் சிலருக்கு வாழ்வை அளித்தது. 'செம்பவளச் சிற்றிடைச்சி தென் மதுரை மோர் கொண்டு வாராளாம் சிற்றிடைச்சி மதுரைப் பெருந்தெருவே.'

உழவர் சமுதாயம்

வேளாண்மைத் தொழில் செய்பவர்களில் சிறிய நிலஉடைமையாளரும் இவ்விரு வகையிலும் சேராமல் கூலிக்கு உழவும் அதைச் சார்ந்த தொழிலும் செய்பவர்களும் தொன்று தொட்டே இருந்து வருகின்றனர். விவசாயத் தொழிலாளர்களாக வாழ்பவர்களின் வாழ்க்கைத்தரம் தாழ் நிலையிலே இருந்து வந்துள்ளது. 'தண்ணீர் கறுக்கும் வரை, தவளைச் சத்தம் கேட்கும் வரை, புள்ளை அழும் வரை' வேலை செய்துவிட்டு அந்தப் புண்ணியரிடம் வேலை விடச்சொல்லி வீடுவந்து சேரும்வரை அவர்கள் படும்பாடு சொல்லும் தரம் அன்று. சேற்றுக்குள் நின்று செல்ல முகம் வாடி முட்டியோடு முட்டி ஒட்டி முகக்களையும் மாறிப் போவதுண்டு.

இம்மக்கள் தானியங்களையே கூலியாகப் பெறுகின்ற பழக்கம் நடையில் உள்ளதால் பண்பு இல்லாத முதலாளிகள் அரைகுறை நாழியால் அளந்து கொடுப்பதுமுண்டு. அதுபோன்ற சமயங்களில் அந்த வயிற்றிலடிக்கும் கொடுமையை வாய் விட்டே சொல்லிவிடுகின்றாள் ஒரு பெண்.

முக்காப்படி கேப்பைக்காக
முந்திருந்து வாடுதனே
ஐயா முதலாளி—அவங்க
அளக்கறது பொட்டநாழி

பொட்டை நாழி என்பது அளவு சரியாக அமையாத ஒரு முகத்தல் அளவு கருவி.

எல்லா நிலச்சுவான்களுமே அப்படி இருப்பதில்லை. சிலர் சீரிய பண்பு கொண்டவர்களாய் இருப்பதும் உண்டு. அவர்களையும் இவ் ஏழைத் தொழிலாளர்கள் வாயாரப் புகழ மறப்பதில்லை. 'காசாப்படியளந்தால் கனநேரம் ஆகுமென்றும், நெல்லாப் படி அளந்தால் நீண்டநேரம் ஆகுமென்றும், அரிசியாப் படி அளந்தால் ஆக்க நேரம் ஆகும் என்றும், சோறாகவே படியளக்கும் சொக்கத் தங்கக் குணம் படைத்தவர்களும்' பாடலில் இடம் பெறுகிறார்கள்.

தேர் வேந்தர்கள் பிற நாட்டு மன்னரை வென்று தாம் கைப்பற்றிய செல்வங்களை போர்க்களத்திலேயே பாணர்க்கும் பொருநர்க்கும் வாரி வழங்கும் வள்ளல் திறனைவிட, ஏர் வேந்தர் தம்முடைய பண்ணை நிலத்தில் தாம் விளைவித்த நெல்லைக் களத்துமேட்டில் ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மை போற்றுதற்குரியது

தங்க வள்ளம் கையில் எடுத்து
தாசருக்குப் பிச்சையிடு
பொன்னு வள்ளம் கையில் எடுத்து
பூசாரிக்குப் பிச்சையிடு
முச்சியிலே நெல்லெடுத்து
முடவனுக்குப் பிச்சையிடு
மச்சிலேயும் குச்சிலேயும்
மிச்ச நெல்லைக் கொட்டிவை

என 'தனக்குப் போகத்தான் தானம்' என்கின்ற கருத்தை மாற்றி 'தானம் போகத்தான் தனக்கு' என்ற எண்ணம் கொண்ட உழவனை நாம் காண முடிகிறது.

சமுதாயத்திலேயும் தீய எண்ணம் படைத்தவர்கள், பிறரது அல்லல் நிலையைப் பயனபடுத்தி தனக்கு ஆக்கம் தேடிக்கொள்ள விரும்புவார்கள். போர்க்காலத்தில் பொருட்கள் கிடைப்பது அரிதாவதும் அதைச் சாக்காக வைத்துக்கொண்டு சுயநலம் கொண்டவர்கள் பொருட்களைப் பதுக்குவதும் நாடறிந்த உண்மை, இதனை

கொள்ளை யுத்தப் பஞ்சத்தினால்
குரங்காகிப் போனேனெண்டா
நெல்லைப் பதுக்கிவைத்து
நீட்டுரம் பண்ணிடுவோன்
கொல்லைவழி போகாகல்
குடிசைவழி வந்தாயோ?

என ஒரு தாய் பாடுகின்றாள்.

இத்தகையோர் மிகுதியாக உள்ள இச் சமுதாயத்தில் ஏழை எளிய மக்கள், பாமரத் தொழிலாளிகட்கு வரப்பே தலையாணியாகவும் விரிக்கின்ற வைக்கோலே பஞ்சு மெத்தையாகவும் உள்ளது. இந்த நிலையே நீடிக்குமானால் தனது வாழ்வு எப்போது முன்னேறும் என ஏக்கப் பெருமூச்சு விடுகின்றான் உழவன். அதுவே

'இந்த நடை நடந்து எப்போ கரைசேறுவதோ'

எனப் பாடலாக மலர்ந்தது. அவர்கள் எப்போது கரை சேருவார்கள்? யார் சேர்ப்பார்கள்? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

பயன் பட்ட நூல்கள்

1. ஏட்டில் எழுதாக் கவிதைகள்-செ. அன்னகாமு
2. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்-நா. வனமாமலை
3. மலை அருவி- கி. வ. சகந்நாதன்
4. வாய்மொழி இலக்கியம்-அ. மு. பரமசிவானந்தம்.

குறிப்பு: 'பழமொழிகள், நாட்டுப்புறப் பாடல்கள் ஆகிய கட்டுரைகள் பழமொழிகளில் வேளாண்மை, நாட்டுப்புறப்பாடல்களில் வேளாண்மை' என்னும் ஆய்விலிருந்து உருப்பெற்றவை. ஆய்வு நடத்தியவர்கள் திரு. இல. செ. கந்தசாமி, திரு. மு. அப்துர் ரகீம்.

ஆசிரியரின் நூல்கள்

வேளாண்மை இலக்கியம்

1. திருக்குறளில் வேளாண்மை
2. வேளாண்மையும் பண்பாடும்
3. இலக்கியத்தில் வேளாண்மை
4. சங்க இலக்கியத்தில் வேளாண்மை
5. பழமொழிகளில் வேளாண்மை
6. நாட்டுப்புற இலக்கியத்தில் வேளாண்மை
7. இலக்கியத்தில் நீர்வள நிருவாகம்
8. இந்த மண்ணின் மக்கள்
9. காதல்வாழ்வில் கால்நடைகள்
10. வேளாண்மைப் பழமொழிகள்
11. இலக்கியத்தில் கால்நடைவளம்
12. உழவர்கள் பேச்சுமொழி
13. உழுகின்ற காலத்தில்...
14. மனையியல் நோக்கில் குடும்பவிளக்கு
15. அன்றும் இன்றும் இனியும் (வேளாண்மை)
16. கால்நடைவளம் (அன்றும் இன்றும் இனியும்)
17. வேளாண்மைப் பொறியியல் (,,)
18. கிராமங்களை நோக்கி...

பொது இலக்கியம்

19. குறிக்கோளை நோக்கி...
20. காற்றில் கனிந்தவை
21. இதுவோ நாகரிகம்
22. வளர்பிறைகள்
23. மறைவாக நமக்குள்ளே
24. புதுக்கவிதை-ஒருபார்வை
25. ஓ... அன்றில் பறவைகளே!
26. சித்திரைக் கனி
27. பாதை மாறிய பயணங்கள்